கார் நாற்பது

சு. அ. இரத்தினசபாபதி பிள்ளை

பொருளடக்கம்.

பக்கம்.

மேற்கோள்நூற்பெயர்களின் முதற்குறிப்புவிளக்கம் ரு

பாயிரம்—முச்சங்கம் :—குமரிகண்டம் - குமரிநாடு - சங்கங்களின் காலம்-சங்கமிருந்ததற்கு ஆதாரம் சு-கO

பதினெண்கீழ்க்கணக்கு :—ஐந்திணை ஐந்து நூல்-கைந்நிலை-கீழ்க்கணக்கினிலக்கணமும் சிறப்பும் க-கO

அகப்பொருளியல் :—அகம், புறம் வேற்றுமை-அகத்திணை நூல்களின் சிறப்பு-காதல், காமம் வேறுபாடு-ஐந்திணை-முதல் கரு உரிப் பொருள்கள்-அவற்றின் அட்டவணை-திணைமயக்கம்-கைக்கிளை-பெருந்திணை ... ... கO-உஉ

களவொழுக்கம் :—களவின்வரலாறு - மன்றலெட்டு இயற்கைமணம் - இடந்தலைப்பாடு - பாங்கற் கூட்டம்-பாங்கியிற் கூட்டம் - இரவுக்குறிக்கண் எதிர்ப்பாடு-பகற்குறிக்கண் எதிர்ப்பாடு-களவொழுக்கத்தில் வரைதல் ... ... உஉ-உக

கற்பொழுக்கம்:—கற்பின் வரலாறு-பிரிவின் இலக்கணம்-பரத்தையர் வேறுபாடு-ஊடலின் இலக்கணம்-மெய்ப்பாடு-உள்ளுறை யுவமம்-இறைச்சி-அவற்றின் வேற்றுமை ... ... உக-ஙங

கார் நாற்பது முல்லைத்திணை :—நூலுட் காணப்படும் முதல் கரு உரிப் பொருள்கள் ... ஙங-ஙஎ

கார் நாற்பது :—கதை விவரம் ... ... ஙஎ-சஉ

நூலின் அமைப்பும் ஆக்கியோன் புலமையும் :—நூலின் நாடக இயல்பு-செய்யுள்கள் வைக்கப்பட்ட அழகு-ஆசிரியரின் நுட்ப வினைத்திறன்-உவமைகள்-இயற்கை வருணனை ... சஉ-ருங

இந்நூலினால் அறியக்கிடக்கும் பண்டைநாள் வழக்கவொழுக்கச் சரித்திரக் குறிப்புகள் :— ருங-ருச

பா இலக்கணமும் நூலின் நடையும் :—வெண்பா இலக்கணம்-எதுகை மோனை முன்னோர் கவனியாமை - ஒரூஉ எதுகை - நடையழகு .. ருரு-சுO

இந்நூலுள் வழங்கிய அரிய இலக்கணக் குறிப்புகளும் சொற்களும் .. ... சுO-சுஉ

நூலாசிரியர் வரலாறு ... ... சுங-சுச

நூல்—துறை, மூலம், பதவுரை, விருத்தியுரை ... க-சச

செய்யுள் முதற் குறிப்பகராதி ... ... சரு

நன்றியுரை.

இந்நூல் அச்சாகுங்காலத்து அச்சுப்பிரதிமாதிரிகளைச் சலிப்பின்றிப் பேரன்புடன் ஏற்றுக்கொண்டு பிழையற அவற்றை நன்காராய்ந்த ஸ்ரீமான் தி. கனகசுந்தரம் பிள்ளை பீ.ஏ., அவர்களுடைய பேருதவி தமிழகத்தால் என்றும் பாராட்டற்குரியது.

திருத்தங்கள்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬	௧௰	பெயரையுடை	பெயரையுடைய
௮	௧௨	நிமிர்ப்பில்லா	நிமிர்பில்லா
௧௧	௨௯	மற்றொருவரும்	மற்றவர்
௨௪	௧௬	இதனுள்	இவற்றுள்
௨௮	௨௬	யாங்கற்கூட்டங்	பாங்கற்கூட்டங்
௩௪	௧௰	பொருள	பொருள்
௬௨	௨௪	சொல்லு	செல்லு
௭	௬	தமக்கின்றி	தனக்கின்றி
௯	௧௭	தளரின்	தளிரின்
௧௨	௫, ௧௯	வாராநிற்கின்றது	வாராநின்றது
,,	௧௨	மழையேறு	இடியேறு
,,	,,	மேகத்தின்	வானத்தின்
,,	௨௮	உறு	உரு
௨௰	௩௰	கவென	கவின
௨௫	௮	மொழியுமுடைய	மொழியிணையுமுடைய
௩௨	௧௨	ஒலியாநிற்கின்றன	ஒலியாநின்றன
௪௨	௮	முகு	முருகு

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்களின் முதற்குறிப்பு விளக்கம்.

அகம்-அகநானூறு.
அகப்பொரு. விள. சூ-நம்பி அகப்பொருள் விளக்கம், சூத்திரம்.
இறை. அகம்-இறையனார் அகப்பொருள்.
இறை. அகம். மா. கோ-ஷை மாறன் கோவை.
ஐங்குறு-ஐங்குறுநூறு.
ஐந். எழு-ஐந்திணை எழுபது.
ஐந். ஐம்-ஐந்திணை ஐம்பது.
கலி-கலித்தொகை.
கல்-கல்லாடம்.
களவழி-களவழி நாற்பது.
கார்-கார் நாற்பது.
குறள்-திருக்குறள்
குறிஞ்சி-குறிஞ்சிப்பாட்டு.
குறுந்-குறுந்தொகை.
கைந். முல்-கைந்நிலை, முல்லை.
கோவை-திருச்சிற்றம்பலக் கோவையார்.
திணை மா. நூற்-திணைமாலை நூற்றைம்பது.
திணை மொ. ஐம்-திணைமொழி ஐம்பது.
திவா. தொ-திவாகரம்தொகுதி.
திருமுருகு-திருமுருகாற்றுப் படை.
தேவா. திருஞா. திருமயி-தேவாரம், திருஞானசம்பந்தர், திருமயிலைப் பதிகம்.
தொல். எழுத்து-தொல்காப்பியம், எழுத்ததிகாரம்.
தொல். சொல்-ஷை சொல்லதிகாரம்.
தொல். பொருள்-தொல்காப்பியம், பொருளதிகாரம்.
தொல். அகம்-ஷை அகத்திணையியல்.
தொல். புறம்-ஷை புறத்திணையியல்.
தொல். களவி-ஷை களவியல்.
,, கற்பி-ஷை கற்பியல்.
,, செய்-ஷை செய்யுளியல்.
தொல். மரபு-ஷை மரபியல்.
நம்பி. அகம்-நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம்.
நற்-நற்றிணை.
நாலடி-நாலடியார்.
நான்மணி-நான்மணிக்கடிகை
பதிற்று-பதிற்றுப்பத்து.
பரிபா-பரிபாடல்.
புறத். பெரு. பொ. வி-புறத்திரட்டு, பெரும்பொருள் விளக்கம்.
புறம்-புறநானூறு.
புறம். வெ. மா-புறப்பொருள் வெண்பாமாலை.
பெ. பு-பெரிய புராணம்.
பெரும்பாண்-பெரும்பாணாற்றுப்படை.
மலைபடு-மலைபடுகடாம்.
முத்தொள்-முத்தொள்ளாயிரம்.
முருகு-திருமுருகாற்றுப் படை.
முல்லை-முல்லைப்பாட்டு.
மு. மொ. காஞ்சி-முதுமொழிக் காஞ்சி.

உ

கணபதி துணை.

பாயிரம்.

செந்தமிழ்த் தேவின் செழுமலர்த் தாளிணை
நந்தலைப் புனைதுதூஉம் நல்லொளி பெறவே.

"கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்றெடுங் கூட்டி மெய்கொளக்
கூறி யுணர்த்தல் துணைத்தோர்க் கியல்பே"

முச்சங்கம். *

பூவுலகம் இன்று நமக்கு எங்ஙனங் காணப்படுகின்றதோ அங்ஙனமே பல்லாயிர ஆண்டுகட்குப் பின்பு காணப்படாது. இன்று நிலமாயிருப்பது அன்று கடலாகவும், இன்று கடலாயிருப்பது அன்று நிலமாகவும் மாறியிருக்கும். இங்ஙனமே பல்லாயிர ஆண்டுகட்கு முன்பு இன்று நிலமாகக் காணப்படுவது அன்று கடலாகவும், இன்று கடலாகக் காணப்படுவது அன்று நிலமாகவுமிருந்தன. இந்தியா நாடு இன்று காணப்படுவது போல முன்பிருந்ததில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கே யிருக்கும் இந்துமகா சமுத்திரம் அன்று ஒரு பெரிய நாடாயிருந்தது. இப்பெரிய நிலப்பரப்புக்குக் குமரிகண்டம் என்று பெயரிட்டனர் பிற்காலத்தோர். இக் குமரிகண்டம் நான்கு பக்கத்திலும் நீராற் சூழப்பட்டிருந்தது. இது வடக்கே விந்தியமலை வரையிலும், கிழக்கே சாவகத் தீவு (Java) வரையிலும், தெற்கே தென் கடல் வரையிலும், மேற்கே மடகாஸ்கர் தீவு வரையிலும் விசாலித்திருந்தது. † இக்கண்டத்தில்தான் முதன்முதல் மக்

* இவ்விடயத்தைக் கடாவிடைகளான் ஆராய்ந்து எழுதிவைத்திருந்தும் பொருட் குறைபாட்டால் இப்பொழுது வெளியிடவில்லை. அவ்வாராய்ச்சியில் முடிவு கட்டிய சில விஷயங்களே ஈண்டுக் குறிக்கப்பட்டுள்ளன.

† Ernst Haeckel's History of Creation, Vol. I P. 361., II PP. 325, 326. The Pedigree of Man, PP. 73, 80, 81.

கள் தோன்றினார்களென்றும், பின்னர்ப் பல நாடுகளுக்கு அவர்கள் குடியேறினார்களென்றும் ஜர்மன் தேசத்துப் பிரபல பிராணதத்துவ சாஸ்திரியாகிய. எர்னஸ்ட் ஹெக்கல் என்பவர் 'பிரபஞ்சோற்பத்தி' 'மனிதன் வரலாறு' என்னும் நூல்களிற் கூறுகின்றார். குமரிகண்டத்தில் வசித்தவர்கள் செம்மைநிறமுடையவர்களா யிருந்தார்களென்பர் * 'மறைந்த குமரிகண்டம்' என்னும் நூலுடையார். அவர்கள் பேசிய பாஷை ஓரசைச் சொற்களாலாக்கப்பட் டிருந்ததென்ப. அப் பாஷையின் சிதைவே தற்கர்லத்துச் சீனர்களின் பாஷையென்ப. இக்கண்டத்திலிருந்த சில எரிமலைகள் பொங்கவே பூமி பிளவுபட்டுக் கடலி லமிழ்ந்துவிட்டது. குமரிகண்டம் ஒரு காலத்திலிருந்து அழிந்ததென்று பௌதிக சாஸ்திரிகள் பலருங் கூறுகின்றனர். எர்னஸ்ட் ஹெக்கல், வாலேஸ், ஹக்ஸ்லி, பார்கர், ஹாஸ்வெல், பிளான்ட் போர்ட், ஸ்காட் எலியட், சின்னட் முதலிய பிரபல பண்டிதர்கள் அஃதிருந்ததென்பதைப் பல தக்க காரணங்களால் நிலைநாட்டுகின்றனர். அக் குமரிகண்டம் அழிந்தது பல்லாயிர ஆண்டுகட்கு முன்பேயாகும்.

குமரிகண்டம் அழிவடைந்த பின்பு எஞ்சிநின்ற நிலப்பாகம் மூன்றில் குமரிநாடு ஒன்று. இக் குமரிநாடு தென்னிந்தியாவின் தொடர்ச்சியாயிருந்தது. இக்குமரிநாட்டுக்கு வடக்கே குமரியாறும் தெற்கே பஃறுளியாறும் ஓடிக்கொண்டிருந்தன. இக்குமரிநாடு நாற்பத்தொன்பது சிறுநாடுகளாகப் பகுக்கப்பட் டிருந்ததென்ப. இங்கு வாழ்ந்துவந்தவர்களே தமிழராவர். அவர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்கினர். அவர்களுடைய அரசர்களுக்குப் பாண்டியரென்றுபெயர். அவர்களுக்குத் தலைப்பட்டணமாயிருந்தது தென்மதுரை. அவ்வரசர்கள் புலவர்களை யாதரித்து வந்தனர். அப்புலவர் பல நூல்களை இயற்றினர். அவை எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் இன்னும் பலவுமென்ப. இப்புலவர் கூட்டத்தையே பிற்காலத்தோர் தலைச்சங்கம் என்றனர்.

---

* Lost Lemuria, By Scott Eliot, PP. 23, 30, 38.

இக்குமரிநாட்டுக்குக் கிழக்கே சுமார் கி. மு. 2387ம் ஆண்டில் ஒரு குழப்ப முண்டாகிக் கடல்பொங்கி அந்நாட்டின் கீழ்ப் பகுதியை யழித்துவிட்டது. தமிழகம் சிதையவே தமிழரில் ஒரு சிலர் கடல்கோளுக்கு அஞ்சி, வெவ்வேறு நாட்டிற்குக் குடியேறினர். மற்றையோர் குமரியாற்றிற்கு வடக்கே சென்று தென்னிந்தியாவில் தங்கினர். அக்காலத்து நேர்ந்த கடல் கோளினால் அப்போது வழங்கிவந்த நூல்கள் முதலிய யாவும் இறந்தனவாதலின், குமரிநாட்டை யாண்ட பாண்டியர்களின் எண்ணாவது, பெயராவது, அவர்களாண்ட கால அளவாவது இன்று நமக்குத் தெரியவில்லை.

குமரியாற்றிற்கும் தாம்பிரபருணிக்கும் இடையில் தங்கிய தமிழர்களுக்குத் தலைப்பட்டணமாயிருந்தது கபாடபுரம். அரசர்கள் முன்போலவே புலவர்களை யாதரித்து வந்தார்கள். இப் புலவர் கூட்டமே இடைச்சங்க மெனப்பட்டது. இக்காலத்தில் இந்தியாவின் வடநாட்டு ஆரியர்களுக்கும் தென்னாட்டுத் தமிழர்களுக்கும் தொடர்புண்டாயிற்று. அகத்தியர் தென்னாடு புகுந்து தமிழை வளம்படுத்தினர். அகத்தியம் என்னும் இலக்கண நூலை அவர் இயற்றி யருளினார். மற்றைய புலவர்களால் இயற்றப்பட்டவை கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலை யகவலும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூதபுராணமும் என்பன. ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்விடைச்சங்கத் திறுதியிற் றோன்றித் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றினார். அக்காலத்தே ஒரு கடல்கோள் உண்டாகிக் குமரிநாட்டை யழித்துவிட்டது. அஃதாவது தொல்காப்பியர் காலமாகிய கி. மு. 13-ம் நூற்றாண்டில் அரசுபுரிந்திருந்த முடத்திருமாறன் காலத்தே அது நிகழ்ந்தது. அக் கடல்கோளினால் தமிழ் நூல்கள் பல இறந்தன. தொல்காப்பியம் தவிர மற்றவை இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அவ் விடைச் சங்க காலத்தே விளங்கிய புலவர் எத்துணையரென்பதும், அரசர் எத்துணையரென்பதும் இப்போது தெரியவில்லை. புலவர் ஒரு சிலர் பெயரும், அரசர் சிற்சிலர் பெயருமே இன்று நமக்குப் புலப்படுகின்றன.

அக் கடல்கோளுக்குத் தப்பி உய்ந்த முடத்திருமாறனும், தொல்காப்பியர், பனம்பாரனார் முதலிய புலவர்களும், மற்றவர்களும் சிறிது வடக்கே போய்த் தங்கினார்கள். அக்காலத்தில் பாண்டியர்களுக்குத் தலைப்பட்டணமா யிருந்தது மணலூர். அக்காலத்தே தான் அஃதாவது சுமார் கி. மு. 12-ம் நூற்றாண்டில் பாரதப்போர் நடைபெற்றது. தமிழ் மன்னர் ஆரியமக்களுக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். அதனால் தமிழர்க்கும் ஆரியர்க்கும் மிக்க நட்பு உண்டாயிற்று. பாண்டிய அரசர் கொஞ்சக்காலம் மணலூரில் தங்கியிருந்து பின்னாக் கூடலில் போய்த் தங்கினர். இவ்வட மதுரையில்தான் புலவர்கள் ஒருங்கு கூடித் தமிழை வளம்படுத்தி வந்தனர். அப்புலவர் கூட்டமே பிற்காலத்தில் கடைச்சங்க மெனப்பட்டது. அக்காலத்து விளங்கிய புலவர்களிற் சிறந்தோர் இறையனார், திருவள்ளுவர், நக்கீரர் ஆவர். இறையனார் அகப்பொருளையும், திருவள்ளுவர் திருக்குறளையும், நக்கீரர் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை முதலிய பாட்டுக்களையும் இயற்றி யருளினர். இவர்களை யன்றிக் கபிலர், பரணர், ஆசிரியர் நல்லந்துவனார், சீத்தலைச் சாத்தனார், மாமூலனார் முதலிய புலவர்களும் விளங்கியிருந்தார்கள். அவர்களாற் பாடப்பட்டன அகநானூறும், புறநானூறும், குறுந்தொகையும், நற்றிணையும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், கலித்தொகையும், பரிபாடலும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்கும், கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன. இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பது தலைமுறை நடைபெற்று வந்தது. இச்சங்க காலத்திடையிலே வேள்புலம் (Bhilmal) என்னும் வட நாட்டிலிருந்து வேளிரும், புரோசு (Broach) என்னும் நாட்டிலிருந்து புரோசரும், அருவளிமலை நாட்டிலிருந்து அருவாளரும் தமிழகத்தே குடிபுகுந்தனர். வேளாண்மாந்தர் அவ்வாரிய மக்களை அன்புடன் வரவேற்று அவர்கள் தங்கியிருக்க நாடுகளையும், கோட்டங்களையும் கொடுத்தனர். மேனாட்டிலிருந்து யவனர், உரோமர் முதலியோரும், கீழ்நாட்டிலிருந்து சீனர்,

சாவகர் முதலியோரும் அக்காலத்தே தமிழகத்திற்குவந்து தங்கி வியாபாரஞ் செய்து வந்தார்கள். தமிழர்களும் கப்பல் யாத்திரை செய்து அயல் நாடுகளுடன் வர்த்தகஞ் செய்து வந்தார்கள். தமிழர் கைத்தொழிலிலும், கல்வியிலும், நாகரிகத்திலும் தலை சிறந்து விளங்கினர். இச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் உக்கிரப்பெருவழுதி அரசன் காலத்தில் பஞ்சத்தால் அழிந்தது.

முச்சங்கங்களைப்பற்றிய வரலாறு களவியல் உரையிற்கூறப்பட்டிருந்தும் தலையிடைச் சங்கங்களின் வரலாறு பெரும்பான்மையும் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒவ்வாமலிருப்பதனால் சிலர் முச்சங்கங்கள் இருந்தனவோ இல்லையோ வென்று ஐயுறுகின்றனர். இக்காலத்துச் சங்கம்போல் அக்காலத்தே ஒன்றில்லாவிடினும், அரசர் புலவர் பலரை யாதரித்து வந்தாரென்பது திண்ணம். அப்புலவர் கூட்டமே சங்கமெனப்பட்டது. [1]"பல்சாலை முதுகுடுமி-னல்வேள்வித் துறைபோகிய-தொல்லாணை நல்லாசிரியர் - புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பி னிலந்தரு திருவி னெடியோன் போல", [2]"வல்லவர் - செதுமொழி சீத்த செவிசெறு வாக - முதுமொழி நீராப் புலன்நா வுழவர் - புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர", [3]"தமிழ் வையைத் தண்ணம்புனல்" என்று பண்டை நூல்களிலும், [4]"உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்", [5]"திருவாலவாயிலெம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கமிருந்த தென்னூல்" [6]"சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்று பிற்றை நூல்களிலும் தமிழாராய்ந்தமை கூறப்படுதலால் அரசர் புலவரை யாதரித்து வந்த மெய்ம்மை நன்கு பெறப்படுகின்றது.

கடைச்சங்கமருவிய முக்கியமான நூல்களை ஆன்றோர் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என மூவகைப்படுத்தினர். அப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று இக் கார்நாற்பது.

---

1. மதுரைக் காஞ்சி. ௭௬௧.
2. கலித்தொகை. ௬௮.
3. பரிபாடல். ௬.
4. திருக்கோவை. ௨௦.
5. பெ. பு. மூர்த்தி நாயனார். ௭.
6. நல்வழி, காப்பு.

பதினெண்கீழ்க்கணக்கு.

கடைச்சங்கமருவிய நூல்களை ஆன்றோர்கள் மூவகைப் படுத்தினர். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்பன. அவற்றுள் எட்டுத்தொகை யாவன,

> "நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தா ரேத்துங் கலியே யகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை."

என்னும் பண்டைச் செய்யுளால் அறியப்படும் நற்றிணைநானூறு, குறுந்தொகைநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றுள் பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருளையும் ஒழிந்தவை அகப்பொருளையும் நுதலும்.

இனிப் பத்துப்பாட்டாவன,

> "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து."

என்னும் பண்டைச் செய்யுளான் அறியப்படும் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றுள் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை அகப்பொருளையும், ஒழிந்தவை புறப்பொருளையும் நுதலும்.

இனிப் பதினெண்கீழ்க்கணக்காவன,

> "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
> மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்னும் பண்டைச்

செய்யுளால் அறியப்படும் நாலடி, நான்மணிக்கடிகை, கார் நாற்பது, களவழிநாற்பது, இன்னாநாற்பது, இனியவைநாற் பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம் பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமாலை, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன. இவற்றுள் கார்நாற் பது, ஐந்திணை, திருக்குறட் காமத்துப்பால் அகப்பொருளை யும், ஏனையவை புறப்பொருளையும் நுதலும்.

ஈண்டு எடுத்துக்காட்டிய கீழ்க்கணக்கு நூல்களுள் பதி னேழு மட்டுமே இதுகாறுங் கிடைத்திருக்கின்றமையின் கீழ்க் கணக்குப் பதினேழென்றே கொள்ள லமையாதோவெனின் அமையாது. என்னை ? மேலே தொகை எட்டு, பாட்டுப் பத்து என்று வரையறுத்ததுபோல், கீழ்க்கணக்குப் பதினெட் டென்று வரையறுத்திலரேனும், தொல். பொருள். செ. உங்கு கூ. உரையில், 'அஃதாவது பதினெண்கீழ்க்கணக்கென வுணர்க' என்று பேராசிரியர்கூறியிருத்தலான் அவரும், மற்றைய ஆன் றோர்களும் தொன்று தொட்டுக் கீழ்க்கணக்கைப் பதினெட் டென்றே கொண்டிருத்தலின், அவைபதினேழென்றாவது பதி னெட்டுக்கு மேற்பட்டனவென்றாவது கோடல் ஆன்றோர்வழக் கொடு முரணுமென்பது. அற்றாயின் அப்பதினெட்டாம் நூல் தான் யாதோவெனின் ஐந்திணை நூல்களுள் ஒன்றேயாகும். அற்றன்று, 'நானாற்பது' என்ற தொடரிலுள்ள 'நால்' என் னுஞ்சொல்லை ஐந்திணை யென்பதுடன் சேர்த்து, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணை யொழுக் கங்களைக் கூறும் நான்கு நூல்களெனப் பொருள்கொண்டு, ஆன்றோர் உரையில் மேற்கோளாகக் காட்டியிருப்பதும், கீழ்க் கணக்குச் செய்யுளீற்றடியிற் கூறியிருப்பதுமாகிய 'கைந்நிலை' யைப் பதினெட்டாம் நூலாகக்கொள்ள லமையுமெனின், அது பொருந்தாது. என்னை ? ஐந்திணை யென்பது 'திணை' யென்ற சொல்வரப்பெற்ற பெயரையுடைய ஐந்து நூல்களாகும். 'நாற் பது' என்ற சொல் வரப்பெற்ற பெயரையுடைய நான்கு நூல்களை 'நானாற்பது' எங்ஙனங் குறித்ததோ அங்ஙனமே

'ஐந்திணை' என்பது திணை என்ற சொல்வரப்பெற்ற பெயரை யுடைய ஐந்து நூல்களைக் குறித்ததாகும். ஐந்து திணையையே அச்சொல் குறிக்குமெனின், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்களைச் சுட்டும் பண்டைச் செய்யுள்கள் மூன்றும் நூல்களின் பெயர்களைக் குறிக்க எழுந்தனவே யன்றி அவை கூறும் பொருட் பாகுபாட்டினைக் கூற எழுந்தனவல்ல. அங்ஙனங் கொள்ளினும் 'கைந்நிலை'யும் ஐந் திணை யொழுக்கங்களைக் கூறும் ஒரு நூலாயினமையின் அது வும் அதன்கண் அடங்கவேண்டியிருக்க அதனை வேறு பிரித்துக் கூறியதற்குக் காரணம் மற்றென்னை யென்று வினவுவார்க்கு விடையிறுக்கலாகாமையான் அது பொருளன்றென்று விடுக்க. 'ஐந்திணை'க்கும் 'நால்' என்றசொல்லைச் சேர்க்கவேண்டு மென்பது ஆசிரியருக்குக் கருத்தாயிருப்பின், நாலடி, நான் மணி, நானூற்பது, என்று ஒரே அடியில் மூன்றிடத்தும் 'நால் என்ற ஒரே சொல்லை வழங்கிப் பொருளைத் தெளிய வைத் ததுபோல் அதையும் அங்ஙனமே தெளியவைத்திருப்பார். சுருங்கச் சொல்லலென்னும் அழகை அவர் கருதினரெனின், 'நால்' என்ற ஒரு சொல்லையே அடுத்தடுத்து மும்முறை கூறி யிருத்தலான் அங்ஙனங் கருதினரென்பதற்கிடனின்று. 'ஐந் திணை'யை நான்கு நூல்களாக்கிக் கைந்நிலையைக் கீழ்க் கணக்கிற் சேர்க்கவேண்டுமென்று விரும்பியவர்களே நால் என்பதனை ஐந்திணையுடன் சேர்த்து நான்கு நூல்களென்று பொருள் செய்து, 'காஞ்சியுடன்' 'என்பவே' என்னுஞ் சொற்களின் ஆற்றலையும், செய்யுள் ஓசையின்பத்தையுஞ் சிறிதுங் கவனியாது, 'கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு' என்று பாடத்தையுந் திருத்திக்கொண்டார்கள். 'ஓடு' அல்லது 'உடன்' உருபின் பின்னர் ஈற்று நூலாகிய ஏலாதியைச் சேர்த்து 'என்பவே' என்னும் முற்றுச்சொற்கொடுத்து முடித்த பின்ன ரும் வேறு நூலை ஆசிரியர் கூறினரென்பது எங்ஙனம் பொருந் தும்? மற்று அவ்வீற்றடிக்குப் பொருள்தான் யாதோவெனின், மக்களுக்கு உறுதிபயக்கும் நீதிகளையே கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பான்மையுங் கூறுகின்றமையின் அவை மக்கள்கையில்

இன்றியமையாதிருத்தல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்துப் போலும். ஆகவே 'கையில் நிலைபெற்றிருத்தற்குரியனவாகிய கீழ்க்கணக்கு' என்று பொருள்படும் அவ்வடியை வரைந்திட்டனர். அல்லது அவ்வடி 'சிறிய வடிவமுடைய கீழ்க்கணக்கு நூல்களாகும்' என்றாவது 'ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் கீழ்க்கணக்கு நூல்களாகும்' என்றாவது பொருள் படலாம். எங்ஙனமாயினும் 'கைந்நிலை' கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்பதை *'நன்னிலையதாகுங் கணக்கு' 'நன்னிலையவாங்கீழ்க்கணக்கு' என்று ஆழ்வார் திருநகரி ஏட்டுப் பிரதியிலும், திருநெல்வேலி ஸ்ரீமான். சொர்ணம் பிள்ளை அவர்கள் 'இன்னிலை' ப்பிரதியிலும் முறையே கண்ட பழைய பாடங்களே வலியுறுத்துகின்றன.

மற்று அக்கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற் சேர்க்க நேர்ந்த காரண மென்னையோவெனின், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்பல உரையுடன் எழுதிவைத்திருந்த ஓர் ஏட்டுப்பிரதியில் ஐந்திணை ஐம்பது முதலிய நான்கு நூல்களுமே உரையுடன் காணப்பட்டு ஐந்தாவது நூல் காணப்படாமையாலும், அச்சுவடியின் ஓரேட்டில் 'கைந்நிலை' என்றபெயருங் குறித்திருந்தமையாலும் அஃதே கீழ்க்கணக்கின் பதினெட்டாம் நூலென்று கருதினார்கள். அவ்வேடு எழுதியவர்க்கு ஐந்திணை ஐந்தாவது நூல் கிடைக்காமையினால் அதையும், கைந்நிலையை எழுத ஆரம்பித்தவர் அது கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்றறிந்தமையான் அதையும் வரையாது விட்டனர்போலும். இவ்வலியற்றகாரணத்தைக்கொண்டு பாடத்தைத்திருத்தியும் பொருளைத் திரித்தும் கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற் சேர்த்தல் எவ்வாற்றானும் பொருந்தாது.

'ஐந்திணை' யென்பது திணை என்ற சொல் வரப்பெற்ற பெயரையுடைய ஐந்து திணையொழுக்கங்களைக் கூறும் ஐந்து நூல்களையே குறிக்கும். இக்கொள்கையை 'நாலடி நான்மணி நானாற்ப தைந்தொகைமுப் பால்கடுகம்' என்று சில பிரதிகளிற்

* ஐந்திணை ஐம்பது முகவுரை பக்கம் க.

காணப்படும் பண்டைச் செய்யுளின் பாடமே 'மேலும் வலி யுறுத்துகின்றது. 'எட்டுத்தொகை' என்பது எங்ஙனம் எட்டு நூல்களைக்குறித்ததோ அங்ஙனமே 'ஐந்தொகை' என்பது ஐந்து நூல்களையே குறிக்கின்றது. 'ஐந்தொகை' நிற்கின்றவிடத்தில் 'ஐந்திணை' நிற்கின்றமையின் அதுவும் ஐந்து நூல்களையே குறிக்கவேண்டும். ஆகவே 'ஐந்திணை' என்பது 'நானூற்பது' போல் ஐந்து நூல்களின் தொகைப் பெயராகும். ஆதலினு லன்றோ அகப்பொருள்விளக்க உரைகாரர் * 'இஃது இரங்க லென்னு முரிப்பொருள் வந்த ஐந்திணைப்பாலைப் பாட்டு' என்று கூறுவாராயினர். அற்றன்று, ஈண்டு 'ஐந்திணை' என் றது ஐந்து திணையினைக் குறித்ததெனின், பாலை ஐந்திணையு ளொன்றாயினமையின் அங்ஙனங் கூறாது 'ஊடலென்னு முரிப்பொருள் வந்த முல்லைப்பாட்டு' என்று பின்னர்க் கூறி யதுபோல் 'இஃது இரங்கலென்னு முரிப்பொருள் வந்த பாலைப்பாட்டு' என்று கூறியிருக்க வேண்டியமையான் அஃது ஐந்து திணையினைக் குறிக்காது நூற்பெயரையே குறிக்கு மென்பது. அஃதன்றியும் அவ்வாசிரியர் 'ஐங்குறுநூற்றுப் பாலைப்பாட்டினுட் புணர்தலென்னு முரிப்பொருள் வந்தது,' 'இருத்தலென்னு முரிப்பொருள் சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டினுள் வந்தது,' 'ஊடலென்னும் உரிப்பொருள் வந்த வைங்குறுநூற்றுப்பாலைப்பாட்டு' என்று நமது மேற்கோளுக்கு முன்னும், 'பிரிதலென்னு முரிப்பொருள் வந்த வைங்குறு நூற்றுமுல்லைப்பாட்டு,' 'புணர்தலென்னு முரிப்பொருள் வந்த கலித்தொகை முல்லைப்பாட்டு,' 'இரங்கலென்னுமுரிப் பொருள்வந்த திணைமாலை முல்லைப்பாட்டு,' 'இருத்தலென்னு முரிப்பொருள் வந்த நற்றிணை மருதப்பாட்டு,' 'புணர்தலென்னு முரிப்பொருள் வந்த சிற்றட்டகத்து நெய்தற் பாட்டு' என்று அதன் பின்னுங் கூறியிருத்தலான் அவையெல்லாம் நூற்பெய ரையே குறிக்கின்றமையின் 'ஐந்திணைப்பாலைப் பாட்டு' என் பதும் நூற்பெயரையே குறிக்கவேண்டும். ஆண்டுக் காட்டிய செய்யுள் திணைமாலை நூற்றைம்பதில் ஒன்று. அந்நூற்பெயர்

* அகப்பொருள் விளக்கம் சூ. உ௧௧.

நீண்டிருந்தமையாலோ அல்லது அச்செய்யுளினிடம் தமக்குத் திட்பமாய்த் தெரியாமல் பொதுவாய்த் தெரிந்திருந்தமை யாலோ அந்நூற் சிறப்புப் பெயரால் அதைக்குறிக்காமல் அந் நூலுக்குப் பொதுவாயுள்ள குறுகிய ஐந்திணை என்னும் பெய ராற் சுட்டினர். இங்ஙனமே பழைய ஏடு இரண்டொன்றில் ஐந்திணை ஐம்பது முதலிய நூல்களுக்கு ஐந்திணை என்னும் பெயர் சூட்டியே ஆன்றோர்கள் அவற்றைவரைந்து வைத்துள் ளார்கள். ஆகவே ஈண்டு 'ஐந்திணை' என்பது நூற்பெயரென்ப தும், அது 'திணை' என்ற சொல்வரப்பெற்ற பெயரையுடைநூல் களுக்குப்பொதுவாய் வழங்கப்பட்டு வந்துளதென்பதும் அறி கின்றாம்.

இவ்வாதாரங்களை யெல்லாம் ஒருங்குவைத்து ஆராய் வார்க்கு ஐந்திணை ஐந்து நூல்களென்றேபுலப்படும். *வித்வான் சேஷகிரி சாஸ்திரியார் எம். ஏ., அவர்களும், †ஸ்ரீமான். திரு மலைக் கொழுந்து பிள்ளை பி. ஏ., அவர்களும், ‡ஸ்ரீமான். சிங் காரவேலு முதலியார் அவர்களும் அங்ஙனமே கருதினர்கள். சாஸ்திரியார் அவர்கள் மாத்திரமே ஐந்திணையின் ஐந்தாம் நூல் கண்ணஞ்சேந்தனாரியற்றிய திணைமாலையைம்பது என்று காட்டியுள்ளார்கள். அங்ஙனம் வரையறுத்துக்காட்டச் சாஸ்திரி யார் அவர்களுக்குக் கிடைத்த ஆதாரம் என்னையோ தெரிய வில்லை. ஆயினும் அவர் கூற்று ஆதாரவற்றதாயில்லை. ஐங்குறு நூற்று முகவுரை ஆசிரியர் பக்கம் 4-ல் "ஐங்குறுநூறுபோலவே ஐந்திணை யொழுககங்களை மேற் கூறியவாறு பாகுபாடுசெய்து தொகுத்துத் தனித்தனியே கூறும் பழைய நூல்களுள் இப் பொழுது தெரிந்தவை வருமாறு:—

எட்டுத்தொகையுள் (இந்நூலேயன்றிக்) கலித்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஐந்திணையைம்பது, திணைமாலை

* தமிழ்ககவி சரிதம. பக்கம ம.

† *Siddhanta Dipika.* Vol. IV, No. 11: A Short Sketch of Tamil Literature P. 252.

‡ அபிதான சிந்தாமணி பதினெண் கீழ்க்கணக்கு.

நூற்றைம்பது, திணைமொழி யைம்பது, ஐந்திணையெழுபது, கைந்நிலை யென்பனவும், பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி முதலியனவும், பழைய உரைகளிற் காணப்படுகின்ற திணைமாலை, சிற்றடக்கமென்பனவுமாம். இவற்றுள் ஈற்றிலுள்ள இரண்டு நூல்களிலிருந்து சில சில பாக்கள் மட்டும் பழைய வுரைகளிற் காணப்படுகின்றனவேயன்றி நூல்முழுவதும் காணப்படாமையின், அவற்றைப்பற்றி ஒன்றும் இப்பொழுது எழுதக்கூடவில்லை'' என்று வரைந்திருத்தலினால் பழைய உரைகளிற் காணப்படும் திணைமாலையையே சாஸ்திரியார்அவர்கள் ஊகித்துக் கூறினார் போலும். எங்ஙனமாயினும் ஐங்குறுநூற்று முகவுரை ஆசிரியர் கூற்று உண்மையாயின் அத்திணைமாலையே ஐந்திணையின் ஐந்தாவது நூலாகும். அங்ஙனமாகாவிடின் 'திணை' என்ற சொல்வரப்பெற்ற பெயரையுடைய வேறொரு நூல் இருத்தல் வேண்டுமென்பதே பெறப்படும்.

இனி 'இன்னிலை' என்னும் நூலைக் கீழ்க்கணக்கிற் சேர்த்தலமையாதோ பிறவெனின், அங்ஙனஞ் செய்தல் ஆன்றோர் கூறிய எண் பதினெட்டுக்கு மேற்படுதலானும், 'மெய்ந் நிலைய காஞ்சியோடு' 'இன்னிலைய காஞ்சியோடு' என்னும் பாடங்களுக்கு அதுமுரண்படுதலானும் அஃது அமையாதென்று விடுக்க.

பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் சில சமணர்களால் இயற்றப்பட்டன; மற்றவை அந்தணர்களாலும், வேளாளர்களாலும் இயற்றப்பட்டன. இவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் போல அடிமிகுந்த அகவற்பாவாலும், கலிப்பாவாலும் இயற்றப்படாமல் சின்மென்மொழியா லியன்ற ஈரடி முதல் ஐந்தடியானாகிய வெண்பாவினால் இயற்றப்பட்டுள்ளன.

கணக்கிலக்கணங்களைக் கூறும் பன்னிருபாட்டியல் சூத்திரங்கள்,

" மேல்கீழ்க் கணக்கென விருவகை கணக்கே "

" மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே"

" அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னௌ்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே"

" ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்"

" அடிநிமிர்ப் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

என்று ஓதுதலினால், கணக்கு மேல் கீழ் என்று இருவகைப்படு மென்றும், ஐம்பது முதல் ஐந்நூ றிறுதியாக ஆசிரியப்பா முதலிய ஐவகைப் பாவானுந் தொடுப்பது மேற்கணக் கென்றும், அவ்வகை யெண்ணில் அறம் பொருள் இன்பம் அடுக்கி அடிநிமிர்வில்லா வெண்பாவாலே திறம்பட வுரைப்பது கீழ்க் கணக்கென்றும் அறியப்படும். அவ்வைவகைப்பாவுள் கலியும், பரிபாடலும் அகப்பொருளைப்பற்றியும், மற்றைய ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா மூன்றும் அகம் புறமென்னும் இருபொருளைப்பற்றியும் வரும். இதனைச் * " செய்யுளிய லுட் கூறிய முறைமையின்றி ஈண்டுக் கலியை முன்னோதியது கலியெல்லாம் ஐந்திணைப் பொருளாய புலனெறி வழக்கிற் காமமுங் கைக்கிளை பெருந்திணையாகிய உலகியலே பற் றிய புலனெறி வழக்கிற் காமமும்பற்றி வருமென்றற்கும், பரிபாடல் தெய்வவாழ்த்துட்படக் காமப்பொருள் குறித்து உலகியலேபற்றி வருமென்றற்கும் என்றுணர்க. ஆசிரிய மும், வெண்பாவும், வஞ்சியும் அகம்புறமென்னும் இரண்டிற்

* தொல். அகம. சூ. ருக. உரை.

கும் பொதுவாய் வருமாறு நெடுந்தொகையும் புறமும் கீழ்க் கணக்கும் மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் என்பன வற்றுட் காண்க" என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய உரையா னறிக. கீழ்க்கணக்குள் முதுமொழிக்காஞ்சி யொன்றே வெண்பாவை யொழித்து அதற்கினமாகிய வெண்செந் துறை பயின்று வருவது. மற்றவை யெல்லாம் ஈரடி முதல் ஐந்தடி யிறுதியாகவரும் வெண்பாவே பயின்று வருவன. 'அவ்வகை யெண்பெறின்' என்றோதினமை யாற் சிறுபான்மை கீழ்க்கணக்கு அவ்வெண்பெருமலும் வரு தல் உரித்தென்பது பெற்றாம். ஆதலினால் 'நாலுற்பது' ஐம் பதிற் குறைந்தும், 'முப்பால்' ஐந்நூற்றுக்கு மேற்பட்டும் வந்தன. மற்றவை ஐம்பது முதல் ஐந்நூற்றுக்குள்பட்டே நடைபெறுகின்றன. இக்கீழ்க்கணக்குள் சிறந்தபெரிய நூல் கள் திருக்குறள், நாலடியார், பழமொழி என்பவையே.

* "தாயபனுவலோ டென்றது அறம் பொரு ளின்ப மென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப, வேறிடை யிடை அவையன்றியுந் தாஅய்ச் செல்வ தென்றவாறு. அஃதாவது பதினெண்கீழ்க்கணக்கென வுணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும் அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும் அறம் பொரு ளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப் பயின்று வருமாறுங் கார்நாற்பது களவழிநாற்பது முதலா யின வந்தவாறுங் கண்டுகொள்க" என்று பேராசிரியர் கூறிய வாற்றான் இக்கீழ்க்கணக்குச் சிறப்பு நன்கு விளங்கும். இதனால் இக்கீழ்க்கணக்கு நூல்கள் தாயபனுவல் என்னும் பெயர்க்குரியன வென்பதும், அவை அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றி னிலக்கணங்களைத் தெரிப்பன வென்பதும், அவை சிலவாய மெல்லிய சொற்களா னியினவை யென்பதும், அவை அடிநிமிர்வில்லா வெண்பாவான் வருவன வென்பதும் பிறவும் அறிந்தாம்.

---

* தொல். செய். சூ. உங்க. உரை.

கீழ்க்கணக்குநூல்கள் கடைச்சங்க காலத்துப் புலவர்களால் இயற்றப்பட்டமையின் அவை இற்றைக்குச் சுமார் 1750 ஆண்டுகட்கு முற்பட்டவை யென்ப.

செய்யுள் வனப்பெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றுத் தாயபனுவல் என்று ஆன்றோரால் விதந்தோதப்பட்டதாகிய 'கார்நாற்பது,' அறம் பொருள் இன்பம் என்னும் பொருட்பாகுபாட்டில் இன்பப்பகுதியையே சிலவாய மெல்லிய சொற்களான் அளவடிவெண்பா நாற்பதாற் கூறுகின்றமையின் அதுவும் கீழ்க்கணக்கின்பாற்பட்டது. அஃது அவ்வகப்பொருள் ஐந்திணையுள்ளும் முல்லைத்திணை யொன்றையே சிறப்பித்துக் கூறுகின்றது.

அகப்பொருளியல்.

நூல்களெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையேகூறும். அவற்றை அகம் புறம் என்றிருவகைப் படுத்தினர் ஆன்றோர். இன்பப்பகுதியைக் கூறுவது அகப்பொருளென்றும், அறம் பொருள் வீடு என்னும் முப்பொருளைக் கூறுவது புறப்பொருளென்றுங் கூறுப. ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அஃது அகமெனப்பட்டது. ஒழிந்தவை எல்லாராலும் துய்த்துணரப்பட்டு இவை இவ்வாறிருந்தவெனப் பிறருக்குக் கூறப்படுந் தகுதியுடைமையின் அவை புறமெனப்பட்டன. எனவே அகப்பொருள் அகத்தே நிகழு மொழுக்கத்தையும், புறப்பொருள் புறத்தே நிகழு மொழுக்கத்தையும் கூறுநிற்கும். இனி இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழ்வ தொன்றாயினமையின் அது காமத்தைப்பற்றித் தோன்றுங்கால் அகப்பொருளிடத்தும், பிறவற்றைப்பற்றித் தோன்றுங்கால் புறப்பொருளிடத்து மடங்கும்.

நூல்களெல்லாம் அறம் பொருளின்பம் ஆகிய மூன்றினையும் இலக்கணவகையானும் ஒழிந்த வீட்டைக் காரண

வகையானுங் கூறும். வீடு சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத நிலைமைத்தாகலின், அஃது அதனையடைதற்குக் காரணமாகிய துறவறத்தானும், அறம் பொருளின்பம் இவற்றின் நிலையாமையானும் உணர்த்தப்படுதலன்றி இலக்கணவகையாற் கூறப்படுந் தன்மைத்தன்று. ஆதலினலன்றே ஆசிரியர் தொல்காப்பியனாரும், தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் வீட்டின் தன்மையை இலக்கணத்தாற் கூறுதொழிந்தனர்.

இன்பப்பகுதியைக் கூறும் நூல்களெல்லாம் காமத்தின் இலக்கணத்தைக் கூறவெழுந்தமையான் அவை மக்கட் குறுதி பயக்குமாறு யாங்ஙனமெனின், கூறுதும். அகநூல்களிற் கூறப்படு மின்பவொழுக்கம் மேன்மக்களாற் புகழப்படும் அன்பின் பெருக்கால் நிகழ்வதொன்றன்றி உலகத்தாரால் இகழப்படும் காமவேட்கையால் நிகழ்வதொன்றன்று. இவ்வின்ப வொழுக்கத்திற்குக் காதலெனப்படும் சிறந்த அன்பே காரண மென்பதை வலியுறுத்தவே * 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்று ஆசிரியர் தொல்காப்பியனாரும், † 'அன்பின் ஐந்திணை' ‡ 'களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோருளநிக ழன்பி னுயர்ச்சி மேன' என்று இறையனாரும், $ 'ஐந்திணையுடைய அன்புடைக் காமம்' ¶ 'உளமலிகாதற் களவெனப் படுவது' என்று நாற்கவிராச நம்பியாரும், § 'அவையெல்லாம் அன்பினனே நிகழுமாகலிற் காமப் புணர்ச்சியென்றார்' என்று களவியலுரையாசிரியரும் கூறுவாராயினர். அன்பென்பது தான் வேண்டப்பட்ட ஒருபொருளினிடத்துத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. காதலிருவருள் ஒருவர் நோயுறின் மற்றொருவர் தாமும் நோயுற்றதுபோல் வருந்துதலும், ஒருவர் மகிழ்சசியுற்றால் மற்றொருவர் தாமும் மகிழ்ச்சியுறுதலும், இங்ஙனம் ஒருவருக்கு வரும் இன்பத்துன்பங்களை மற்றொருவரும் தமதாகவேபாவித்தலும், ஒருவரைவிட்டு ஒருவர் நீங்க விரும்பாது எஞ்ஞான்றும் ஓருயிரும் ஈருடலுமாய் வாழ்த

---

* தொல். களவி. சூ. க.
† இறை. அகம. சூ. க.
‡ ௸ ௸ சூ. உ௰.
$ அகப்பொரு. விள. சூ. ௪.
¶ ௸ ௸ சூ. கஎ.
§ இறை. அகம. சூ. உ. உரை.

லுமே அவ்வன்பின் அறிகுறியாகும். அவ்வன்பு காதலர் இருவரும் புணராத முன்பு எங்ஙனம் நின்றதோ அங்ஙனமே புணர்ந்தபின்னும் நிறைந்துநிற்கும். மற்றைய உலகத்து அன்பு போல் அஃது என்றும் தேய்தலின்று. இத்தகைய சிறப்புடைமையினாலன்றோ களவியல் உரையாசிரியர் * அதனை 'ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணமுடைத்து' என்று விதந்து கூறுவாராயினர்.

காமவேட்கையால் விலங்குகள்போற் புணர்வது இழிந்த காமப்புணர்ச்சி என்றும், அன்பின் பெருக்கால் உள்ளத்தாற் புணர்வது சிறந்த காதற்புணர்ச்சி யென்றுங் கூறப்படும். முன்னர் மெய்யுறு புணர்ச்சியே நிகழும். பின்னர் உள்ளப் புணர்ச்சியும், மெய்யுறு புணர்ச்சியும் நிகழுமெனினும் முன்னதே அதற்குச் சிறப்புடைத்து. இக்காதற் காமமே சிறந்ததோர் இன்பம் பயத்தலின் 'காதற்காமங் காமத்துச் சிறந்தது, விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி புலத்தலிற் சிறந்தது' (பரிபாடல். க) என்று குன்றம்பூதனாரும், † 'அளவில் இன்பத்தைந்திணை' என்று நாற்கவிராச நம்பியாரும், ‡ 'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் அதனை விதந்தோதுவாராயினர். இது பேரின்பத்தை உணர்த்துவதோர் இன்பமாயினமையினாலன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் காமத்துப்பாலையும், கடுந்துறவியாகிய வாதவூரடிகள் திருச்சிற்றம்பலக் கோவையாரையும், வைணவசமய பரமாசாரியாராகிய நம்மாழ்வார் திருவிருத்தத்தையும் திருவாய்மலர்ந்தருள்வாராயினர். காமக்கடல்வாய்ப் பட்டுழல்வோர் அத்துறையினின்றுங் கரையேறி உய்தற்பொருட்டே அகப்பொருள் நூல்கள் எழுந்தனவென்னுங் கருத்தைக் "காமம் நன்றுமாறுண்டு. சுவர்க்கத்தின்கட்சென்று போகந்துய்ப்பலென்றும் உத்தரகுருவின்கட்சென்று போகந்

* இறை. அகம. சூ. க. உரை.

† அகப்பொரு. விள. சூ. உசு.

‡ தொல். அகம. சூ. க உரை.

துய்ப்பலென்றும் நன்ஞானங்கற்று வீடுபெறுவலென்றுந் தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமங்கண்டாயன்றே! மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்குமாகலின், இக்காமம் பெரிதும் உறுதியுடைத்தென்பது. உடைத்தாமாறு; அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சி தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி யுண்டாம். உண்டாகவே, கொலையே களவே செருக்கே மானமே என்றித்தொடக்கத்துக் குற்றம் நிகழுமென்பது. அதுகேட்டே தலையாயினோர் அதன்கணின்று நீங்குவார். இனி இடையாயினோர் பெண் என்பது எற்புச்சட்டகம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து; ஐயும் பித்தும் வளியுங் குடருங் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திர புரீடங்களும் என்ற இவற்றதியைபு; பொருளன்று; பொருளாயிற் பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலமே என்றிவற்றாற் புனையவேண்டா, தான் இயல்பாக நன்றாயினென்று அதன் அசுபத்தன்மை உரைப்பக்கேட்டுநீங்குவர். கடையாயினோர் எத்திறத்தாவது நீங்கார். என்னை? பல பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின், அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? பேதையைக் காதல்காட்டிக் கைவிடுக்க என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சியினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப்பிணி சாக்காடில்லது, நிச்சநிரப்பிடும்பையில்லது. இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பணபும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியுமுடையராய்ப் பிறிதொன்றிற் கூனமின்றிப் போகந்துய்ப்பாரென்று காட்டப்பட்டன. என்போலவோவெனின், கடுத்தின்னாதனைக் கட்டிபூசிக் கடுத் தீற்றியவாறு போலவும், கலங்கற் சின்னீர் தெருளாமையான் உண்பானை அறிவுடையானொருவன் பேய்த்தேரைக்காட்டி, 'உது காணாய் நல்லதொருநீர் தோன்றுகின்றது; அந்நீர் பருகாய்; இசசேற்றுநீர் பருகி என்செய்தி?' என்று நன்னீர்

காட்டி ஊட்டியது போலவும், தான் ஒழுகா நின்றதோர் இணை விழைச்சியுள்ளே மிக்கதோர் ஒழுக்கங்காட்டினன். காட்டக் கேட்டு அது பெறுமாறு என்னை கொல்லோ எனும். எனவே மக்கட் பாட்டினனும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ்செய்தாற் பெறலாம்; என்னை, "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ மீண்டு முயலப் படும்" என்பதாகலான் என்பது. அதுகேட்டு இனி யானுந் தவஞ் செய்து இதனைப் பெறுவனென்று தன்மாட்டு வேட்கையால் தவஞ் செய்யும். செய்யாநின்றானைப், பாவீ, இதன் பரத்ததோ வீடு பேற்றின்பம் என்று வீடு பேற்றின்பத்தை விரித்துரைக் கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச சாக்காடு அவலக் கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் மலரினது •நாற்ற முஞ் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின் றெழுந்ததொரு பேரின்ப வெள்ளத்ததென்பது கேட்டு, அதனை விட்டு வீடு பேற்றின் கண்ணே அவாவினின்று தவமும் ஞானமும் புரிந்து வீடு பெறுவானுமென்பது" * என்னுங் களவியலுரை நன்கு விளக்கும். இக்கருத்தையே,

† "காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" என்னுஞ் சூத்

திரத்தான் ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

‡ "மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப"

என்னுஞ் சூத்திரத்தான் நாற்கவிராச நம்பியாரும நனகு வற்புறுத்துவாராயினர். இக்கருத்தினைலன்றோ தமிழ் இலக்

* இறை. அகம. சூ. க. உரை.

† தொல். கற்பி. சூ. இக.

‡ அகபபொரு. விள. சூ. ககக.

கண இலக்கிய நூல்களெல்லாம் மிகுதியாக அகப்பொருளையே எடுத்துக் கூறுநிற்கின்றன.

அகப்பொருள் நுட்பங்களை அறிய அவாவுவோர் அகப்பொருள் இலக்கணங்களை நன்கு பயிறல்வேண்டும். தமிழ் மொழியே தாய்மொழியாகப் பயின்ற புலவர் பலருக்குமே உள்ளுறை, இறைச்சி போன்ற அகப்பொருள் நுட்பங்களெல்லாம் நன்கு விளங்கவில்லையென்றால் பிறமொழியே தாய்மொழியாகப் பயின்று வளர்ந்து தமிழ் மொழியைப் பொழுது போக்காக்கற்ற அயல் நாட்டாருக்கு அவ்வகப்பொருள்நூல்கள் என்ன பயனைக் கொடுக்கும்? தெங்கம் பழம் பெற்ற நாய் போல் அவற்றின் பயனை அவர் ஒரு சிறிது மோரார். எட்டியெட்டிப் பார்த்தும் திராட்சப்பழம் தனக்குக் கிடைக்காமையினால் அது புளிக்கிறதென்று குறைகூறிய நரியைப்போல் அவர்களுக்கு அகப்பொருளிலக்கணம் ஒன்றும் விளங்காமையால் அகப்பொருளிலக்கியத்தை அவர்கள் குறைகூறுவாராயினர். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இயற்றியருளிய திருக்குறட்கு ஒப்பதும் மிக்கதுமான ஒருநூலிருப்பதாக இதுகாறும் யாம் கேட்டிலம். அத்தகைய சிறப்பு வாய்ந்த நூலின்கட் கூறப்பட்டிருக்குங் காமத்துப்பாலின் நுட்பங்களை ஒரு சிறிதுமறிய வியலாமையினால் அயல் நாட்டார் அதைக் குறைகூற . முந்துவாராயினர். தமிழொழிந்த பிறமொழியினிலக்கணங்களெல்லாம் எழுத்துச், சொல், யாப்பு, அணி என்னும் நான்கு பகுதிகளைக் கூறுமேயன்றிப் பொருட் பகுதியைக் கூறா. பொருளிலக்கணம் தமிழ்மொழிக்கே சிறப்பாயுள்ளது. ஆதலினால் அயல் நாட்டார்க்கு அகப்பொருளிலக்கணம் என்றும் நன்கு விளங்காது.

இப்பூவுலகைப் பகுக்குங்கால் அது நான்குவகையாய்ப் பாகுபடும். அவை மலையும் மலைசார்ந்த விடமும், காடுங் காடுசார்ந்த விடமும், வயலும் வயலைச்சார்ந்த விடமும், கடலுங் கடலைச்சார்ந்த விடமும் என்பன. இந்நான்கு வகையான இயற்கை நிலன்களையுடைமையான் இப்பூவுலகிற்கு நானிலமென்றொரு பெயருமுண்டு. இவற்றுள் மலைசார்ந்த விடமும், காடு

சார்ந்த விடமும் கால வேற்றுமையால் திரிந்து சுரமாதலு முண்டு. அதனை ஐந்தாவது செயற்கை நிலமாகக்கொள்ப ஆன்றோர். இவ்வைவகை நிலத்தையும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பர். இங்ஙனம் பெயர் கூறியதற்கு அவ்வவ்நிலத்திற்கே சிறப்பாகிய அகவொழுக்கமே காரணமென்பர் ஒருசாரார். மற்றொருசாரார் அவ்வவ்நிலங்க ளிற் சிறப்பாகத்தோன்றும் குறிஞ்சி முதலிய பூக்களே காரண மென்பர். வேறு சிலர் அஃது ஆன்றோர் வழக்கென்பர்.

காதலர் இருவரிடத்து நிகழும் அகவொழுக்கத்தைத் திணை என்று கூறுப. அங்ஙனம் நிகழும் ஒழுக்கம் எழுவகைப்படும். அவை புணர்தலும், இருத்தலும், ஊடலும், இரங்கலும், பிரிதலும், ஒருதலைக்காமமும், பொருந்தாக்காமமு மென்பன. இவற்றை முறையே குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத் திணை, நெய்தற்றிணை, பாலைத்திணை, கைக்கிளைத்திணை, பெருந்திணை என்று கூறுவர். இவற்றுள் முதல் ஐந்தொழுக்க மும் ஐந்திணை யெனப்படும். அவை முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என்று மூவகையான் உரைக்கப்படும்.

அவற்றுள் முதற்பொருள் ஒழுக்கம் நிகழ்வதற் கேதுவா கிய நிலமும், பொழுதும் என இருவகைப்படும். முற்கூறிய குறிஞ்சி முதலிய ஐந்து நிலன்களே குறிஞ்சி முதலிய ஐந்து திணைகளுக்கும் நிலனாகும். தொல்காப்பியர் காலத்திற் பா லைக்கு நிலனின்று.

பொழுது இருவகைப்படும். பெரும்பொழுது, சிறு பொழுது என்பன. ஓர் ஆண்டினை ஆறு கூறிட்டு இரண்டு திங்கள் ஒருகாலமாக்கியது பெரும்பொழுதெனப்படும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறும். அவை முறையே ஆவணி, புரட்டாதி தொடங்கி ஆனி, ஆடித்திங்களோடு முடியும். ஒரு நாளினை ஆறு கூறிட் டுப் பத்து நாழிகை ஒரு காலமாக்கியது சிறுபொழுதெனப் படும். அவை * மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல்,

---

* ஆசிரியர் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும 'வைகுறு விடி யல்' என்பதை இரண்டு சிறுபொழுதாகக் கொண்டனர்.

எற்பாடு என ஆறும். அவை ஞாயிறு மறையுங் காலந்தொட்டுப் பப்பத்து நாழிகையாக முறையே வரும். இவ்வழக்குக் கடைச்சங்கத் திறுதிக்காலத்தும் அதன் பின்னரும் வீழ்ந்தது. *அக்காலத்தில் தோன்றிய இலக்கிய இலக்கண நூல்களெல்லாம் சிறுபொழுது ஐந்தென்றே கூறும். அவை நண்பகலுக்கும் மாலைக்கும் இடையில் நின்ற எற்பாட்டை யொழித்து, ஒரு நாளை ஐந்து கூறாக்கிக் கொண்டன. குறிஞ்சிக்குப் பொழுது கூதிரும், முன்பனியும், யாமமும். முல்லைக்குப் பொழுது காரும், மாலையும். மருதத்திற்கும், நெய்தற்கும் பெரும்பொழுது அறுவகை யிருதுவும் எனினும் காரும், இளவேனிலும், முதுவேனிலுஞ் சிறப்பாகக் கொள்ளப்படும். மருதத்திற்குச் சிறுபொழுது வைகறையும், காலையும். நெய்தற்குச் சிறுபொழுது எற்பாடு. பாலைக்குப் பொழுது இளவேனிலும், முதுவேனிலும், பின்பனியும், நண்பகலும்.

இனிக் கருப்பொருளென்பது அவ்வவ் நிலங்களுக்கே சிறப்பாயுள்ள தெய்வம், மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், செய்தி முதலியன.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள்; தலைமகன் பெயர் சிலம்பன், வெற்பன், பொருப்பன்; தலைமகள்பெயர் கொடிச்சி, குறத்தி; மக்கள்பெயர் கானவர், வேட்டுவர், இறவுளர், குறவர், குன்றுவர், வேட்டுவித்தியர், குறத்தியர், குன்றுவித்தியர்; புள் கிளியும், மயிலும்; விலங்கு புலியும், யானையும், கரடியும், பன்றியும்; ஊர் சிறுகுடியும், குறிச்சியும்; நீர் அருவியும், சுனையும்; பூ குறிஞ்சியும், காந்தளும், வேங்கையும், சுனைக்குவளையும்; மரம் அகிலும், ஆரமும், திமிசும், தேக்கும், வேங்கையும், அசோகமும்; உணவு ஐவனநெல்லும், தினையும், மூங்கிலரிசியும்; பறை முருகியமும், தொண்டகப்பறையும்; யாழ் குறிஞ்சியாழ்; பண் குறிஞ்சிப்பண்; செய்தி தேனழித்தலும், கிழங்ககழ்தலும், தினை முதலியன விளைத்தலும், கிளி கடிதலும்.

---

* குறுந்தொகை. கஉ.
நம்பி. அகம். சூ. கஉ.
இறை. அகம். சூ. க. உரை.

முல்லைக்குத் தெய்வம் மாயோன்; தலைமகன் பெயர் குறும்பொறைநாடன், தோன்றல், அண்ணல்; தலைமகள் பெயர் கிழத்தி, மனைவி; மக்கள் பெயர் கோவலர், இடையர், ஆயர், பொதுவர், இடைச்சியர், கோவித்தியர், ஆய்ச்சியர், பொதுவியர்; புள் கானக்கோழியும், சிவலும்; விலங்கு முயலும், சிறுமானும், உழையும்; ஊர் பாடியும், சேரியும், பள்ளியும்; நீர் கான்யாறு; பூ முல்லையும், தோன்றியும், பிடவும், தளவும்; மரம் கொன்றையும், காயாவும், குருந்தும்; உணவு வரகும், சாமையும், முதிரையும்; பறை ஏறுகோட்பறையும், முரசும்; யாழ் முல்லையாழ்; பண் சாதாரி; செய்தி வரகு முதலியன வித்தலும், அவை களைகட்டலும், அவை அறுத்தலும், கடாவிடுதலும், நிரைமேய்த்தலும்.

மருதத்திற்குத் தெய்வம் இந்திரன்; தலைமகன் பெயர் மகிழ்நன், ஊரன்; தலைமகள் பெயர் கிழத்தி, மனைவி; மக்கள் பெயர் களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைசியர்; புள் நீர்க்கோழியும், தாராவும்; விலங்கு எருமையும், நீர்நாயும்; ஊர் பேரூர், மூதூர்; நீர் ஆற்றுநீரும், மனைக்கிணறும், பொய்கையும்; பூ தாமரையும், கழுநீரும்; மரம் மருதமும், வஞ்சியும், காஞ்சியும்; உணவு செந்நெல்லும், வெண்ணெல்லும்; பறை மணமுழவும், நெல்லரிகிணையும்; யாழ் மருதயாழ்; பண் மருதப்பண்; செய்தி நெல்லு நடுதலும், களைகட்டலும், அரிதலும், கடாவிடுதலும்.

நெய்தற்குத் தெய்வம் வருணன்; தலைமகன் பெயர் கொண்கன், துறைவன், சேர்ப்பன், மெல்லம்புலம்பன்; தலைமகள் பெயர் பரத்தி, நுளைச்சி; மக்கள் பெயர் நுளையர், திமிலர், பரதவர், நுளைச்சியர், பரத்தியர்; புள் அன்னமும், அன்றிலும், மகன்றிலும்; விலங்கு உமண்பகடுபோல்வன; பிற உயிர்வகை முதலையும், சுறவும்; ஊர் பாக்கமும், பட்டினமும்; நீர் மணற்கிணறும், உவர்க்கழியும்; பூ நெய்தலும், கைதையும்; மரம் புன்னையும், ஞாழலும், கண்டலும்; உணவு மீன், உப்பு விலைகளிற் பெற்றன; பறை மீன்கோட்பறையும், நாவாய்ப் பறையும்; யாழ் விளரியாழ்; பண் செவ்வழி; செய்தி மீன் படுத்தலும், உப்பு விளைத்தலும், அவை விற்றலும்.

ஐந்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களின் அட்டவணை.

திணைப் பெயர்.	முதற்பொருள். நிலம்.	பெரும்பொழுது. பெரும் பொழுது.	பெரும்பொழுது. சிறு பொழுது.	கருப்பொருள். தெய்வம்.	மக்கள். தலைமகன் பெயர்.	மக்கள். தலைமகள் பெயர்.	மக்கள். ஏவற்பெயர்.	புள்.	விலங்கு.	ஊர்.	நீர்.	பூ.	மரம்.	உணவு.	பறை.	யாழ்.	பண்.	செய்தி.	உரிப்பொருள்.
குறிஞ்சி	மலையும், மலை சார்ந்த இடமும்	கூதிரும், முன்பனியும்	யாமம்	முருகவேள்	சிலம்பன், வெற்பன், பொருப்பன்	கொடிச்சி, குறத்தி	கானவர், வேட்டுவர், இறவுளர், குறவர், குன்றுவர்	கிளியும், மயிலும்	புலி, யானை, கரடி, பன்றி	சிறுகுடியும், குறிச்சியும்	அருவியும், சுனையும்	குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக் குவளை	அகில், ஆரம், தேக்கு, வேங்கை, அசோகம்	ஐவன நெல், தினை, மூங்கிலரிசி	முருகியம், தொண்டகம்	குறிஞ்சியாழ்	குறிஞ்சிப் பண்	தேனழித்தல், கிழங்கு கல்லுதல், தினை முதலியன விளைத்தல், கிளி கடிதல்	புணர்தலும், புணர்தல் நிமித்தமும்
முல்லை	காடும், காடு சார்ந்த இடமும்	கார்	மாலை	மாயோன்	குறும்பொறை நாடன், தோன்றல், அண்ணல்	கிழத்தி, மனைவி	இடையர், ஆயர், பொதுவர், இடைச்சியர், ஆய்ச்சியர்	கானக்கோழி, சிவல்	முயல், சிறுமான், உழைமான்	பாடியும், சேரியும், பள்ளியும்	கானயாறு	முல்லையும், தோன்றியும், பிடவும், தளவும்	கொன்றை, காயா, குருந்து	வரகு, சாமை, முதிரை	ஏறுகோட் பறை, முரசு	முல்லையாழ்	சாதாரி	வரகு முதலியன வித்தல், களைகட்டல், கடாவிடுதல், நிரை மேய்த்தல்	இருத்தலும், இருத்தல் நிமித்தமும்
மருதம்	வயலும், வயல்சார்ந்த இடமும்	அறுவகை இருது	வைகறையும், காலையும்	இந்திரன்	மகிழ்நன், ஊரன்	கிழத்தி, மனைவி	களமர், உழவர், கடையர், உழத்தியர்	நீர்க்கோழி, நாரை	எருமை, நீர்நாய்	பேரூர், மூதூர்	ஆற்றுநீர், மனைக்கிணறு, பொய்கை	தாமரையும், கழுநீரும்	மருதம், வஞ்சி, காஞ்சி	செந்நெல், வெண்ணெல்	மணமுழவு, நெல்லரி கிணை	மருதயாழ்	மருதப்பண்	நெல்லு அரிதலும், களைகட்டலும், அரிதலும், கடாவிடுதலும்	ஊடலும், ஊடல் நிமித்தமும்
நெய்தல்	கடலும், கடல்சார்ந்த இடமும்	[illegible]	எற்பாடு	வருணன்	கொண்கன், துறைவன், சேர்ப்பன், மெல்லம் புலம்பன்	பரத்தி, நுளைச்சி	நுளையர், திமிலர், பரதவர், நுளைச்சியர், பரத்தியர்	அன்னம், அன்றில், மகன்றில்	உமண் பகடு, [illegible] (பறவை) முதலையும், சுறவும்	பாக்கமும், பட்டினமும்	மணற்கிணறு, உவர்க்குழி	நெய்தலும், கைதையும்	புன்னை, ஞாழல், கண்டல்	மீன், உப்பு விலைகளிற் பெற்றன	மீன்கோட் பறை, நாவாய்ப்பறை	விளரியாழ்	செவ்வழி	மீன்படுத்தல், உப்பு விளைத்தல், அவை விற்றல்	இரங்கலும், இரங்கல் நிமித்தமும்
பாலை	சுரமும், அதைச் சார்ந்த இடமும்	இளவேனில், முதுவேனில், பின்பனி	நண்பகல்	கொற்றவை	மீளி, விடலை, காளை	எயிற்றி, பேதை	எயினர், மறவர், எயிற்றியர், மறத்தியர்	கழுகு, பருந்து, புறவு	வலியழிந்த [illegible] புலி, செந்நாய்	குறும்பு	அறுநீர்க் கூவலும், அறுநீர்ச் சுனையும்	மராவும், குராவும், பாதிரியும்	பாலை, வற்றின இருப்பை, ஓமை, உழிஞை, ஞெமை	ஆறலைத்தனவும், சூறை கொண்டனவும்	ஆநிரைப்பறை, சூறைகோட் பறை	பாலையாழ்	பஞ்சுரம்	ஆறலைத்தல், சூறையாடல், நிரைகோடல்	பிரிதலும், பிரிதல் நிமித்தமும்

கார் = ஆவணியும், புரட்டாசியும்.
கூதிர் = ஐப்பசியும், கார்த்திகையும்.

முன்பனி = மார்கழியும், தையும்.
பின்பனி = மாசியும், பங்குனியும்.

இளவேனில் = சித்திரையும், வைகாசியும்.
முதுவேனில் = ஆனியும், ஆடியும்.

மாலை = இரவின் முற்பகுதி. (10 நாழிகை)
யாமம் = நள்ளிரவு.

வைகறை = இரவின் பிற்பகுதி.
காலை = முற்பகல்.

நண்பகல் = நடுப்பகல்.
எற்பாடு = பிற்பகல்.

பாலைக்குத் தெய்வம் கொற்றவை ; (ஆசிரியர் தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்.) தலைமகன் பெயர் மீளி, விடலை, காளை ; தலைமகள் பெயர் எயிற்றி, பேதை ; மக்கள் பெயர் எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் ; புள் கழுகும், பருந்தும், புறவும் ; விலங்கு வலியழிந்த யானையும், புலியும், செந்நாயும் ; ஊர் குறும்பு; நீர் அறுநீர்க்கூவலும், அறுநீர்ச்சுனையும்; பூ மராவும், குராவும், பாதிரியும் ; மரம் பாலையும் வற்றின இருப்பையும், ஓமையும், உழிஞையும், ஞெமையும் ; உணவு ஆறலைத்தனவும், சூறைகொண்டனவும் ; பறை பூசற்பறையும், சூறைகோட்பறையும், நிரைகோட்பறையும் ; யாழ் பாலையாழ் ; பண் பஞ்சுரம் ; செய்தி ஆறலைத்தலும், சூறையாடலும், நிரைகோடலும்.

இனி உரிப்பொருளாவது திணைக்கு உரிய பொருள் என்றவாறு. அவை புணர்தலும், புணர்தல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், இருத்தலும், இருத்தல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும் எனப் பத்தாம். அவற்றுள் குறிஞ்சிக்குப் புணர்தலும், பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும் அவ்வவ நிமித்தங்களும் உரியனவாகும்.

இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும், பாங்கற்கூட்டமும், பாங்கியிற்கூட்டமும், இரவுக்குறிக்கண் எதிர்ப்பாடும், பகற்குறிக்கண் எதிர்ப்பாடும் போல்வன புணர்தலெனப்படும். தலைமகன் தோழியைக் குறையுறும்பகுதியும், ஆண்டுத் தோழி கூறுவனவும், குறைநேர்தலும், மறுத்தலும் முதலியன புணர்தல் நிமித்தமாகும். ஓதற்குப் பிரிதலும், பகைமேற்செல்லலும், பகைதணிவிக்கத் தூதாகச்செல்லலும், பொருட்குச்செல்லலும், உடன்போக்கும் பிரிதலெனப்படும். உடன்போக்குக்குத் தமர் ஒன்றாக் காலத்தும், ஒன்றாப் பருவத்தும், ஒன்றாச் சுரத்தும் தோழியோடு வலித்தலும், பிரிந்தபின் தலைவி வருந்துவனவும், தோழி ஆற்றுவித்தனவும் முதலியன பிரிதல் நிமித்தமாகும். தலைமகன் பிரிவு உணர்த்தியவழியும் தலைவி பிரியாரென்றிருத்தலும், பிரிந்தவிடத்துக் குறித்த பருவமன்றென்று

தானே கூறுதலும், பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவனவும் போல்வன இருத்தல். பருவங்கண்டு தலைவி ஆற்றாமையினால் தோழி ஆற்றாது கூறுவனவும், பருவ மன்றென்று வற்புறுத்தினவும், தலைவர் வருவரென்று வற்புறுத்தினவும் தலைவன் பாசறைக்கண் இருந்து உரைத்தனவும் அவை போல்வனவும் இருத்தல் நிமித்தமாகும். கடலும், கானலும், கழியும் காண்டொறுமிரங்கலும், தலைவன் எதிர்ப்பட்டு நீங்கிய விடத்து இரங்கலும், பொழுதுகண்டும் இன்புற்றுவதியுந் துணைப்புள்ளுக்கண்டும் இரங்கலும் போல்வன இரங்கலெனப் படும். கடலும், கானலும், கழியும், தலைவன் நீங்குவனவும் முதலியன இரங்கல் நிமித்தமாகும். புலவிமுதலியன ஊடல் எனப்படும். பரத்தையும், பாணன் முதலியோரும் ஊடல் நிமித்தமாம்.

முற்கூறிய மூன்று பொருளும் செய்யுளினிடத்தே ஒன்று ஒன்றினிற் சிறந்துவரும். முதலிற் கருவும், கருவில் உரிப் பொருளுஞ் சிறந்துவரும். அகப்பொருட் செய்யுளெல்லாம் பெரும்பான்மையும் முதலும் கருவும்பெற்று உரிப்பொருளாற் சிறப்பெய்தியே வரும். சிறுபான்மை முதலின்றிக் கருவும் உரிப்பொருளுமே பெற்றுவருஞ் செய்யுளும், முதலுங் கருவு மின்றி உரிப்பொருளே பெற்றுவருஞ் செய்யுளுமுண்டு. எங்ங னமாயினும் ஐந்திணைச் செய்யுள்கள் உரிப்பொருளின்றி நடவா. நடைபெறின் பொருட் பயனின்றி வற்றும்.

முதல், கரு, உரிப்பொருள்களுள் நிலமொழிந்த மற்றவை தம்முள் மயங்குதலுமுண்டு. நிலன் இரண்டு தம்முள் என்றும் மயங்கா. காலம் ஒருங்கு மயங்குங்காற் பெரும்பொழுது இரண் டும் பெரும்பான்மையும் சிறுபொழுதும் மயங்கிவரும். கருப் பொருளுள் பெரும்பான்மையும் பூவும் புள்ளும் மாவும் ழுமும் மயங்கிவரும். அங்ஙனம் மயங்குங்கால் அவை வந்த நிலத்தின் கருப்பொருளாக எண்ணப்படும். தெய்வம் என்றும் மயங்குத லின்று. உரிப்பொருளிரண்டு ஒரு நிலத்தின்கண் மயங்கி வரும். ஓர் உரிப்பொருள் நிற்றற்குரியவிடத்து மற்றோர் உரிப்பொருள்வந்து மயங்குதலுமுண்டு. அவ்வவ நிலங்கட்

குரிய முதலுங் கருவும் வந்து உரிப்பொருள் வேறுதலன்றி அவ்வவ நிலங்கட்கு உரியனவல்லாத முதலுங் கருவும் வந்து உரிப்பொருள் மயங்குவனவுமுண்டு. இங்ஙனம் இவை மயங்கி வருதலை ஆன்றோர் திணைமயக்கமென்று கூறுவர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் பாலைக்கு நிலங்கொள்ளாமை யின் அத்திணை மற்றைய நான்கு நிலத்தும் மயங்கிவருமென் றனர். அங்ஙனம் மயங்கிவருங்கால் அவ்வத்திணையின் நிலனே அதற்கு முதற்பொருளாகக் கருதப்படும்.

இனிக் கைக்கிளை, பெருந்திணையாகிய இவ்விரண்டு திணை களும் அகமெனும் ஐந்திணைக்குப் புறத்தே நிற்றலின் அவை அகப்புறமெனப்படும். இவ்விரண்டு திணைகளுக்குந் தனியே நிலங்கிடையா. அவை மற்றைய திணைகளுடன் மயங்கியே வரும். அங்ஙனம் வருங்கால் அவை மயங்கிய நிலனும் பொழு துமே அவ்வத்திணைக்கு முதலெனப்படும். அவற்றிற்குத் தனியே கருப்பொருள், உரிப்பொருள்களுங் கிடையா.

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். அஃதாவது 'ஒரு மருங்கு பற்றிய கேண்மை.' ஒரு தலைமகன் காமவின்பத்தின் சிறப்பையுணருமாற்றலமையாத இளமைப் பிராயத்தாள் ஒருத்தி யிடத்தே காதல் கொண்டு குறிப்பறியாது சென்று அவளோடு மேன்மேலுஞ் சொற்களைச் சொல்லித் தானே மனத் தின்கண் இன்புறு மொழுக்கம் கைக்கிளை யெனப்படும். இதிலே களவு கற்பெனுங் கைகோளிரண்டினுங் கூறப்படாத துறை கள் நிகழும். இதனுள் தலைமகன் அவளை நினைந்து மட லேறுவேன், உயிர் கொடுப்பேன் என்று தனது நன்மை யெல் லாங் கூறுதலே தனக்கின்பமாகக் கருதி ஒழுகுவான். இஃது அகப்புறக் கைக்கிளையாகும். இத்திணையுள் இன்பம் என்றும் புணராது நிகழும்.

இனி ஒத்த அன்பும், குணமும், செல்வமுமுடைய ஒருவ னும் ஒருத்தியும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டு இருவர் மன மும் ஒத்து இயற்கைப்புணர்ச்சி நிகழ்த்துவதற்கு முன்பு தலை மகன் பக்கம் நிகழுங் காட்சியும், ஐயமும், தெரிதலும், தேறலும் கைக்கிளை என்றுங் கூறுப. ஈண்டுத் தலைவி காமவின்பத்தை

நுகர்வதற்கு அமைந்த பருவத்தளாயினும், அவள் பக்கம் உண்டாகிய வேட்கைக் குறிப்பைத் தானறியுமளவும் தலைமகன் அவளைச்சாராது நின்று தன் காதன் மிகுதியான் நெஞ்சினோடு சொல்லுதலான் இதுவும் கைக்கிளையாயிற்று. இஃது அகப்பொருட் கைக்கிளையாகும். இவ்வகப்பொருட் கைக்கிளைத்திணை தலைவற்கே உரியது பின்னர் எழுந்த இலக்கிய இலக்கண நூல்கள் பெண்பாற் கைக்கிளையுங் கூறும்.

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். தலைமகன் தலைவிபொருட்டு மடலேறுதலும், வரைபாய்தலும், தனக்கு இளையளாகாத ஒத்த பருவத்தாளோடு புணர்தலும், காமமிகுதியான் எதிர்ப்பட்டுழி வலிதிற் புணாதலும், தலைவனும் தலைவியும் முதிர்ந்தபருவத்துங் காமநுகர்தலும் பெருந்திணையொழுக்கமாம். இவை கந்தருவத்துட்பட்டு வழீஇயின என்பர் ஆன்றோர். எண்வகை மணங்களுள் முற்கூறிய ஆறுதிணையும் நான்கு மணம் பெற்று நடைபெற இத்திணை ஒன்றுமட்டுமே பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் நான்குமணம் பெற்றுநடத்தலின் இஃது எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாயிற்று. இத்திணையுள் இன்பம் புணர்ந்தபின் நிகழும்.

அகனைந்திணைச் செய்யுளெல்லாம் தலைமகனையும் தலைமகளையும் திணைப்பெயராற் சுட்டுமேயன்றி இயற்பெயராற் சுட்டா. அச்செய்யுள்கள் புறத்திணையுடன் மயங்கிவருமிடத்தே தலைவனையும், தலைவியையும் இயற்பெயரால் விதந்துகூறும். கைக்கிளையும் பெருந்திணையும் அங்ஙனமின்றி ஒருவர் பெயர் கொண்டும் கொள்ளாதும் நடைபெறும்

இவ்வகவொழுக்கம் களவு, கற்பு என்னும் இரு பெரும் பிரிவினையுடையது. அவற்றினை ஆன்றோர் கைகோளென்பர். கைகோளென்பது ஒழுக்கம்.

களவொழுக்கம்.

களவொழுக்கமென்பது ஒத்த குலமும், ஒத்த கல்வியும், ஒத்த குணனும், ஒத்தசெல்வமும், ஒத்த அழகும், ஒத்த அன்பு

முடைய தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினானன்றித் தெய்வக்குறிப்பானும், பான்மைவயத்தானும் ஒருவர்மீது ஒருவர் காதல் மீதூரப்பட்டுக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே புணர்வ தென்பது. பிறர்க்குரியளாய தலைமகளை அவள் இருமுதுகுரவர் கொடுப்பத் தலைமகன் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்க அங்ஙனங் கொள்ளாது கரந்த உள்ளத்தான் அவளை எதிர்ப்பட்டுப் புணர்வது களவு போறலின் இது களவெனப்பட்டது. இக்களவு மற்றைய களவுகள் போலாது சாலவும் சிறப்புடைத்து. இதனை *"இங்குப் பிறவுங் களவுண்மைசொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும், சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான், எனப்படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களவாயினவெல்லாங் கைகுறைப்பவுங் கண் சூலவுங் கழுவேற்றவும் பட்டுப் பழியும் பாவமுமாக்கி, நரகத் தொடக்கத் தீக்கதிகளிலுய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான வொழுக்கத்தோடொத்த இயல்பிற்றாகலானும் பழிபாவமின்மையானும் எனப்படுவதென்று விசேடிக்கப்பட்டது" என்று களவியல் உரையாசிரியர் கூறியவாற்றானறிக. இக்களவொழுக்கத்தை ஆன்றோர் யாழோர் கூட்டம் அல்லது கந்தர்வ வழக்கம் என்பர். இத்தகைய மணம் மன்றலெட்டினுள் கந்தர்வத்தின்பாற்படும்.

மன்றலெட்டாவன:—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமமென்பது ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தானுக்குப் பூப்பெய்திய பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலனணிந்து தீமுன்னர்க் கொடுப்பது. பிராசாபத்திய மென்பது மைத்துன கோத்திரத்தார் மகள் வேண்டிச் சென்றால் தலைமகள் குரவர் மறுதேயுடன்பட்டு அவர் தந்த பரிசத்திரட்டியுடன் தலைமகளை அலங்கரித்துத்

* இறை. அகம். சூ. க. உரை.

தீமுன்னர்க் கொடுப்பது. ஆரிடமென்பது தக்கான் ஒருவற்குப் பசுவும் விடையும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறுத்திப் பொன் அணிந்து நீரிற் கொடுப்பது. தெய்வமென்பது வேள்வி ஆசிரியன் ஒருவற்கு மகளை அணிகலனணிந்து அவ்வேள்வித் தீமுன்னர்க் கொடுப்பது. காந்தர்வமென்பது ஒத்த தலைமகனும் தலைமகளும் தனியிடத் தெதிர்ப்பட்டுக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே கூடுங் கூட்டம். அசுரமென்பது குறிக்கப்பட்டபடி கொல்லேறு தழுவுதல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து மகளைப் பெறுதல். இராக்கதமென்பது தலைமகள் விருப்பத்தையும், அவள் சுற்றத்தார் விருப்பத்தையும் பெறாது வலிதிற் கொள்வது. பைசாசமென்பது மூத்தாண்மாட்டும், துயின்றாண்மாட்டும், கள்ளுண்டாண்மாட்டுஞ் சென்று சேர்வதும், இழிந்தாளை மணஞ்செய்தலும் பிறவுமாம்.

இதனுள் தலைவன் தலைவியர் மனமும் அன்பும் ஒத்து நிகழுங் கந்தர்வ மணமே மற்றவையினுஞ் சிறந்ததென்பர். 'உலகத்து மன்றலாவது குரவர் கொடுப்பதற்கு முன்னர் ஒருவற்கும், ஒருத்திக்குங் கண்ணும் மனமுந் தம்முள் இயைவதேயென வேதமுங் கூறிற்றாதலின்' அஃதே சிறப்புடைத்தாகும்.

பொழிலகத்துப் போந்துநிற்குந் தலைமகன் மெய்ம்மையை உணரும் அறிவும், நல்லொழுக்கமெனும்நிறையும், ஒருபொருளை ஆராய்ந்துணரும் ஓர்ப்பும், கொண்ட பொருள் மறவாக் கடைப்பிடியும் முதலிய பெருமைக் குணம் உடையவனாயிருந்தும் வேட்கை மிகவினால் இவற்றைக் கடந்து நிற்பன். அங்ஙனமே தலைமகளும் நாணமும், மடமும், அச்சமும், பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் பயிர்ப்பும் முதலிய பெருமைக் குணங்கள் உடையவளாயிருந்தும் காதல் மிகவினால் அவற்றைக் கடந்து நிற்பள். இங்ஙனம் நிகழ்வதற்குக் காரணமாயிருந்தது தெய்வக் குறிப்பே. தலைமகன் தமியளாய் நின்ற தலைமகளது கருங்குழல், விற்புருவம், செவ்வாய் முதலிய அவயவங்களின் அழகைக் கண்டு, அவள் தெய்வமகளோ, வரையரமகளோ, நீரரமகளோ வென்று ஐயமுற்று அவளது கால் நிலந் தோய்தலானும், கண்

இமைத்தலானும், ஆடை மாசுண்டலானும் பிறவற்றானும் அவள் மக்களுள் ஒருத்தியேயன்றி வேறன்றென்று துணிவான். துணிந்த அவன் அவளைக் காதல்நோக்குடன் நோக்குவான். அவளும் அவனைக் காதல் நோக்குடன் நோக்குவாள். நோக்கிய போதே உள்ளத்தாற் புணர்ந்தவர் ஆவர். இங்ஙனம் புணர்ந்ததே கந்தர்வமாகும். அங்ஙனம் உள்ளப்புணர்ச்சியோடு அமையாது மெய்யுறு புணர்ச்சியும் நிகழ்த்துவர். இஃது இயற்கைப் புணர்ச்சியெனவும், தெய்வப்புணர்ச்சி யெனவும், முன்னுறு புணர்ச்சியெனவும் படும். இவையெல்லாம் அன்பினானே நிகழுமாகலின் காமப் புணர்ச்சியென்றுங் கூறுப. தெய்வப்புணர்ச்சி நிகழ்த்தியபின்னர்த் தலைமகன் தலைமகளது விரலைச் செங்காந்தளென்றும், கண்ணைக் கருங்குவளையென்றும், செவ்வாயை அரக்காம்பலென்றும் இங்ஙனமே பிற உறுப்புக்களையும் பாராட்டி நயப்புக் கூறுவான். கூறக்கேட்ட தலைமகளும் ஆற்றாளாவாள். அவளை ஆற்றியபின்பு அவ்விடத்தினின்று நீங்காதவிடத்துப் புறத்தார் உணர்வரென்றஞ்சித் தன் பிரிவினையுணர்த்த முயல்வான். அவள்இறந்துபடுவாளென்றஞ்சி மென்மையாக உணர்த்த வேண்டி 'நின்னிற் பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்பது பொருள்படப் பிரிவச்சம் கூறுவன். அதுகேட்டு அவள் மனமுருகி ஆற்றாளாவாள். அவளை ஆற்றவேண்டித் தலைமகன் தன் ஊர் அணித்தென்றும் அதனாற் பலகாலு மிருவரும் காணவும் கேட்கவும் கூடுமென்றும் வன்புறை கூறித் தன் அன்பின் மிகுதி தோன்ற அவளது 'கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி அளகமும் நுதலுந் தகைபெற நீவி, ஆகமுந்தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித், தளிர்ப்ப முயங்கிப்' பிரிவான். அவன் பிரியவே தலைமகளும் ஆயத்தாரை நாடிச் செல்வாள். ஆயமும் தலைமகளையெய்திப் பலவகையான வழிபாடு செய்யும். பிரிந்து செல்லுந் தலைமகன் இதனைக் கண்ணுற்றுத் தலைவியையெய்தியது கனவோவென்று சிந்தித்து இனி அவளை எய்துதல் இயலாதென்று ஆற்றானுவான். ஆற்றாமையினால் உண்டாகிய அவனது வேறுபாட்டைப் பின்னாள் அவன் பாங்கன் கண்டு அதன் காரணத்தை வினவத் தலைமகன்

அவனுக்கு உற்றதுரைப்பான். பாங்கன் கேட்டு அங்ஙனம் மனமுருகி ஆற்றுதிருத்தல் பெருமைக் குணத்திற்கு இழுக் கென்று கூறி அவனைக் கழறுவான். அதுகேட்ட தலைமகன் அவள் திருவுருவைக் கண்டவர் அங்ஙனங் கூறுரென்று எதிர்மறுத்துக் கூறுவான். அவனது ஆற்றுமையைக் கண்ட பாங்கன் தான் இடனன்றிக் கழறினதற்கு இரங்கிப் பின் அவ் வுருவைக் கண்டது எவ்விடத்து அஃது எத்தன்மைத்து என்று கேட்டறிந்து அவன் சொன்ன இட நோக்கிச் செல் வான். சென்று அவ்வுருவினைக் கண்டு தலைவன் ஆற்றுமை தக்கதே யென்றறிந்து பின்னர் அவன்பாற் சென்று அவனை யெய்துமாறு கூறுவான். தலைமகன் அவ்விடம் நோக்கிச் சென்று தனியளாய் நின்ற தலைமகளைக் கண்டு சில சொற்கள் கூறி அவள் குறிப்பறிந்து சார்ந்து கூட்டம் பெறுவான். இது பாங்கற்கூட்டம் எனப்படும்.

இனிப் பாங்கனல் வினவப்பட்டுக் குறிதலைப் பெய்தலின் றித் தானே முன்தலைமகளை எதிர்ப்பட்ட இடநோக்கிச் சென்று அவளைக் கண்டு முற்கூறியவாறு அவளைச் சார்ந்து புணர்வது முண்டு. இஃது இடந்தலைப்பாடு எனப்படும். பாங்கற்கூட் டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிக ழிற் பாங்கற்கூட்டம் நிகழாது

இவ்வாறு புணர்ந்த தலைமகன் பாங்கியிற்கூட்டம் பெற விரும்பிப் பிற்றை நாள் தலைவியும் தோழியும் ஒருங்கே யிருக் குஞ் செவ்வி நோக்கித் தழையுங் கண்ணியுங் கையுறையாகக் கொண்டுசென்று அவற்றினைத் தோழியிடத்துக் கொடுத்துத் தன் குறையிரப்பான். தலைவியின் வேறுபாட்டைக் கண்டு முன்னரே ஐயுற்றிருந்த தோழி அவன் குறையிரந்து பின்னிற் றல் அவள் பொருட்டே என்று அறிந்தாளாயினும், முதலில் உடம்படாது தலைவியின் இளமை பேதைமை முதலியவற் றைக் கூறி அவன் குறையை மறுப்பாள். மறுக்கவே தலை மகன் மடலேறுதல், வரைபாய்தல் முதலிய இளிவந்தன செய் தாயினும் அக்குறை முடிப்பேன் என்பான். பின்னர்த் தோழி அவனை ஆற்றி அவன் குறையை முடித்துவைப்பதாகக் கூறு

வாள். தோழி தலைமகன்மாட்டுச்சென்று அவனது பெருமை யெல்லாம் எடுத்துக்கூறி அவன் தந்த தழையையும், கண்ணியை யும் புகழ்வாள். அங்ஙனம் அக்கையுறை தந்தவன் தன் காதல னென்று தலைமகளறிந்தும் அறியாள் போன்றிருப்பாள். பின் னருந் தோழி அவனது தலைமைக் குணத்தையும் அன்பையும் விதந்து கூறிக் குறைநயப்பிப்பாள். தலைமகளும் அக்கையுறை யை ஏற்றுத் தன் குறிப்பை யுணர்த்துவாள். தோழி அவன் குறிப்பைத் தலைமகனுக்குணர்த்த அவன் தலைமகளைச் சார்ந்து கூட்டம் பெறுவான். இது பாங்கியிற் கூட்டம் எனப்படும்.

இங்ஙனம் கூட்டம்பெற்ற தலைமகன் தலைமகளைக்கண்டு கூடும் இடத்தைக் குறித்துக்கொண்டு அங்கே அவளை நாடோ றும் பகலிலெய்திக் கூடி மகிழ்வான். இது பகற்குறி எனப் படும். சுற்றத்தார் தலைவியை இல்லின்கண்ணே செறித்த வழித் தோழியின் உதவியால் தலைவன் அங்கே இரவிற்சென்று கூட்டம் பெறுவான். இஃது இரவுக்குறி யெனப்படும் இங் ஙனம் நிகழுங்கால் தலைவி தலைவன் வரும் ஆற்றின் கொடுமை யையும், அவன் வந்தும் கதநாய் குரைப்பினும், காவலர் கடுகி னும், நிலவு வெளிப்படினும், தாய் துஞ்சாதிருப்பினும் கூட் டம் பெறாது செல்வதையும், காமங் கைம்மிகுதலையும் நினைந்து உரு வேறுபடுவாள். இவள் வேறுபாட்டைக் கண்ட தாய் அது தெய்வத்தானாயிற்றென்று வெறியாட்டு எடுப்பாள். இனி அக்களவொழுக்கத்தை மறைத்து வைத்தல் குற்றமாமென்று தோழியறிந்து நடந்தவற்றைக் கூறுதல் அறமென்று நினைத் துச் செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். அவள் நற்றாய்க்கும், நற்றாய் தந்தை தமையன்மார்க்கும் அறத்தொடு நிற்ப, அவர் மணத்தை முடித்தல் நலமென்று கருதுவர். தோழி காவலின் கடுமையையும், அவன் வரும் ஆற்றின் கொடுமையையும் பிற வற்றையும் தலைமகனுக்கு எடுத்துக்கூறி வரைவு கடாவுவாள். அஃதாவது தலைவியை மணந்து கொள்ளுமாறு சொல்லுவாள். அவன் அதற்கிசைந்து வரைந்துகொள்ளுதற்கு யாதோர் இடையூறு மிராவிடின் தலைவியின் பெற்றோர் இணக்கத்தை யறிந்து மணந்து கொள்வான்.

அங்ஙனமின்றிப் பொருட் குறைபாட்டால் மணமுடிக்க வியலாவிடின் வரைவை இடையிட்டு நீக்கி வைத்துத் தலைமகன் பொருள் தேடச் செல்வான். பொருள் தேடிவந்து சுற்றத்தார்க் குத் தன்கருத்தைத் தெரிவித்து அவளை வரைந்து கொள்வான்.

இனி அங்ஙனமின்றி அவர்கள் ஒழுகிவருங் களவு வெளிப் பட்டு அலர் பெருகியவிடத்தும், பிறர் அவளை மணக்க நேரிடுங் காலத்துந் தலைமகன் அவளை வெஞ்சுரங்கடந்து வேற்றூர்க்கு உடன்கொண்டுபோக முயல்வான். இதனைத் தோழியாலறிந்த தாயும் மற்றைய சுற்றத்தாரும் சுரத்தினருமையும், தலைவியது கற்பு நிலைமையுமறிந்து அவளை அவனுக்கே கொடுப்பார். அங் ஙனம் மணமுடித்துக் கொள்வதற் கியலாதாயின் தலைவன் தலை மகளை யாரும் அறியாவண்ணம் உடன்கொண்டு செல்வான். அங்ஙனஞ் சென்றவர்கள் தாமே மணந்து கொள்வதுமுண்டு. அங்ஙனமின்றிச் செவிலியும், பிறரும் அவளைத் தேடிச்சென்று வழியில் கண்டவர்களால் அவர்கள் சுரத்திடை யுள்ளாரகளென் றறிந்து அவர்களை அங்குக் கண்டு மீட்டுவந்து மணமுடித்தலு முண்டு.

களவொழுக்கத்தில் வரைதல் இரண்டு வகைத்து. அவை களவு வெளிப்படாதமுன் வரைதலும், களவு வெளிப் பட்ட பின்றை வரைதலுமென்பன. அறத்தொடு நிற்றற்கு முன்பு வரைதல் முன்னதையும், அதற்குப் பின்பு வரைதல் பின்னதையுங் குறிக்கும். முன்னது பல விகற்ப முடைத்து. பின்னது விகற்பமின்று இதனை * "இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னே தெருண்டு வரைதலும் உரியன்; அங்குத் தெருளானாய்விடிற் பாங்கற்கூட்டங் கூடித் தெருண்டு வரை தலும் உரியன்; அங்குத் தெருளானாய்விடின் தோழியை இரந்து பின்னின்று அவள் தனையுருத்தகைமை செய்துத் தெருண்டு வரைதலும் உரியன்; அங்குத் தெருளானாய்விடின் மதியுடம்படுத்து இரந்து பின்னின்ற நிலைமைக்கண் தோழி சேட்படுப்பத் தெருண்டு வரைதலும் உரியன்; அங்குத் தெரு

---

* இறை. அகம். சூ. உச. உரை.

ளானுய்விடின் தோழியிற் கூட்டங் கூடியாதல் செறிப் பறிவுறுக்கப்பட்டாதல் இரவுக்குறியது ஏதங்காட்டவாதல் வரைவு கடாவப்பட்டாதல் தெருண்டு வரைதலும் உரியன். ஈதெல்லாங் களவு வெளிப்படா முன்னுறவரைதல் விகற்பமெனக் கொள்க. இனி வெளிப்பட்ட பின்றைவரைதல் விகற்பமின்றெனக் கொள்க" என்னுங் களவியலுரையானறிக.

இக்களவொழுக்கம் நிகழ வேண்டுவது இரண்டு திங்களென்பர் இறையனார்.

இதுகாறுங் கூறியது களவொழுக்கத்தின் இயல்பாகும்.

இனிக் கடிமணமயர்ந்த காதலர் இருவர் இல்லிருந்து அறமாற்றி ஒழுகுவது கற்பொழுக்கமெனப்படும்.

கற்பொழுக்கம்.

இருமுதுகுரவராற் கொடுக்கப்பட்ட தலைவியைத் தலைமகன் ஏற்று விதிப்படி மணந்துகொண்டு அவ்விருவரும் நீதி வழுவாது இல்லிருந்து ஆற்றும் அறவொழுக்கம் கற்பொழுக்கமெனப்படும். கற்பென்பது இல்லாளுக்குச் சிறந்த தெய்வமாகிய கணவனும், இருமுது குரவரும் இவ்வாறொழுக வென்று கற்பித்த சொல்லைத் தலைமகள் பிழையாமல் காத்தொழுகுவது.

தலைமகன் தலைமகள் இருவர் மனமும் இயைந்த குறிப்பையறிந்த பின்பே குரவர் கடிமணம் முடிப்பது முன்னாள் வழக்கம். தலைமகன் தலைமகளுக்கு வேண்டிய அணிகலனைப் பரிசமாகக் கொடுத்து அவளைப் பெறுவான். தலைமகன் கடிமணம் நிகழ்ந்தபின் முதல் மூன்றிரவும் முயக்கமின்றி நான்காம் நாள் அவளுடன் கூடி இன்புறுவான். இங்ஙனம் கூடி இன்புற்று இல்லறம் நடாத்திவரும் நாளிற் சில காரணத்தை முன்னிட்டுத் தலைமகன் தலைவியைப் பிரிந்து செல்வான். அங்ஙனம் பிரிதல் கற்பொழுக்கத்திற் பலகாலும் நிகழ்தலுண்டு. களவொழுக்கத்திற் பிரிவு ஒருகாலல்லது வேறில்லை.

அங்ஙனந் தலைவியை விட்டுப் பிரிதல் அறநூல்களை ஓதுதற் பொருட்டாவது, நாடுகாத்தற் பொருட்டாவது, மாறுபட்ட இருபெருவேந்தரைச் சந்துசெய்தற் பொருட்டாவது, வேந்

தற்குத் துணையாய்ப் போர்செய்தற் பொருட்டாவது, பொருளீட்டும் பொருட்டாவது, பரத்தையர் பொருட்டாவது நிகழும். இவற்றுள் ஓதலுந் தூதும் அந்தணர்க்கும், அரசர்க்கும், வணிகர்க்கும் உரியன; காவற்பிரிவும், பகைவயிற் பிரிவும் அரசர்க்கே சிறப்பாக உரியன; பொருள்வயிற் பிரிதல் வணிகர்க்கும், வேளாளர்க்கும், வேந்தற்குற்றுழிப் பிரிதல் பெரும்பான்மையும் வேளாளர்க்கும் உரியன; பரத்தையிற் பிரிவு எல்லார்க்கும் உரித்து. இவற்றுள் கலத்திற் பிரிவு வேளாளர்கடும் காலிற் பிரிவு ஏனையோர்க்கும் உரியவென்ப. தலைமகன் பொருள் வயிற் பிரிந்து கடன்மேற் செல்வானாயின் தலைமகளைக் கலத்தில் உடன்கொண்டு போகான். ஓதலும், தூதும், பொருளுங் குறித்துத் தலைமகன் பிரிந்தால் தலைவியை உடன்கொண்டு செல்லானென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்தால் பாசறைக்குத் தலைமகளை உடன் அழைத்துச் செல்லான். இவற்றுள் ஓதற் பிரிவு மூன்று ஆண்டுகளுக்குள்ளும் மற்றைப் பிரிவுகளெல்லாம் ஓர் ஆண்டுக்குள்ளும் முற்றுப் பெறவேண்டும்.

தலைமகன் பிரிந்து செல்லுமிடத்துத் தலைமகள் அவன் பிரிவு ஆற்றாது இரங்குவாள். தலைமகனும் இரங்கி அவளைத் தேற்றி இன்ன இருதுவில் இன்ன திங்களில் யான் மீண்டு வருவேனென்று கூறிச் சில குறிகளுஞ் செய்து விட்டுச் செல்வான். தலைமகளும் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து இல்லறம் ஆற்றிவருவாள். அவன் குறித்த பருவம் வந்தவிடத்து அவன் பிரிவிடை ஆற்றாது வருந்துவாள். தோழி அவள் ஆற்றாமை கண்டு வருந்தித் தலைவன் குறித்த பருவம் அஃது அன்றென்றும், அவன் செய்த குறிகள் வந்தமையான் அவன் வாராநிற்கின்றானென்றும் பிறவுங் கூறித் தலைவியை ஆற்றுவிப்பாள். தலைவனும் தான் குறித்துச் சென்ற வினை முடித்துக் குறித்த பருவம் வரவே மீண்டு வருவான். மீளும் வழியில் தான்செய்த குறிகளெல்லாம் தோன்றும். அது பொருட்டுத் தலைமகள் ஆற்றாளென்று பாகற்குக் கூறித் தேரை விரையச் செலுத்தச் செய்வான். கடுகிவந்து

தலைமகளை யெய்தி விருந்தயர்வான். பின்னர் இருவரும் பிரிந்திருந்த விடத்து நிகழ்ந்த செய்திகளையெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு மகிழ்ந்து இன்புற்று வாழ்வார்.

இனிப் பரத்தையர் பொருட்டுப் பிரிதலின்கண் தலைமகன் நாடிடையிட்டு நீங்கி உறைதலிலன். அஃது ஒரூர், ஓரிடத்தே நிகழற்பாலது. காமக்கிழத்தியர், காதற் பரத்தையரென்று இருதிறத்தராவர் பரத்தையர். 'காமக் கிழத்தி யென்பார் சேரிப் பரத்தையர்போலப் பலர்க்கு முரியாரன்றி யொருவற்கே யுரிமைபூண்டுவருங் குலப் பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவர். காதற் பரத்தையரென்போர் யாவரையும் விரும்பாத வியல்பினன் மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த் தம்மன்பினுற்றலைமகனோடு கூடுவோர்.'

தலைமகன் பொழிலிடத்தே விளையாடுதற் பொருட்டாகவும், புனலாடுதற் பொருட்டாகவும் பரத்தையரைத் தேர்மீதேற்றிச் செல்வான். தலைமகன் பரத்தையரின்பம் நுகர்ந்து மீண்டு வந்தவிடத்துத் தலைவி ஊடல் பாராட்டுவாள். தலைமகன் அவள் ஊடலைத் தணிக்கும் பொருட்டுத் தோழி, பாங்கன், பாணன், இளையர் முதலியோர்களை வாயில்களாகப்போக்கி அவள் ஊடலைத் தவிர்த்துச் சென்று சேர்வான் பின்னிருவருங் கூடி இன்புற்று வாழ்வார்.

தலைமகள் பூப்பெய்தியபின் ஈராறு நாளும் அவட்குக் கருப்படுங் காலமாதலால் தலைமகன் அக்காலத்தில் பரத்தையர் பொருட்டுப் பிரிந்திருத்தல் கூடாதென்பர். அவன் பிரிந்திருந்த விடத்து அவள் பூப்பெய்தின் அச்செய்தியை அவனுக்குத் தோழி முதலிய வாயில்களால் உணர்த்துவர். உணர்ந்த தலைமகனும் வாயில்களோடு சென்று தலைமகளிடத்தனுய் முன் மூன்றுநாளும் சொற்கேட்டுப் பின் ஒன்பதுநாளும் கூடியுறைவான். அங்ஙனம் அவன் ஒழுகாவிடின் அஃது அறநெறியன்றென்பர் ஆன்றோர். இதுகாறுங் கூறியது கற்பொழுக்கத்தினியல்பு.

இங்ஙனம் இல்லறம் நடாத்தித் தலைவனும் தலைவியும் வெறுக்குமளவும் காம இன்பம் துய்த்து மக்களைப் பெற்று முதுமை யெய்தியபோது துறவறம் மேற்கொண்டு வானப்பிரத் தமும் சந்நியாசமும் விதிப்படி அநுஷ்டித்து மெய்யுணர்ந்து வீடு பெறுதலே இவ் வகவொழுக்கத்தின் இனிது முடிந்த பொருள்.

அகவொழுக்கம் நிகழுமிடத்துக் காதலர் உள்ளத்தின்கண் நிகழும் நிகழ்ச்சியை அவர் மெய்யின் குறிப்புகள் புலப்படுத்தும். அவைமெய்ப்பாடெனப்படும். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகையென்று எட்டு வகைப்படும். நகையென்பது சிரிப்பு. அழுகை யென்பது அவலம். இளிவரலென்பது இழிபு. மருட்கையென்பது வியப்பு. அச்சமென்பது பயம். வெகுளி யென்பது கோபந் தோன்றக் கூறுவது; அஃது உருத்திர மெனப்படும். உவகை யென்பது மகிழ்ச்சி. இவையெல்லாம் அகத்திணைக்குப் பொதுவாகவரும் மெய்ப்பாடுகள். புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல் முதலிய மெய்ப்பாடுகள் களவொழுக்கத்திற்குச் சிறப்பாய் நிகழ் வனவாம்.

அகப்பாட்டிடத்து உள்ளுறை உவமப்பொருளும், இறைச் சிப் பொருளும் பயின்று வருதலுண்டு. உள்ளுறை உவமமென் பது புலவன்தான் புலப்படக்கூறும் உவமத்தோடே புலப்படக் கூறாது உவமிக்கப்படும் பொருள் தான் கருதியவாறே பிறர் மனத்தின்கண்ணுந் தோன்றுதற்குக் கருவியாகிய சொல்லெல் லாங் கிடப்பச் செய்வது. ஒரு பொருளை உள்ளுறுத்து அதை வெளிப்படையாய்க் கூறாமையான் அஃது உள்ளுறையெனப் பட்டது. இவ்வுள்ளுறை யுவமம் பெரும்பான்மையும் அகத் திணைப்பாட்டிற் பயின்றுவரும். புறப்பாட்டில் அருகி வரும். இது தெய்வமொழிந்த புள் விலங்கு முதலிய கருப்பொருள் களையே தனக்கு நிலைக்களனாகக் கொண்டு தோன்றும்.

இறைச்சியென்பது உள்ளுறையுவமம் போல் உள்ள கருப் பொருள் ஒன்றனுள்ளே பிறிதோர் பொருள்கொள்வது. இது கருப்பொருளைப் பற்றி வருதலான் இறைச்சியெனப் பட்டது.

இஃது உடனுறை யெனவும்படும். இவ்விறைச்சிப் பொருள் அகத்திணைப்பாட்டிலே பயின்றுவரும். இது தெய்வ முதலாகிய கருப்பொருள்களையே தனக்கு நிலைக்களனாகக் கொண்டு புலப் படும்.

ஓர் அகப்பொருட் செய்யுளிற் சில அடிகளில் வரும் கருப் பொருள்களாற் பெறப்படும் உள்ளுறைப்பொருள் அச்செய்யு ளின் மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளுக்குதவியாகி அதனோடியைந்து ஒருபொருள் பயந்தால் அஃது உள்ளுறை யுவமமாகும். ஈண்டுக்கருப்பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இல்லையாயின் அச்செய்யுளின் கருத்து முற்றுப்பெறா மலும் நன்கு விளங்காமலும் நிற்கும். அங்ஙனமின்றி அக்கருப் பொருளாற் பெறப்படும் உள்ளுறைப்பொருள் மற்றைய அடி களாற் பெறப்படும் பொருளுக்குதவியாகாமல் அதனோடியை யாது வேறொரு பொருள் தோற்றுவித்து நின்றால் அஃது இறைச்சியாகும். ஈண்டுக்கருப்பொருளாற் பெறப்படும் உள்ளு றைப்பொருள் இராவிடினும் செய்யுளின் கருத்து முற்றுப் பெற்றும் நன்கு விளங்கியும் நிற்கும். நுண்ணறிவுடைய புல வோரே இவற்றின் வேறுபாட்டை உய்த்துணர்வார். ஏனை யோர்க்கு அஃது இயலாது.

இவற்றின் விரிவெல்லாம் விரிந்த நூலிற் கண்டு கொள்க.

கார்நாற்பது முல்லைத்திணை.

இந்நூலுக்குக் கார்நாற்பது என்று ஆசிரியர் பெயர் கூறி னார், கார்காலத்தின் சிறப்பை நாற்பது பாக்கள் விதந்து கூறுத லின். இந்நூல் காலம் பற்றித் தோன்றிய தென்பதைக் "காலம் இடம்பொருள் கருதி நாற்பான், சால வுரைத்தல் நானாற் பதுவே" (இலக்கண விளக்கம், பாட்டியல். சூ. ௬௧) என்பதனானறிக. கார்காலம் முல்லைத்திணைக் குரித்தாகலின் அத்திணை பற்றியே அக்காலம் சிறப்பித்துக் கூறப்பட்டுளது. முல்லைத்திணை என்பது இருத்தலாகிய அகவொழுக்கம். இருத் தல் என்பது இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று காதலன் கூறிய சொல்லைப் பிழையாமல்

காதலி அவன் வருந்துணையும் ஆற்றியிருக்கு மொழுக்கமே யாகும். தலைமகன் சொல்லியவாறு இல்லிருந்து அவன் குறித்த பருவம் வந்தும் அவன் வாராமையான் வருந்தும் 'தலைமகளது இருத்த லொழுக்கம் 'முல்லை' சான்ற கற்பொழுக்க மாதலின், இது 'கற்பு' என்னும் கைகோளின்பாற்பட்டது.

இந்நூல் 'முல்லை' என்னும் அகவொழுக்கத்தையே விதந்து கூறுதலின் அத்திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள் களையே கூறுகின்றது.

முதற்பொருள்.

நிலம். 'நெடுங்காடு நேர்சினை யீன' 'காடுங் கடுக்கை கவின் பெறப் பூத்தன' 'கோபந் தவழுந் தகைய புறவு' 'புல்லென்ற காடு' 'பூத்தன காடு' 'காயாவு நுண்ணரும் பூழ்த்த புறவு' 'பூங்குலை யீன்ற புறவு' 'புறவெல்லாந் தண்டுளி யாலி புரள' என்பன.

காலம்.

பெரும் பொழுது : 'வானங்கருவிருந் தாலிக்கும் போழ்து' 'கார்செல்வ மெய்த' 'எழில்வான மின்னும்' 'தண்புறவி னாலி புரள உருமிடி வான மிழிய வெழூஉம்' 'எச்சாரு மின்னும் மழை' 'ஒளிறுபு மின்னு மழை' 'நறுந்தண்கார் மெல்ல வினிய நகும்' 'கார்வான மெல்லவுந் தோன்றும் பெயல்' 'பெருவிறல் வானம் பெருவரை சேருங் கருவணி காலம்' 'எழிலி யிருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும் பெரும்பதக் காலை' என்பன.

சிறுபொழுது : இந்நூல் இத்திணைக்குரிய சிறுபொழு தாகிய மாலைக்காலத்தை வெளிப்படையாகக் கூறாவிடினும் 'முல்லை யிலங்கெயி றீன' 'சிறுமுல்லைப் போதெல்லாம்...... ....முள்ளெயி றேய்ப்ப' 'திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி யின்குழ லூதும் பொழுது' 'பாடு வண்டூதும் பருவம்' 'படாஅ மகிழ்வண்டு பாண்முரலும்' என்னுந் தொடர்கள் மூலமாக அக்காலத்தைக் குறிப்பாயுணர்த்திச் செல்கின்றது. அல்லி, மல்லி, முல்லை முதலிய வெண்மலர்கள் மலர்தலும், வண்டு பூக்களை யூதத் திரிதலும் பெரும்பான்மையும் மாலைக் காலத்தே நிகழும் நிகழ்ச்சிகள். இவற்றை,

"முல்லை நறுமல ரூதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாரு மின் னெஞ்சினே மாகி யுறைவேமை
யீரு மிருண்மாலை வந்து" (ஐந்திணை ஐம்பது. ௬.)
"செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினற்
பைங்கொடி முல்லை மணங்கமழ வண்டிமிர்
காரோ டலமருங் கார்வானங் காண்டோறு
நீரோ டலவருங் கண்." (ஐந்திணை எழுபது. கரு.)

என்னும் ஐந்திணைச் செய்யுள்களானும்,

"மௌவல் விரியு மணங்கமழ் மான்மாலைத்
தையன் முதுகுரம்பைத் தான்றமியள்"

என்னும புறப்பொருள் வெண்பாமாலை அடிகளானும்,

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது"

என்னும் புகழேந்திப் புலவர் வாக்கானும் அறிந்து கொள்க.

கருப்பொருள்.

தெய்வம். 'பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்.'

உணவு. 'கருங்கால் வரகின் பொரிப்போல்.'

நீர். 'கான்யாற் றிரலியிற் கடுமான்றேர்.'

மரம். 'காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன' 'கண்ணிய லஞ்சனந் தோய்ந்தபோற் காயாவும்' 'குருந்தின் குவியிண ருள்ளுறை யாக.'

பூ. 'முல்லை யிலங்கெயி றீன' 'சிறுமுல்லைப் போதெல் லாம்' 'எரிவனப் புற்றன தோன்றி' 'புலமெலாம் பூத்தன தோன்றி' 'ஈர்ந்தண் தளவந் தகைந்தன.'

பறை. 'வென்றி முரசி னிரங்கி.'

செய்தி. 'இரும்புன மேர்க்கடி கொண்டார்.'

இந்நூலில் முல்லைத்திணைக்குரிய கருப்பொருள்களேயன்றிப் பிறதிணைக் குரியனவாகிய பாதிரி, மரா, மயில், யானை, முருகியம் முதலிய கருப்பொருள்களும் வந்து மயங்கியுள்ளன. அவையும் *'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்' என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியமையான் மயங்கிய நிலத்தின் கருப்பொருள்களாக எண்ணப்படும்.

உரிப்பொருள்.

இருத்தல். தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்து அவன் குறித்த பருவமும் குறிகளும் வந்தவிடத்து அவள் ஆற்றுதிருத்தலை இந்நூல் உணர்த்தலின் இருத்தல் கூறியவாறாயிற்று.

இருந்த ளமித்தம்.

ஆற்றாது தோழிகூறுதல்: 'உருமிடி வான மிழிய வெழுமே நெருந லொருத்தி திறத்து' 'சேர்ந்தன செய்குறி வாரா ரவரென்று கூர்ந்த பசலை யவட்கு' 'வானம் பெருவரை சேருங் கருவணி காலங் குறித்தார் திருவணிந்த வொண்ணுதல் மாதர் திறத்து' 'வென்றி முரசி னிரங்கி எழில்வான நின்று மிரங்கு மிவட்கு' என்பன.

தலைவர் வருவரென்று வற்புறுத்துதல்: 'வருது மெனமொழிந்தார் வாரார்கொல்' 'இன்னே வருவர் நமர்' 'சென்றார் வருதல் பொய்யன்மை' 'பிரிந்தார் வரல்கூறும்' 'துறந்தார் வரல்கூறும்' 'கடுமான்றே ரென்றோழி மேனி தளிர்ப்ப வரும்' 'ஐயந்தீர் காட்சி யவர்வருத றிண்ணிதாம்' 'காதலர் வல்லே வருதல் தெளிந்தாம்' 'பெரும்பதக் காலையும் வாரார் கொல்' என்பன.

தோழி தலைமகளை ஆற்றுவித்தல்: 'தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ ஒண்டொடி யூடுநிலை' 'உள்ளா தகன்றாரென் றாடியாம் பாராட்டப் பள்ளியுட் பாயும் பசப்பு' 'எவன்கொலோ வொண்டொடி யூடு நிலை' என்பன.

---

*தொல். அகம். ரு. கக.

தலைமகன் பாசறைக்கண் இருந்தும், மீளும்வழியில் தேர்மீதிருந்தும் உரைத்தல்: 'தொடிபொலி முன்கையா டோடுணையா வேண்டி நெடுவிடைச் சென்றதென் னெஞ்சு' 'எல்லா வினையுங் கிடப்ப வெழுநெஞ்சே.....பல்லிருங் கூந்தல் பணிநோனாள்' 'தண்பதஞ் செவ்வி யுடையதா னெஞ்சே காதலியூர் கவ்வை யழுங்கச் செலற்கு' 'ஊதை யுளரு நறுந்தண்கா பேதை பெருமடம் நம்மாட் டுரைத்து' 'செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர் நல்விருந் தாக நமக்கு' என்பன.

கார் நாற்பது.

ஒரு தலைமகன் தான் வேந்தற்குற்ற துணையாய் நின்று போர் புரிந்து வெற்றிபெறச் செல்லவேண்டியதாயிருந்தது. தலைமகள் அதனை உணர்ந்து அவனுடைய பிரிவுக் காற்றாது இரங்குவாளாயினள். தலைமகன் அவளைத் தேற்றிக் கார்காலம் தொடங்கும்போது மீண்டுவருவதாகக்கூறி, வருங் காலத்தைக் குறிக்குஞ் சில குறிகளையுஞ் செய்துவிட்டு நலமாய்ப் பிரிந்து சென்றான். கணவன்சொற் பிழையாது ஒழுக வேண்டுவது கற்புடைய பெண்ணுக் கிலக்கணமாதலின், தலைவன் சென்றபின் தலைமகளும் அவன் பிரிவினை ஆற்றிக்கொண்டிருந்தாள். வேனிற் பருவங்கழிந்து அவன் குறித்த கார்ப் பருவம் வந்தது. குறித்த பருவம் வந்தும் தலைமகன் வாராமையால் தலைமகள் அவன் பிரிவுக்கிரங்கி வருந்துவாளாயினள். தோழி அவளது ஆற்றாமை கண்டு இரங்கி அவளைப் பல வாறாக ஆற்றத் தொடங்கினாள்.

'மாயோன் மார்பிலுள்ள பூமாலை போன்ற இந்திரவில்லைக் குலைக்காக நிறுத்தி மழை பெய்யும்பொழுது வருவேமென்று தலைவர் சொன்னார். அங்ஙனம் மழை பெய்யும் இப்பொழுது அவர் வாராமலிருப்பரோ' என்று தோழி வற்புறுத்தினாள். வற்புறுத்தியும் தலைவி அவர் வருங்காலம் நீடுமென்று ஐயுற்று வருந்தவே தோழி 'கார்காலம் வளப்பத்தை யடையும்வண்ணம் மின்னும் வானம் தலைவர் இப்பொழுதே வருகின்றார் என்னுஞ்

செய்தியைத் தூதாக அறிவிக்க வந்தது போலிருக்கின்றது. ஆதலால் நீ எதற்கு வருந்துகிறாய்' என்று மீண்டும் வற்புறுத்தினாள். வற்புறுத்தியுந் தலைமகள் ஆற்றாளாயினள். அவள் ஆற்றாமையைத் தோழி கண்டு 'பாதிரிப்பூ வாடவும், காட்டில் ஆலங் கட்டிகள் புரளவும் பெய்யும் மழை தனித்திருக்குந் தலைவியை உயிர் போக்கும் வகை வருத்துகின்றதே' என்று நினைத்து வருந்தித் தலைவியை மேலும் ஆற்ற வேண்டி 'மயில்களெல்லாம் அழகாக ஆடுகின்றன. கொன்றை மரங்கள் அழகாகப் பூத்தன. வண்டுகளும் இனிமையாகப் பாடுகின்றன. இப்பருவம் உன்னுடைய பிரிவின் நோயை நீக்கும். எனெனின் தலைவர் வரும் பருவம் இதுவேயாயினமையின்' என்று கூறினாள். தலைவி அது பொய்யென்று கருதி வருத்த மிகுதியால் தானணிந்திருந்த பவள வடத்தைப் பரிந்தெறிந்தாள். அதுகண்டு தோழி 'சிண்டுச் சிதறிய பவளம்போலக் காட்டிற் கோபங்கள் தவழ்கின்றமையின் தலைவர் வருதல் பொய்யன்று' என்று கூறினாள். கூறியும், பிரிவிடை ஆற்றாது மெலிந்த தன் தோள் நோக்கித் தலைமகள் வருந்தவே, தோழி 'நெடியவழிச் சென்றவர் மீளும்வண்ணம் இடியுடன் மழைபெய்கின்றது. எப்பக்கமும் மின்னுகிற்கும் மழை நம் தலைவரை நமக்கு எங்ஙனமாயினும் கொண்டுவந்து தரும். காயாவும் தோன்றியும் மலர்ந்தன. எருமைகள் வெகுளும் வண்ணம் இடி இடித்து மழையும் பெய்கின்றது. ஆதலாற் கான்யாற்றொலிபோல் ஒலிக்குந் தேரை ஊர்ந்து நம் தலைவரும் வருவர். வாடிய உன்மேனி இனித் தளிர்க்கும்' என்று தலைவிக்குக் கூறி வற்புறுத்தினாள். தலைமகள் தலைவர் காலந் தாழ்த்தே வருவர் என்று கருதி ஆற்றாளாயினள். அதுகண்டு தோழி 'பாம்பின் படம்போற் கோடல்கள் மலர்ந்தமையான் அவர் வல்லே வருவர். முகில்களும் நாடோறும் வலமாக மேலெழுகின்றமையானும், முல்லைக்கொடிகள் பற்கள்போன்ற அரும்புகளை ஈன்றமையானும் அவர் வல்லே வருதல் திண்ணிது' என்று கூறி, அவளை ஆற்றுவாளாயினள். தலைமகள்தேறாது தலைவர் தன்னை விட்டு நீங்கியே விட்டாரென்று வருந்தவே, தோழி 'குருந்

தினது மலர்களிடத்தில் வண்டுகள் இனிமையாகப் பாடுகின்ற இக்காலத்தில் தலைவர் நம்மைவிட்டு நீங்கார். குயில்கள் பாடுதலை யொழிந்தன. மயில்கள் களிப்புடன் ஆடுகின்றன. பாம்புகள் வருந்தும் வகை இடியுடன் மழையும் பெய்கின்றது. உலர்ந்த காடுகளெல்லாம் தழைத்து அழகாய் விளங்குகின்றன. அவர் குறித்தபருவம் இஃதே யானமையால் தலைவர் விரைவில் வருவர். இனி உன்னுடைய பசலை நோய் ஒழிந்து நுதல் பிறைமதிபோல் ஒளிபெற்று விளங்கும்' என்று கூறி அவளை ஆற்றிக்கொண்டிருந்தாள்.

நெடிய கானத்தைக் கடந்து சென்ற தலைமகனும் வேந்தற்குற்றதுணையாய் நின்று மாற்றரசரொடு பொருது வெற்றி பெற்றுப் பாசறைக்கண் தங்கியிருந்தான். அன்று வேனிற்காலமும் கழிந்து கார்ப்பருவமும் தொடங்கிற்று. தொடங்கவே தலைமகனும் தலைமகளை நினைக்க நேர்ந்தான். நினைந்து 'மராமரங்களின் வெண்மலர்களும் பூத்தன. வேந்தனுடைய போர்த்தொழிலும் முற்றுப்பெற்றது. செல்வதற்கு வழியும் நல்ல பக்குவத்தையடைந்துளது. முகில்களும் ஒருங்கு திரண்டு செல்கின்றன. எம்மருங்கும் முல்லைப்போதுகள் தலைமகளது கூரிய பற்கள்போலத் தோன்றுகின்றன. காடுகளும் அழகாகப் பூத்து விளங்குகின்றன. யான் குறித்துவந்த பருவம் வந்துவிட்டமையான் இனியான் செல்ல வேண்டும். தலைமகளது தோளின் இன்பத்தை நுகர என் மனமும் நாடுகின்றது. ஆதலான் மீளுதற்குச் சேவகர்கள் முற்பட்டிருக்க வேண்டும். குதிரைகளைத் தேரில் பூட்டி மீளமுயல வேண்டும்' என்று பாகற்குச் சொன்னான்.

இங்ஙனம் இங்குத் தலைமகன் மீள முயன்றுகொண்டிருக்கத், தலைமகள் தலைமகன் மீளாது நீங்கி விட்டான் என்று நினைத்து வேறுபட்டுப் பிணக்கத்தைப் பாராட்ட, அதுகண்டு தோழி 'காட்டினிடத்தே முத்துக்கள்போல ஆலங்கட்டிகள் புரளும் வகை மழை பெய்கின்றமையால் தலைவர் போர்த்தொழிலொழிந்து விரைவில் வருவர். ஆதலான் நீ வேறுபடுவது எதற்கு' என்று கூறித் தலைமகளை வற்புறுத்தினாள்.

தலைமகனும் 'காட்டின்கண் யானையின் மதநீர் நாற்றம் வீசுதலானும் கரியவானம் மென்மையாகப் பெய்கின்றமையானும் தலைமகள் இனி வருந்துவாள்' என்று நினைத்துத் தான் வருஞ்செய்தியை முன்னரே யறிவிக்கத் தூது போக்கினான்.

தலைவிக்கு ஆறுதல் சொல்லியும் வேறுபட்டிருந்தமையால் தோழி ஆற்ருது 'வரகினது பொரிபோலக் காட்டில் தெறுழினது மலர்கள் மலர்ந்தன. தலைவர் செய்த குறிகளெல்லாம் வந்தும் அவர் வாராமையால் தலைமகட்குப் பசலை மிகுந்தது' என்று நினைப்பாளாயினள். தலைவர் விட்ட தூதும் வரவே, வேறுபட்டிருந்த தலைவியைத் தோழி அணுகிக் 'கார்த்திகை விழாவின் விளக்குகள்போலத் தோன்றிப் பூக்கள் எங்கும் மலர்ந்தன. மழையும் வந்தது. தலைவர் வருஞ் செய்தியை அவர் தூது அறிவிக்கின்றமையான் அவர் விரைவில் வருவர். அவர் விட்டு நீங்கினுறென்று இனி ஊடுதலைப் பாராட்டுவாயாயின் பசலை மிகுந்து நீ படுக்கையிற் கிடப்பாய்' என்று வற்புறுத்தினள்.

'பொற்குழைபோற் குமிழம்பூக்கள் மலர்ந்து தொங்குகின்றமையானும் வானம் முழங்குகின்றமையானும் யான் குறித்த பருவம் வந்துவிட்டது. பருவம் வந்தும் யான் மீளாமையான் ஊரின்கண் அலர் பெருகியிருக்கும். மீளும் வழி நல்ல பக்குவத்தை யடைந்திருத்தலினுல் அவ்வலரை யொழிக்க விரைந்து செல்லவேண்டும்' என்று தலைமகன் நினைத்துச் 'சோலைகளெல்லாம் எம்மருங்கும் மலர்ந்திருக்கின்றன. வண்டுகளும் இனிய பாட்டைப் பாடுகின்றன. முகில்களும் எண்டிசையையுஞ் சூழ்ந்துகொண்டன. சுரமும் நல்ல பக்குவத்தையடைந்திருக்கின்றது. ஆதலான் இனி நாம் மீளப் புறப்படுவோம்' என்று பாகற்குச் சொல்லித் தேர்மீதேறி வருவானுயினன். வரும் வழியில் தான் செய்த குறிகள் யாவும் வந்தமை கண்டு 'நாம் மீளாமையினுல் தலைமகள் வேறுபாட்டையடைந்திருக்கிறுள் என்பதை உணர்த்துவதுபோல் நறுஞ்சோலையில் குளிர்ந்த காற்று வீசுகின்றது. எருமைகள் நீரில் வீழ்ந்து சேற்றை உழக்கிக் கொடிகளைச் சூடிக்கொண்டு இறுமாந்திருக்கின்றன. இது யான் மீளுங்காலத்திற்

குச் செய்த குறி. மலர்ந்த பிடவத்தினிடத்தே வண்டுகள் பாடுகின்றன. முகில்களும் விரைந்து ஓடுகின்றன. இவற்றைக் கண்டு தலைவி வருந்துவாள். ஆதலான் நீ காரினும் விரைந்து தேரைச் செலுத்துவாயாக. பக்கமலைகளின்மீது முகில்கள் தங்குங்காலமே யான் மீளும்பொழுது என்று தலைமகளுக்கு முன்பு யான் குறிசெய்தேன். அக்குறியும் வந்துவிட்டமை யான் நாம் விரைந்து செல்லவேண்டும்' என்று பாகற்குக் கூறித் தேரை விரையச் செலுத்திக்கொண்டு வருவானாயினன்.

வற்புறுத்தியும் பிரிவிடை ஆற்றாது வருந்தும் தலைமகள் வேறுபாட்டைத் தோழி கண்டு 'முகில்கள் கருக்கொண்டு பக்க மலைகளிடத்துத் தங்குதலே தாம் மீளுங் காலத்திற்குக் குறியாகத் தலைவர் செய்தார். அக்குறி வந்தும் தலைவர் வாராமையால் தலைவி வருந்துகின்றாள். இவள் வருத்தத்தைக் கண்டு இரங்குவதுபோல் மழையும் பெய்கின்றது. ஆதலான் அவளுக்கு ஆற்ற வியலவில்லை' என்று நினைத்து அவளும் வருந்துவாளாயினள்.

இதற்குள் தலைமகன் தேரும் நெடிய கானத்தைக் கடந்து ஊருக்கருகில் வந்துவிட்டது. வந்துகொண்டிருக்கும்பொழுது தலைமகன் வரிசைவரிசையாக மலர்ந்திருக்கும் குளிர்ந்த தளவத்தைக்கண்டு மகிழ்ந்து தான் தன் காதலியுடன் இனி அயரப் போகும் விருந்தைப்பற்றிப் பாகற்குச் சொல்லுவானாயினன்.

தலைவர் வரவில்லை என்று நினைத்துத் தலைவி வருந்துவதைத்தோழி கண்டு 'நம் தலைவர் வேந்தற்குற்ற சிறந்த ஆண்மகனாயினமையின் என்றும் பொய் கூறார்; ஆதலான் முகில்கள் முழங்கிக்கொண்டு மழையைப் பொழியும் இச்சிறந்த காலத்தும் அவர் வாராமலிரார்' என்று கூறித் தலைவியை ஆற்றுவித்தாள். தலைவி ஆற்றாது மேலும் வருந்தவே, தோழியும் அவள் ஆற்றாமை கண்டு ஆற்றாது தலைமகனும் இது பரியந்தம் வாராமையாற் பொய்த்தனன் என்று நினைத்து 'ஆண்யானைகள் பிடியொடு களித்து விளையாடு மிச்சிறந்த காலத்தும் அவர் வாராமையான் அவர் பொய்த்தனர்; ஆதலான் அத்தகைய தலைவர்க்காக நீ வருந்துவது எதற்கு? ஊரிலுள்ளார் தம்புனங்களை ஏர் உழ

வுந் தொடங்கி விட்டார்கள். இது பரியந்தம் நம் தலைவர் வாராமையாற் பொய்த்தாரென்று ஊர்க்கண் அலர் பெருகிவிட்டது. ஆதலான் இனி நீ அவரை மறந்து ஆற்றவேண்டும்' என்று தலைமகளை இயற்பழித்துக் கூறி அவளைத் தேற்றுவாளாயினள்.

இதற்குள் தலைமகன் தேர் தலைமகள் இல்லின்முன் வந்துவிட்டது. அதைத் தோழி கண்டு 'தலைவர் செய்த குறிகளெல்லாம் வந்தும் அவர் வரவில்லையென்று நினைத்து வருந்திய தலைவியின் நோயைத் தீர்க்க வானமும் கருநிறத்தைக் கொண்டது; (தலைவரும் வந்துவிட்டார்); ஆதலான் இனி அவள் நுதல் ஒளிபெற்று விளங்கும்' என்று நினைத்து மகிழ்ச்சியுடைந்திருந்தாள்.

நூலின் அமைப்பும் ஆக்கியோன் புலமையும்.

நாலுற்பதிற் சேர்ந்த ஒவ்வொரு நூலும் ஒருபொருளையே நாற்பது செய்யுள்களாற் பலவாறு விரித்துரைக்கின்றது. கபிலர் இயற்றிய இன்னா நாற்பது துன்பம் தருபவை எவை எவையோ அவை எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகின்றது. பூதஞ் சேந்தனாரியற்றிய இனியவை நாற்பது இன்பந் தருபவை எவை எவையோ அவை யெல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகின்றது. பொய்கையார் இயற்றிய களவழி நாற்பது போர்க்களத்தின் அழிவை எங்ஙனமெல்லாஞ் சிறப்பித்துக் கூற வேண்டுமோ அங்ஙனமே கூறுகின்றது. இக் கார்நாற்பதும் கார்காலத்தின் இயல்பைப் பலவகையாகச் சிறப்பித்துக் கூறுகின்றது. ஆகவே இந்நூலின் ஆசிரியராகிய மதுரைக் கண்ணங் கூத்தனார் இந் நூலிற் கூற வந்தது கார்காலத்தின் சிறப்பே. கார்காலத்தின் சிறப்பை யெல்லாம் ஆசிரியர் வாளா கூறி யிருப்பின் அவை படிப்போர் மனத்தைக் கவர்ந்து இன்ப மூட்டா. இதனை ஆசிரியர் உய்த்துணர்ந்து கார்காலத்தின் வளப்பத்தை யெல்லாம் ஒரு கதையிடத்தே அமைத்துக் கூறுவாராயினர். கார்காலஞ் சிறப்பாய்ப் பயின்று வருவது முல்லைத்திணைக்காயினமையின் அத்திணைக்

குரிய அகவொழுக்கத்தையே தமது நூலுக்கு நிலைக்களனாகக் கொண்டார் ஆசிரியர். அஃதாவது வேந்தற்கு உற்றதுணையாய் நின்று மாற்றரசரொடு போர்செய்யப் போவான் ஒரு தலைமகன் தன் பிரிவினைக் காதலிக்குக் கூறிக், கார்ப்பருவத் தொடக்கத்தில் தான் மீண்டு வருவதாயும், அது காறும் அவள் பிரிவாற்றியிருத்தல் வேண்டுமென்றுஞ் சொல்லிப்பிரிய, அங்ஙனமே தலைவியும் ஆற்றியிருந்து அவன் குறித்த பருவம் வந்தும் அவன் வாராமையாற் பெரிதும் ஆற்றாளாயினள். தோழி அவளது ஆற்றாமையைக் கண்டு வருந்தி, அவளுக்குப் பலவாறான மென்மொழிகளைக் கூறி ஆற்றுவித்துக்கொண்டிருக்கச், சென்ற தலைமகனும் மீண்டு வந்து அவளை யெய்தியதே இங்கு விரித்துரைக்கப்பட்டது. இக்கட்டுரையைக் கூத்தனார் படர்க்கையாகக் கூறிச் செல்லாது தோழி தலைவிக்குச் சொல்லுவதும், தலைமகன் பாகற்குச் சொல்லுவதுமாக நாடக வழக்குப் போல் முன்னிலையாகக் கூறிச் செல்கின்றார். அகப்பொருள் ஒழுக்கத்தைக் கூறுங் கோவை ஐந்திணை முதலிய நூல்களை தமிழ் மொழியினிடத்து இன்று காணப்படும் நாடக நூல்களெனலாம். அவற்றுள் பல நிகழ்ச்சிகளை ஒருவருக்கொருவர் சொல்லுவதும், வெவ்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் நிகழ்வதும், பொருள் ஒரு முடிபு கொண்டு செல்வதும் பிறவும் நாடக இயல்பை ஒத்திருத்தலின் அவை அங்ஙனம் எண்ணப்படும். இக் கார்நாற்பதையும் ஆசிரியர் ஒரு நாடகம் போல அமைத்துள்ளார்.

பிரிவிடை ஆற்றாது வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவித்ததை முதலிரண்டு செய்யுள்களும், தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்ததை மூன்றாஞ் செய்யுளும், மீண்டுந் தலைவியைத் தோழி வற்புறுத்தியதை ச முதல் கஅ உள்பட்ட செய்யுள்களும் கூறுகின்றன. இஃது இந்நாடகத்தின் முதல் அங்கத்தின் முதற்களமாகும். இது நிகழுமிடம் ஒரு பாடியில் அமைக்கப்பட்ட மாளிகையின் பள்ளியறை. தலைமகன் வினைமுடிந்த பின்பு தலைவியை நினைத்ததையும், மீள்வதற்குத் தேர்முதலியவற்றைச் சமைக்கப் பாகற்குச் சொன்னதையும் கக முதல் உஉ உள்

பட்ட செய்யுள்கள் கூறுகின்றன. இஃது இரண்டாம்களமாகும். இது நிகழுமிடம் வேற்றரசன்காட்டில் அமைக்கப்பட்ட பாசறை. ஊடலையொழிக்குமாறு தலைவியைத் தோழி வற்புறுத்துவதைக் கூறும் உ௩-ஞ் செய்யுள் மூன்றாங் களமாகும். இது நிகழுமிடம் தலைவியின் பள்ளியறை. குறித்த பருவம் வந்தமையால் தலைவி ஆற்றாது வருந்துவாளென்று தலைமகன் நினைத்ததை உணர்த்தும் உ௪-ம் செய்யுள் நான்காம் களமாகும். இது நிகழுமிடம் தலைமகன் பாசறை. தலைமகளைத் தோழி ஆற்றுவித்ததையும் தூதுவந்த செய்தியைக் கூறி வற்புறுத்துவதையுங் கூறும் உ௫, உ௬, உ௭-ம் செய்யுள்கள் ஐந்தாம் களமாகும். இது நிகழுமிடம் தலைவியின் பள்ளியறை. இவ்வைந்து களங்களும் நாடகத்தின் முதல் அங்கமாகும்.

தலைமகன் பாசறையைவிட்டு நீங்குஞ் செய்தியைக் கூறும் உ௮, உ௯-ம் செய்யுள்கள் இரண்டாம் அங்கத்தின் முதற் களமாகும். இது நிகழுமிடம் பாசறை அமைக்கப்பட்ட காடு. தலைமகன் தலைவியை நினைந்து பாகற்குச் சொல்லுவதையும், அவர்கள் தேரை விரையச் செலுத்தி வருவதையுங் கூறும் ௩௦, ௩௧, ௩௨, ௩௩-ம் செய்யுள்கள் இரண்டாங் களமாகும். இது நிகழுமிடம் நெடிய கானிடை. தலைவியின் ஆற்றாமையைக் கண்டு தோழி வருந்துவதைக் கூறும் ௩௪, ௩௫-ம் செய்யுள்கள் மூன்றாம் களமாகும். இது நிகழுமிடம் தலைவியின் மாளிகை. இம்மூன்று களங்களும் இரண்டாம் அங்கமாகும்.

தேரை ஊர்ந்துவருந் தலைமகன் தான் அயரவிருக்கும் விருந்தைச் சிறப்பித்துப் பாகற்குக் கூறியதை யுணர்த்தும் ௩௬-ம் செய்யுள் மூன்றாம் அங்கத்தின் முதற்களமாகும். இது நிகழுமிடம் தலைமகள் ஊர்க் கருகிலுள்ள இடைவழி. தலைவிக்குத் தோழி தலைமகன் சிறப்பைக் கூறி ஆற்றுவித்ததைக் கூறும் ௩௭-ம் செய்யுளும், பின்பு தலைமகனை இயற்பழித்துக் கூறித் தலைவியைத் தேற்றியதைக் கூறும் ௩௮, ௩௯-ம் செய்யுள்களும், தலைமகன் வந்த செய்தியைத் தோழி யறிந்து மகிழ்ச்சி யுற்றதை யுணர்த்தும் ௪௦-ம் செய்யுளும் இரண்டாங்களமாகும். இவ்விரண்டு களங்களும் மூன்றாம் அங்கமாகும். ஆகவே, இந் நாட

கம் மூன்று அங்கங்களும் கூ களங்களும் கொண்டுள தெனலாம். நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் கார்காலத் தொடக்கத்திலே நிகழ்ந்தன.

கூத்தனார் இந்நூலுள் கூறவேண்டுவது கார்காலத்தின் சிறப்பே யாதலாற் செய்யுள்களை முற்கூறிய முறைப்படி வைக்காமல் பிறழவைத்திருந்தாலும் அது நூலுக்கு இழுக்காகாது. ஆயின் அங்ஙனஞ் செய்யுளியற்றல் நல்லிசைப் புலவர் அரிய வினைத் திறனன்று. தோழி கூறுவனவெல்லாம் ஒரு மருங்கு வைத்துத் தலைவர் கூறுவனவெல்லாம் மற்றொரு மருங்குவைத்து நூலியற்றப்பட்டிருப்பின், அது படிப்போர் மனத்தைக் கவராது வெறுப்பைத் தோற்றுவிக்கும். இதனை ஆசிரியர் உய்த்துணர்ந்து படிப்போர் மனத்திற்கு இன்ப மூட்டுமாறு செய்யுள்களை மாறிமாறி இடநோக்கிப் பெய்து வைத்துள்ளார். தோழி எங்ஙனமெல்லாம் தலைவியை ஆற்ற வேண்டுமோ அங்ஙனமெல்லாம் ஆற்றுவிக்குமிடத்துப் படிப்போர் மனம் சிறிது சலிப்படையும். குறித்த பருவத்தில் வாராமையால் தலைவன் கொடியவனென்று நினைக்கவும் நேரிடும். அச்சலிப்பை மாற்றவும் ஐயத்தை நீக்கவும் இடநோக்கித் தலைமகன் செய்தியைக் கூறினார். கூறவே படிப்போர்க்கு ஊக்கமுண்டாகி மேல் முடிவு என்னையோவென்றறிய மேற் செல்லுவர். இங்ஙனம் படிப்போர் மனத்தைக் கவர்ந்து செல்லும் வண்ணம் செய்யுள்களெல்லாம் இடநோக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் வைக்கப்பட்டிருப்பினும் அவை உலக இயற்கைக்கு முரண்பாடின்றிக் கால அளவுடன் நோக்கப் பட்டிருக்கின்றன.

தோழி தலைவியை ஆற்றுவித்துச் சிறிது காலம் வாளா இருக்க வேண்டியது அவசியமாயினமையின் முதல் இரண்டு செய்யுளில் தோழி ஆற்றுவித்ததைக் கூறி வாளா இருந்த காலத்தில் அவள் நினைத்ததை ஆசிரியர் நமக்கு மூன்றும் செய்யுளிற் காட்டினார். பின் தலைவியைத் தோழி ஆற்றுவித்ததை யெல்லாங் காட்டவே நம்மனம் சிறிது சலிப்படைந்தது. சலிப்படைந்து இங்ஙனம் வருந்தும் தலைமகள் கதி

என்றுயிற்றே வென்று ஐயுற்றிருக்குங் காலத்திற், புலவர் நமக்கு இன்பமூட்டவும், மேல் வருஞ் செய்தியைக் காட்டவும் நம்மனத்தைத் தலைவி பள்ளியறையிலிருந்து வேற்றரசர் காட்டில் அமைக்கப்பட்ட பாசறைக்குக் கொண்டு சென்று தலைமகன் தன்மை யெல்லாங் காட்டுவாராயினர். தலைமகன் மீள்வதற்குத் தேரையுங் குதிரையையும் சமைக்கப் பாகற்குச் சொன்னான். அங்ஙனம் பாகன் அவற்றைச் சமைக்கச் சிறிது காலஞ் செல்லுமாகையினால் அக்காலத்திலும் நம் மனத்தை ஒரு விஷயத்திற் செலுத்த வேண்டி மீண்டும் புலவர் நம்மைத் தலைவியின் பள்ளியறைக்குக் கொண்டுபோய்த் தோழி தலைவியை ஆற்றிக்கொண்டிருந்ததை நமக்குக் காட்டினார். (உங-ம் செய்யுள்). தேருங் குதிரையும் புறப்பட அமைந்துவிடவே நம் மனத்தைப் பாசறைக்குக் கொண்டுபோய்த் தலைவன் தூது போக்கிய செய்தியைக் குறிப்பாகக் காட்டினார். தூது பாசறையை விட்டுத் தலைவி மாளிகைக்கு வரச் சிறிது காலஞ் செல்லுமாதலினால், அந்த இடையிட்ட காலத்தை நிரப்ப வேண்டி நம் மனத்தைப் பள்ளியறைக்குக் கொண்டு போய்த் தோழி நினைப்பதை நமக்குக் காட்டினார். (உரு-ம் செய்யுள்). அங்ஙன மின்றி அடுத்த செய்யுளிலே தூது வந்தது என்று கூறியிருப்பாராயின், அஃது இயற்கை நிகழ்ச்சிக்கு முரண்பட்டு நல்லிசைப் புலவர் வினைத்திறத்தைக் காட்டாது. இதற்குள் தூது வரவே வந்த செய்தியைத் தலைவிக்கு அறிவித்துத் தோழி ஆற்றுவித்ததை நமக்குக் காட்டினார். பின்னர்த் தலைவன் என்னுயினனே என்று நாம் கருதவே நம்மனத்தைப் பாசறைக்குத் திருப்பித் தலைமகன் புறப்பட்டு வருதலை நமக்குக் காட்டினார். தலைமகன் பாசறையை விட்டு ஊர்க்குவரக் காலஞ்செல்லுமாகையினால் அங்ஙனஞ் சென்ற காலத்தைக் குறிக்கவே நம்மை மீண்டும் ஆசிரியர் தலைவி மாளிகைக்குக் கொண்டுபோய்த் தோழி வருந்துவதை நமக்குக் காட்டினார். (நசு, நரு-ம் செய்யுள்கள்.) இந்த இடையிட்ட காலத்தில் தலைமகன் தேர் ஊர்க்கு அணித்தாய் வந்துவிடவே அதை நமக்கு நகூ-ம் செய்யுளிற் காட்டினார். தலைமகன் தேர் தலைமகள் இல்லின்முன் வரச் சிறிது காலஞ்

செல்லு மாதலினால் அக்காலத்தை நிரப்ப வேண்டி மீண்டும் ஆசிரியர் நம்மைத் தலைவி யிடத்திற்குக் கொண்டு போய்த் தலைவி வருந்துவதைக் காட்டினார். இதற்குள் தலைமகன் தேர் தலைமகள் மாளிகை முன் வரவே அதைத் தோழி கண்டு மகிழ் வாளாயினள். அதை ஆசிரியர் நமக்கு ௨௦-ம் செய்யுளிற் குறிப் பாகக் காட்டித் தமது நூலை இனிது முற்றுவித்தார்.

இங்ஙனம் உலகியற்கு ஒரு சிறிதும் முரணாமல் நூலை நலம்பட வகுத்துப் பொருள் விழுப்பந்தோன்ற அழகாகச் சித்திரித்துக் காட்டுதல் நல்லிசைப்புலவர் மாட்டுக் காணப்படும் வினைத்திறனாகும். இங்ஙனம் ஒரே காலத்தில் இருவேறு இடங் களில் இருவேறு நிகழ்ச்சிகள் நிகழ்தலைக் காலவரம்பு கோலி மிக அழகாக ஒரே கதையிடத்து அமைத்துக் காட்டுந் திறனை ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில கவியினிடத்துப் பரக்கக் காண லாம். இந்தக் காலக் கோட்பாடு 'சிம்பலின்' என்னும் நாடகத் தில் நன்றாக விளங்கிக் கிடக்கின்றது. இவ்வருமைப் பாட்டை அமைத்து நமது புலவர்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நூல்கள் இயற்றியிருப்பதனால், அவர்கள் நுட்ப அறி வும், நாகரிக மேம்பாடும், கல்வி முதிர்ச்சியும் உடையரென்பது நன்கு விளங்குகின்றது.

இனிக் கூத்தனார் நூல் தொடக்கத்தில் தலைமகன் சென் றதை நமக்கு ஒன்றுங் கூறாமல் தலைவி வருந்துவதை மட்டும் நமக்கு எடுத்துக் காட்டவே, முன் நடந்தவை என்னோ வென் றையமுற்று அவற்றை யறிய நம் மனம் விழைகின்றது. அத னால் ஊக்கம் பெருகி நூலை மேன்மேலுங் கற்க முயல்கின்றோம். முதற் செய்யுளால் அறியக் கிடப்பது கார்காலத்தில் வருவதா கச் சொல்லி விட்டுச் சென்ற யாரோ ஒருவன் வாராமையால் தலைமகள் வருந்துகிறாள் என்பது. அங்ஙனஞ்சென்றவன் யா ரென்பதும், எதற்குச் சென்றானென்பதும், எங்குச் சென்றா னென்பதும், அச்செய்யுள் கூறாமையான் அவற்றை யறிய மேலும் முயல்கின்றோம். அவற்றை யெல்லாம் ஆசிரியர் போகப்போகக் குறிப்பாக உணர்த்திச் செல்கின்றார். 'இன் னே வருவர் நமர்' 'ஏமார்ந்த காதலர்' 'சென்ற நங்கா

தலர்' முதலிய தொடர்களாற் சென்றவன் தலைமகன் என்பதும், 'இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார்' 'நச்சியார்க் கீதலு நண்ணார்த் தெறுதலுந் தற்செய்வான் சென்றார்' 'புகழ் வேண்டிப்பிரிந்தார்' 'செல்வந் தருபாக்குச் சென்றார்' 'செல்வந் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்' முதலிய தொடர்களால் தலைமகன் வேந்தற்குற்றதுணையாய் நின்று மாற்றரசரொடு பொருது வெற்றி பெற்று அதனாற் புகழும், செல்வமும் அடைந்து வரச் சென்றானென்பதும், 'நெடுவிடைச் சென்றாரை' 'கல்பயில் கானங் கடந்தார்' என்றமையான் அவன் தன்னாட்டை விட்டுக் காட்டைக் கடந்து சென்றானென்பதும், 'தீம்பெயல் தாழ வருதுமென மொழிந்தார்' 'இன்சொற் பலவு முரைத்து' 'கடுமான்தேர்' முதலியவற்றான் அவன் கார்காலத்தில் மீளுவதாக இன்சொற்களைச் சொல்லிவிட்டு நலமாய்ப் பிரிந்து தேர்மீதேறிச் சென்றானென்பதும் பிறவும் பின்வருஞ்செய்யுள்களால் நாம் நன்கறிகின்றோம். இங்ஙனம் நம்மனத்தை முதற்செய்யுள் கௌவிக்கொண்டு செல்லுமாறும், முன் நடந்தவற்றைப் பின்வருஞ் செய்யுள்களாற் குறிப்பாகவறிவித்து நமக்கு இன்பத்தைப் பயக்குமாறும் செய்யுளியற்றல் நல்லிசைப் புலவர்களிடத்துக் கண்டதோர் அரிய நுட்ப வினைத்திறம். இவ்வருமைப்பாட்டை 'மக்பெத்' முதலிய ஆங்கில நாடகங்களிற் பரக்கக் காணலாம். ஆசிரியர் முதலில் எங்ஙனம் தலைவர் செய்தியைக் கூறவில்லையோ அங்ஙனமே ஈற்றிலுந் தலைமகன் தலைவியை யெய்திய செய்தியை வெளிப்படையாய்க் கூறாமல் குறிப்பாகக் கூறிச் செல்கின்றார். ஆசிரியர் ௩௯-ஞ் செய்யுளில் தலைமகன் தலைவியுடன் அயரவிருக்கும் விருந்தைக் கூறிப், பின் 'தண்பதக் காலையும் வாரார் எவன் கொலோ ஒண்டொடி யூடு நிலை' 'பெருங்கவலை யாகின்று நம்மூ ரவர்க்கு' என்று தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறி அவனை மறந்து ஆற்றவேண்டுமென்று தலைவியை வற்புறுத்திய பின், 'நந்துமென்பேதைநுதல்' என்று அவள் மகிழ்ந்து நினைத்தலைக் கூறுதலின் றலைமகன் தலைவியை அடைந்தானென்பது உய்த்துணரப்படும். ஆசிரியர் மென்

சுவைமேல் சென்றமையான் அச்செய்தியை வெளிப்படையாகக் கூறாது உய்த்துணர வைத்தாரென்பதை உணருந்தோறும் கற்போர்க்குக் கழிபேருவகை பெருகுமென்பது திண்ணம். இங்ஙனமே நப்பூதனாரும் முல்லைப்பாட்டில் தலைவன் பிரிந்து சென்றமை யொன்றுங் கூறாது, தலைவி வருந்துதலைக் கூறிப் பின் பாசறைக்கண் நிகழ்ந்த செய்தியெல்லாம் விரித்துக் காட்டி ஈற்றில் தலைமகன் பிரிவுக்கிரங்கி வருந்தும் தலைமகள் செவி நிறையத் தலைமகன் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் ஆரவாரித்தன என்பதை மட்டும் நயமாய்க் கூறித் தலைமகன் தலைமகளை யெய்தினான் என்ற செய்தியை வெளிப்படையாகக் கூறா தொழிதலையும் ஆண்டுக் கண்டுகொள்க.

கூத்தனார் தலைமகள் மாட்டு நிகழுஞ் செய்தியை எல்லாம் ஒருமருங்கு பெருக்கிக்கொண்டு சென்று ௩௭, ௩௮-ம் செய்யுள்களில் அவை குவிந்து நிற்கச்செய்து, மற்றொரு மருங்கு தலைமகன் மாட்டு நிகழுஞ் செய்தியையெல்லாம் பெருக்கிக்கொண்டு சென்று ௩௯-ம் செய்யுளில் அவை குவிந்து நிற்கச் செய்து அவ்விருமருங்கு நிகழ்ச்சியையும் ௪௦-ம் செய்யுளில் ஒன்றுவித்து இனிது முற்றுவித்த வினைத்திறம் மிகவும் வியக்கற்பாலது. தலைமகனை இயற்பழித்துக் கூறும் ௩௭, ௩௮-ம் செய்யுள்களை இடநோக்கி ஈற்றில் வைத்ததும் ஆசிரியர் நுண்ணறிவினை நன்கு விளக்குகின்றது. எங்ஙனமெனின், தோழியும் தலைவியும் தலைவர் வருவரென்றெதிர்பார்த்திருந்த விடத்துத் தலைவர் வருதலினும், தலைவர் பொய்த்தமையான் இனி அவர் வாராரென்று தெளிந்து அவரை மறந்திருந்தவிடத்துத் தலைவர் வருதலே அவர்களுக்குக் கெடுத்துத்தேடு நன்கலம் எடுத்துக் கொண்டாற் போலப் பெரு மகிழ்ச்சியை யூட்டுமாகலான், அதனை ஆசிரியர் நுட்ப அறிவால் அறிந்து அப்பாக்களைப் பொருள் விழுப்பந் தோன்ற ஆண்டுப் பெய்து வைத்தார் இந் நுணுக்கமெல்லாம் அறிந்து செய்யுளியற்றியகூத்தனார் நுட்ப வினையின் அருமைப்பாட்டை உய்த்துணர்ந்துமகிழ்ந்துகொள்க.

இனி இந்நூலுள் தலைமகன், தலைமகள் பெயர் கூறாமை யென்னையோவெனின், எல்லா மக்களுக்கும் உரிய இயற்கை

யாகிய அகவொழுக்கத்தை இந்நூல் பகுத்துரைக்கின்றதாகலின் சிறப்பாகிய ஓர் ஆண்மகன் அல்லது ஒரு பெண்மகள் பெயரைக் கூறுதல் மரபன்று. அன்பினால் நிகழும் ஐந்திணை யொழுக்கத்தை ஒருவர் பெயர் சுட்டிக் கூறப்படுமாயின், அவ்வொழுக்கம் மற்றையோர்க்கில்லை யென்று கருதப்படுமாகலின் அம் மலைவு நீக்குதற் பொருட்டே அகப்பொருட் செய்யுள்கள் ஒருவர் பெயர்கொண்டு நடைபெறா. இதனை *"மக்க ணுதலிய அகனைந் திணையுஞ், சுட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்தியவாற்றானறிக.

இதுகாறும் நூலின் அமைப்பையும் ஆக்கியோன் நூலியற்றிய திறனையும் ஆராய்ந்தாம். இனிச் செய்யுள்களை ஒரு சிறிது ஆராய்வாம்.

ஆசிரியன் பாத்திரங்களுக் கேற்றவாறு உவமைகளையும் சொற்களையும் அமைத்துச் செல்வது மிகவும் வியக்கற்பாலது. மஞ்ஞை அழகாயிருத்தலுக்கு ஆடுமகளிரையும், காட்டிற் பரந்து கிடக்கும் இந்திரகோபங்களுக்குத் தலைவியின் பள்ளியறையிற் சிந்திய பவளங்களையும், காயாவின் கருநிறத்திற்கு மகளிரின் கண்களுக்குத் தீட்டப்படும் அஞ்சனத்தையும், மழைக்காலிறங்குதலுக்கு மகளிர் கூந்தலையும், ஆலங்கட்டிகளுக்கு முத்துக்களையும் உவமையாகத் தோழி கூறுவன வெல்லாம் பெண்கள் பயின்ற பொருள்களும் கருத்துக்களு மாயினமையின், அவள் வாக்குக்கு அவை மிகவும் ஏற்புடையவாயின. அங்ஙனமே மராவின் பூக்கள் நிறத்திற்குக் கலப்பைப்படை வெற்றியையுடைய பலராமன் நிறத்தையும், முகில்கள் உருமேற்றுடன் திரண்டு விரைந்து செல்வதற்குச செருமன்னர் சேனைத்திரள் ஆரவாரத்துடன் விரைந்து செல்லுதலையும், காடு பூத்து அழகாயிருத்தலுக்கு வருவாயுடையாருடைய செல்வத்தின் சிறப்பையும், எருமைகள் கொடிகளைச் சூடி இறுமாந்திருத்தலுக்குப் போர்வீரர்கள் வஞ்சி முதலிய கொடிகளைச் சூடி இறுமாந்திருப்பதையும், குறைதலில்லாத நிறைந்த மகிழ்ச்சியுடன் வண்டு பாடுதலுக்குப் புகழை விரும்புவார் மனம் என்றும் நிறைந்து

*தொல். அகம். சூ. ௫௪.

மகிழ்ந்திருத்தலையும் உவமையாகத் தலைமகன் கூறுவனவெல்லாம் ஆண்மகன் பயின்ற பொருள்களும் கருத்துக்களுமாயிருத்தலின், அவன் கூற்றுக்கு அவை மிகவும் பொருத்தமாயின.

நீல நிறமுடைய வானின்கண் விளைந்து தோன்றும் பல நிறத்தையுடைய இந்திரவில்லுக்கு நீல நிறமுடைய மாயோன் மார்பின்கண் விளங்கு கிடக்கும் பல நிறத்தையுடைய பூமாலையையும், எம்மருங்கும் மின்னும் மின்னலொளிக்கு வேள்வித் தீயினொளியையும், கரியமேகத்தின்கண் மின்னும் மின்னலுக்குப் போர்க்களத்தில் வெட்டப்படும் யானையினிடத்து மின்னும் வாளையும், வற்றின காடு மழை பெய்தபின் தழைத்து அழகாய் விளங்குவதற்கு வறுமையினால் மெலிந்திருந்தார் உடல் செல்வம் வந்தவிடத்து அழகு பெற்று விளங்குதலையும், செந்நிறமுடைய தோன்றிக்குக் கார்த்திகைத் திருவிழாவில் ஏற்றிவைக்கும் விளக்கையும், குறைதலில்லாத நிறைந்த மகிழ்ச்சியுடன் பாடும் வண்டுக்குப் புகழை என்றும் விரும்புவார் மகிழ்ச்சி நிறைந்த மனத்தையும் ஆசிரியர் உவமை கூறியது மனோபாவத்திற்கும், இயற்கைக்கும் மிகவும் இசைந்திருக்கின்றது.

பாதிரிப்பூ வரிநிறமுடைய தென்பதனாலும், கருவிளை கண்மலர்போல மலர்கின்ற தென்பதனாலும், காயா அஞ்சன நிறத்தையும், தோன்றி எரிவனப்பையும், தளவம் சிரல் வாய் வனப்பையும் உடையன என்பதனாலும், முல்லை மகளிர் முள்ளெயிற்றையும், தெறுழ்வீ வரகின் பொரியையும், குமிழ் பொன்னாற் செய்யப்பட்ட குழையையும், கோடல் பாம்பின் படத்தையும், நொச்சியினரும்பு நண்டின் கண்ணையும் போன்றிருக்கின்றன வென்பதனாலும், கடுமான்றேர் கான்யாறு ஒலிப்பது போல வருகின்றதென்பதனாலும, கார்காலத்தில் யானைகள் பிடியோடு இயைந்தாடுகின்றன, குயில்கள் பாடுதலையொழிந்து நிற்கின்றன, மயில்கள் களித்தாடுகின்றன, பாம்புகள் இடிக்கு அஞ்சி வருந்துகின்றன, எருமைகள் நீரில் வீழ்ந்து இறுமாந்திருக்கின்றன என்பதனாலும், கார்காலம் வளப்பத்தை யடையும் வண்ணம் கடுக்கை, குருகிலை, பிடவம் முதலிய மரஞ்செடிகள் அடர்ந்த காடுகள் தழைத்துப் பூத்தன வென்பதனாலும் ஆசிரி

யர் இயற்கைப் பொருள்களை ஊன்றி ஆராய்வதிலும், கார் காலத்து வளப்பத்தைக் கண்டவாறே திறம்பட உரைத்தலி லும் போராற்ற லுடையவரென்பது நன்கு போதரும்.

இனிச சிற்சில விடங்களில் இவ்வாசிரியர் முற்கூறிய விடயத்தையே மீண்டுங் கூறுவதுபோலத் தோன்றினும் அவை யெல்லாம் கூறியதுகூறலாகா. 'இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார்' 'நசசியார்க் கீதலு நண்ணார்த் தெறுதலுந் தற்செய் வான் சென்றார்' 'புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார்' 'செல்வந் தரல்வேண்டிச் சென்றார்' ஆகிய இவையெல்லாம் ஒரு பொருளையே குறிப்பனவெனினும் ஆசிரியா தாம் கூற வந்த விடயத்தை வற்புறுத்த வேண்டி அங்ஙனம் மீண்டும் மீண் டுங் கூறிச் செல்கின்றாரென்றறிக.

இனி விரித்துக் கூறவேண்டிய சில விஷயங்களை இரண் டொரு சொற்களாற் குறிப்பாக உணர்த்திச் செல்வதும் இவ் வாசிரியர் அரிய வினைத்திறனாகும். "ஈண்டைப் பவழஞ் சிதறி யவைபோல" என்றமையால் தலைமகள் தானணிந்திருந்த பவள வடத்தை வருத்த மிகுதியான் பரிந்தெறிந்தாளென்ப தும், "பேதையூர் நல்விருந் தாக நமக்கு" என்றமையால் தலை மகன் தன் ஊர்க்கு மீண்டு வந்து தலைமகளுடன் உறையுமிடத் துக் களிப்புடன் விருந்தயர்வானென்பதும், "நோய்தீர் மருந் தாகி.........நந்துமென் பேதைநுதல்" என்றமையால் தலை மகள் நோயைத் தீர்க்கவும், அவள் மகிழ்ச்சியுற்று விளங்க வும் தலைமகன் மீண்டு வந்து அவளை யெய்தினனென்பதும் போன்ற விடயங்களெல்லாம் குறிப்பாகப் பெறப்படுகின்றன. இவை யெல்லாம் ஆசிரியர் நுண்ணறிவினை நமக்கு விளக்கி மகிழ்ச்சியைப் பெருக்குகின்றன.

பண்டைக்காலத்து ஆசிரியர்களெல்லாரும், தாங்கள் நேரிற் கண்டவற்றை ஒரு சிறிதுந் திரிக்காது கண்டவாறே கூறுவர். பிற்காலத்துப் புலவர்களோ விடயங்களைப் பெருக்கி உயர்வுநவிற்சியணியாக அவற்றை வருணித்துக் கூறுவர். பண்டைப்பனுவலில் தற்குறிப்பேற்றமும், இசைந்த உவமை களுமே மலிந்து காணப்படுதலன்றி வேறு அணிகள் பெரும்

யான்மையுங் காணப்படா. இந்நூலும் சங்க நூல்களில் ஒன்று யினமையின், இயற்கைக்கு முரணான ஒரு விடயத்தையும் இதனுள் காண்பதரிது. ஆசிரியர் இரண்டு செய்யுள்களில் மட்டும் இயற்கை நிகழ்ச்சிகளை மிக அழகுபடச் சிறிது புனைந்துரைக்கின்றார். "குருந்தின் குவியிணரு ளுறை யாகத் திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி யின்குழ லூதும் பொழுது", "படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம் பிடாஅப் பெருந்தகை நற்கு" என்னும் கூ, ங௨-ம் செய்யுள்களில் வண்டுந் தும்பியும் ஓசையுடன் பூக்களிடத்தே தேன் கொள்ளுதலை, ஆசிரியர் 'குருந்தின் மலரைத் தமக்கு இருப்பிடமாக வைத்துக்கொண்டு வண்டுகள் இனிய பாட்டைப் பாடவும் அதற்கொத்துக் கரிய தும்பிகள் இனிய குழலை யூதவும்' என்றும், 'பிடவமாகிய பெருந்தகையாளனிடத்து நிறைந்த மகிழ்ச்சியை யுடைய வண்டுகள் நன்றாய் இனிய பாட்டைப் பாடாநிற்கும்' என்றும் இன்சுவை கனியப் புனைந்துரைக்கின்றார். இவையன்றி இந்நூலுள் வேறு காணப்படுதலின்று.

"பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல எசசாரு மின்னு மழை" "செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார் மேனிபோற் புல்லென்ற காடு" "நல்லார் இளநலம் போலக் கவினி வளமுடையார் ஆக்கம்போற் பூத்தன காடு" "கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற் படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்" என்பவையெல்லாம் சொற்சுவையும் பொருட்சுவையுங் கனிந்த உவமங்களேயாகும்.

இங்ஙனமெல்லாம் பொருள் விழுப்பந் தோன்றவும், படிப்போர் மனத்தைக் கவர்ந்து செல்லுமாறும் பொருளைப் பாகுபாடு செய்து இந்நூலைத் திறம்பட வியற்றிய மதுரைக் கண்ணங்கூத்தனார் அரிய புலமை பெரிதும் வியக்கற்பாலதொன்றாம்.

இந்நூலினால் அறியக்கிடக்கும் பண்டைநாள் வழக்கவொழுக்கச் சரித்திரக் குறிப்புகள்.

க௮00 ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழரின் வழக்க வொழுக்கங்கள் சில இந்நூலினால் அறியப்படுகின்றன. முல்லைநில மக்

கள் திருமாலை வழிபட்டு வந்தனர். (செ. க). கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் விளக்கேற்றி நாட்டை அழகு படுத்துந் திருவிழாவைத் தமிழர் கொண்டாடிவந்தனர். (உசு). ஆபயன் பெருக்கவும், மழைவளஞ் சுரக்கவும் வேள்வி செய்வதும் அவர்களுக்கு ஒரு வழக்கம்போலும். (எ). கார்காலத்தில் ஏர் உழும்பொழுது உழவர் தலையில் நொச்சித் தழையைச் சூடிக் கொண்டிருப்பர். (௩க). அங்ஙனஞ் செய்வது குளிரைத் தடுத்து வெப்பத்தை அதிகப் படுத்துவதற்குப்போலும். வெற்றிபெற்று மீளும் போர்வீரனுக்கு அன்பின் அறிகுறியாக நாட்டார் விருந் தளிப்பதும் அவர்களுக்குள் ஒரு வழக்கமாயிருந்தது. (௩சு). தலைமக்கள் இரப்போர்க் கீந்து புகழ்பெற்று விளங்கினர். (ரு,எ,அ). மூகில் வலமாகச் சென்றால் அது நல்நிமித்தமென்று கருதி அதனால் தங்கள் எண்ணம் கைகூடுமென்று நம்பினார்கள். (கஉ).

சிறந்த தலைமக்கள் தேர் குதிரை முதலிய வாகனங்களை ஊர்ந்து சென்றனர். அவர்களுடைய தேர்கள் எந்திரச் செய்கைகளாலும் மாட்சிமைப்பட்டிருந்தன. (உக). அவர்கள் தேர்ப் பாகன், சேவகர் முதலியோரை உடையவர்களா யிருந்தார்கள். அவர்களுடைய சேவகர் வேனிற் காலத்திற்கு ஒரு வகை உடையும், கார்காலத்திற்கு மற்றொரு வகை உடையும் உடையவர்களா யிருந்தனர். (உஉ).

அக்காலத்திலிருந்தவர்கள் நல்ல மாளிகை அமைத்து அதில் வதிந்து வந்தனர். (உஎ). பெண்கள் பொன்னாற் செய்யப்பட்ட குழை, தொடி, திரு முதலிய அணிகலன்களையும், முத்துப் பவளங்களானை வடங்களையும், வளையையும் அணிந்து வந்தனர். தங்களை அழகுபடுத்திக்கொள்வதற்கு மகளிர் கண்ணுக்கு மை தீட்டுவர்; மயிரை ஐந்துவகையாக முடிப்பர். தங்களை அழகுபடுத்திக்கொண்டு பிறரை மயக்கும் ஆடன் மகளிரும் அக்காலத்திலிருந்தனர். (௪). குழல், முரசு, முருகியம் முதலிய இசைக்கருவிகளும், ஏர், நாஞ்சில் முதலிய உழுபடைகளும், எருமை, ஆனிரை முதலிய செல்வங்களும், பிறவளங்களும் பழந் தமிழ்மக்கள் பெற்று நாகரிக மேம்பாடு அடைந்திருந் தனர் என்பது இதனால் நன்கு விளங்குகின்றது.

பா இலக்கணமும் நூலின் நடையும்.

இந்நூற் செய்யுள்கள் வெண்பாவால் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளும் முதல் மூன்றடிகள் நான்கு சீராகவும் ஈற்றடி முச்சீராகவும் வகுக்கப்படும். ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஓர் அசையாகவும், ஒழிந்த சீர்கள் மூன்றசைக்கு மேற்படாமலும் இரண்டசைக்குக் குறையாமலும் வரும். ஈற்றுச்சீர் என்றும் நாள், காசு, மலர், பிறப்பு என்ற வாய்பாட்டில் ஒன்றுன் வரும். மூவசைச்சீர் என்றும் காய்ச்சீராகவரும். ஒவ்வொரு சீரும் அடுத்த சீருடன் வெண்டளை பிறழாது இசைந்தே நடைபெறும். இதனுட் பயின்று வரும் ஓசை செப்பலோசை எனப்படும். செப்பலோசையாவது 'அகவிக்கூறாது ஒருவற்கொருவன் இயல்பு வகையானே ஒரு பொருண்மை கட்டுரைக்குங்கால் எழும் ஓசை' யாகும்.

செய்யுளுக்கு மோனை, எதுகை முதலிய ஓசை இன்பங்களை ஆன்றோர் வகுத்திருப்பினும், பண்டைப் புலவர்கள் அந்நயங்களைப் பெரிதுங் கவனியாது, தங்கள் கருத்துக் கேற்ற செழுஞ் சொற்களையே அமைத்துச் செய்யுள் பலவும் இயற்றுவாராயினர். சொற்களுக் கேற்றவாறு அவர்கள் கருத்துக்களைத் திரித்துக்கொள்வதில்லை. அவர்கள் கருத்துக்கிசைந்த சொற்களை அமைத்துச் செல்லுமிடத்து ஆங்காங்கு எளிதாகத் தோன்றும் எதுகை மோனைகளையே அமைப்பார்கள். இங்ஙனம் அவர்கள் செய்யுளியற்றியதனாலன்றோ அவர்களுடைய பாக்கள் தடையின்றி ஆற்றுநீர்போல் இன்னோசைகொண்டு ஒழுகுகின்றன; அவர்கள் கூறுவனவெல்லாம் இலேசில் விளங்கி ஒரு சித்திரப் படம்போல் நம் மனக்கண்ணுக்கு என்றும் புலப்படுகின்றன. இவ்வரும்பெருஞ் செய்கையன்றோ அப்புலவர்களுககு என்றும் அழியாப்புகழை விளைவிக்கின்றது. அங்ஙனமின்றிப் பிற்காலத்துப் புலவர் பெரும்பான்மையோர் யாப்பிலக்கணத்துக்கு ஒரு சிறிதும் வழுவாது செய்யுளியற்றக்கருதி, மோனை எதுகைகட்கு இடர்ப்பட்டுச்சொற்களை இணைத்து, அச்சொற்களுக்கேற்றவாறு தங்கருத்துக்களைத் திரித்துச் செய்யுளியற்றியதனாலன்றோ

அப்பாக்கள் நமக்கு இன்பமூட்டாமலும், மனத்தில் ஊன்றிப் பதியாமலும் மறைந்து விடுகின்றன. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலகவி இலக்கண வரம்பைப் பெரிதுங் கவனியாது செய்யுளியற்றியமையினால், தங்கருத்துக்களை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்தி என்றும் இன்பம் விளைவித்துப் பெரும் புகழ் பெறுகின்றார். இந்நாளில் மிகச்சிறந்த கவி என்று உலகத்தாரால் பாராட்டப்படும் ஸர். இரவீந்திரநாத் டாகோர் அவர்கள் இயற்றிய செய்யுள்களெல்லாம், மோனை, எதுகை, சீர் முதலிய இலக்கண வரம்புகளுக்குட்பட்டுச் செல்லாது, கருத்துக்கும் இன்னோசைக்கு மிசைந்த கொழுஞ் சொற்களுக் குட்பட்டுச் செல்கின்றமையான், அவற்றுட் கூறிய விடயங்களெல்லாம் மிக்க அழகுடன் படமெழுதி நம் கண்ணெதிரே காட்டினாற் போலத் தெளிவாக விளங்குகின்றனவென்று அவர் மாணவர் கூறுகின்றனர். இவ்வரிய நுட்பவினையன்றோ அவர்க்கென்றும் அழியாப் புகழை விளைவிக்கின்றது. இஃதே நல்லிசைப் புலவர் மாட்டுக் காணப்படும் அருமைப்பாடு.

கூத்தனாரும் எதுகை மோனைக் கிடர்ப்படாது தங்கருத்துக் கேற்றவாறு செய்யுளியற்றியுள்ளார். ஆதலினாற் சில செய்யுள்கள் அடியெதுகையாகவும், சில செய்யுள்கள் ஒரூஉ எதுகையாகவும், சில ஒரு விகற்பமாகவும், சில இரு விகற்பமாகவும், சில பல விகற்பமாகவும், சில இன்னிசையாகவும், சில நேரிசையாகவும் முடிந்தன. இங்ஙனம் ஓசையின்பம் மாறி மாறி வரத் தொடுத்தமையான் அவை கேட்போர்க்குக் கழிபேருவகை பயந்து நிற்கின்றன.

பண்டைக்காலத்துப் புலவர்கள் வெண்பாவிற் பெரும்பான்மையும் ஒரூஉ எதுகையை வழங்கியுள்ளார்கள். ஒரூஉ எதுகையென்பது * "இருசீ ரிடையிட் டொரூஉவென மொழிப" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறு, ஓர் அடியில் முதற் சீரும் நான்காஞ் சீரும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. இவ்வொரூஉ எதுகை திருக்குறள், நாலடியார்

* தொல - செய - சூ - கக.

நான்மணிக்கடிகை முதலிய நூல்களில் மிக்குப் பயின்று வருவதைக் கண்டுகொள்க. இந்நூலுள் உஉ, ௩௦-ம் செய்யுள்களின் மூன்றடியும், உரு, ௩க, ௩அ ன் முதலடியும், உசு, உஎ ன் இரண்டாம் அடியும், சு, கக, கரு, கஅ, உசு, ௩௪, ௩௯ ன் மூன்றும் அடியும் கக, உஅ, உக, ௩ரு ன் முதலிரண்டடியும், உ௦ ன் இடையிரண்டடியும் ஒரூஉ எதுகை பெற்றுவந்தன ௩௯-ம் செய்யுளின் முதலடி ஒன்றுமட்டுமே சிறந்த எதுகைபெற்று வரவில்லையெனலாம். ஒழிந்தவையெல்லாம் அடியெதுகை பெற்றுவந்தன.

இனி மோனையைப்பற்றி ஆராய்வோமாயின் இந்நூல் வெண்பாக்களின் ஈற்றிரண்டடியும்பெரும்பான்மையும் மோனையின்றித் தொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றையடிகளிலுஞ் சிறுபான்மை மோனையில்லை. மோனைவரின் அது வரம்பின்றி ஏதாவது ஒரு சீரில் பயின்று வருகின்றது. சில செய்யுள்கள் மோனையே யின்றியும் (உஅ, உக), சில ஒரு மோனையுடனுந் (ரு, கஎ, உரு) தொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலுட் பயின்ற உயிரளபெடைகள்பெரும்பான்மையும் செய்யுள் இசைநிறைக்கண் வந்துள்ளன. அவை 'தரூஉந் தளரியலாய்' 'மாஅந் தகைந்தன' 'கெடாஅப் புகழ்வேட்கை' 'படாஅ மகிழ்வண்டு' 'பிடாஅப் பெருந்தகை' என்பன. அளபெடை பெற்றுவாராவிடின் அச்சீர்கள் ஓரசையாய் நிற்கும். அங்ஙனம் நிற்றல் செய்யுளிலக்கண வழுவாகும். ஆதலான் அவற்றை இயற்சீர் ஆக்கவேண்டி ஆண்டு அளபெடை பெய்து வைத்தார் ஆசிரியர். 'கடாஅவுக பாகதேர்' என்பதனுள் அளபெடை இன்னிசைக்கண் வந்தது. ஈண்டு அளபெடை வாராவிடினும் தளைதட்டாது.

இனி இந்நூலின் நடையை நோக்குமிடத்துச் செய்யுளெல்லாம் செறிவின்றி நெகிழ்ந்த நடையாய் ஆற்றுநீர் ஒழுக்குப்போலச் செல்லுகின்றன. சிற்சில விடங்களிற் பாக்கள் பொருளுக்கேற்றவாறு மெதுவாகவும், விரைவாகவும், வல்லென்ற ஓசையுடனும், இழுமென் ஓசையுடனும் செல்லுகின்றன. தோழி தலைவியை ஆற்றுவிக்குஞ் செய்யுள்களும், தோழியுந் தலைமகனும் தம் நெஞ்சிற்குக் கூறுஞ் செய்யுள்களும் மென்மை

யாகவும், தலைமகன் விரைந்துவருதலைக்கூறுஞ் செய்யுள்களெல்லாம் (கச,உய,ஙஈ முதலியன) விரைந்தும், இடியோசையையும் தேரொலியையும் குறிக்கும் பாக்களெல்லாம் (ஈ,கய,கஎ,ஙஉ) வல்லென்ற ஓசையுடனும், தோழி தலைவியை இன்சொலாலாற்றுவித்தலைக் குறிக்குஞ் சில செய்யுள்களும் (ரு,அ,கங), வண்டு பாடுதலையும் பிறவொலியையுங் குறிக்குஞ் சில செய்யுள்களும் (கரு, உஅ) இழுமென் ஓசையுடனும் செல்லுகின்றன.

ஆயினும் நூலைப் பொதுவாக நோக்குமிடத்துச் சொல்வளப்பங் குறைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இதைப் போல அகவொழுக்கத்தைக் கூறும் திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது முதலிய நூல்களுடன் இதை ஒப்பவைத்து நோக்குங்கால், இதன் நடை மிக உயர்ந்த தீஞ்சுவை செறிந்த நடையாகக் காணப்படவில்லை. திணைமாலை நூற்றைம்பதிற் காணப்படும்,

"விளரியாழ்ப் பாண்மகனே வேண்டா வழையேன்
முளரி மொழியா துளரிக்—கிளரிநீ
பூங்கண் வயலூரன் புத்தில் புகுவதன்மு
னுங்க ணறிய வுரை."

"தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானன்
மாழை நுளையர் மடமக—ளேழை
யிணைநாடி வில்லா விருந்தடங்கண் கண்டுந்
துணைநாடி னன்றோ மிலன்."

என்னும் இன்சுவை யொழுகுஞ் செய்யுள்களைப் போலவாவது,

"அழலவிழ் தாமரை யாய்வய லூரன்
விழைதகு மார்ப முறுநோய்—விழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூறு
மழலைவாய்க் கட்டுரை யால்".

என்னும் ஐந்திணை ஐம்பதின் செழுஞ்சொற்செறிந்த செய்யுள் போலவாவது,

"வெறிகமழ் தண்சுனைத் தண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்

வெறிகமழ் தண்சோலை நாடவொன் றுண்டோ
வறிவின்கண் னின்ற மடம்.''

என்னும் ஐந்திணை யெழுபதின் நறுஞ்சுவைபழுத்த கொழுஞ் சொல் அமைந்த செய்யுள்போலவாவது இழுமென் ஓசை முதிர்ந்த பாக்களை இந்நூலுட் காண்பதரிது.

'' இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய் பொய்யன்மை யீண்டைப்
பவழஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு.''

'' திருந்திழாய் காதலர் தீர்குவ ரல்லர்
குருந்தின் குவியிணா ருள்ளுறை யாகத்
திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி
யின்குழ லூதும் பொழுது.''

என்பனபோன்ற சில இனிய பாக்களே இந்நூலுட் காணப் படுகின்றன. இதுனுட் 'சவட்டி' 'கடிதிடி' 'உரற்ற' 'கடாஅவுக' போன்ற வன்சொற்கள் மிக்கு வருதலினால், இது படிப்போர்க்கு ஏனையவற்றைப்போலச் சொல்லின்பம் பெரிதும் பயவாதென்பது கருத்து: ஆகவே இந்நூல் ஐந்திணை நூல்கள்போலத் தெள்ளிய செழுஞ்சொற்றொகுதியினால் யாக் கப்பட்டதென்று கூறுதற்கு இடனின்று.

இந்நூலை மற்றதன் இனமாகிய நூல்களுடன் ஒப்பவைத்து நோக்கும்பொழுது இஃது அவற்றிற்குக் காலத்தில் முற்பட்டதா கக் காணப்படுகின்றது. இது நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய நீதிநூல்கள் இயற்றப்பட்ட காலத்தினதாயிருத்தல் வேண்டுமென்று கருதப்படுகிறது. அந்நூல்கள் போலவே இந்நூலுள் ஒரூஉ எதுகை மிக்கும், பாக்கள் பல விகற்பமா யும் இன்னிசையாகவும் முடிகின்றன. திணைமாலை நூற் றைம்பதின் பாக்களெல்லாம் இருவிகற்பமாய் அடியெதுகை பெற்றே நடைபெறுகின்றன. அதனுள் ஓரடியேனும் ஒரூஉ எதுகை பெறவில்லை. ககஅ-வது செய்யுள் தவிர ஒழிந் தவை யெல்லாம் நேரிசையாய் முடிந்திருக்கின்றன.

எதுகையோசை பிற்காலத் தெதுகைபோல முதற்சீர் முற்றும் பொருந்தி வருகின்றது. இத்திணைமாலையின் செய்யுட் போக்குப் பெரும்பான்மையும் முத்தொள்ளாயிரச் செய்யுட் போக்கை ஒத்திருக்கின்றது. இனி ஐந்திணை ஐம்பதிலும் ௩,௧௫ பாக்களின் இரண்டோரடிதவிர ஏனையவை யெல்லாம் அடி யெதுகையே பெற்றுவருகின்றன. கார்நாற்பது மேற்கூறிய நூல்களைக் காட்டினும் மிகக் குறைந்த (௪௰) பாக்களைப் பெற்றிருப்பினும் பெரும்பான்மையும் ஒரூஉ எதுகையையே பெற்று நடைபெறுகின்றது.

இதனுள் வழங்கியுள்ள சொற்களை ஆராயுமிடத்துப் பருவம், அஞ்சனம், குஞ்சரம், மனம், மணி, நாகம் முதலிய சில வடசொற்களேயன்றிப் பல காணப்படவில்லை. விலங்கு, சவட்டி, அனுங்க, நெருநல், பொச்சாப்பு, பழங்கண் முதலிய அரிய சொற்களை வழங்கி யிருத்தலும், 'காடுங் கடுக்கை கவின் பெறப் பூத்தன', 'காயாவு நுண்ணரும் பூழ்த்த புறவு' என்பனபோன்ற அரிய இலக்கண வழக்கு வந்திருத்தலும் இங்கு நோக்கத்தக்கன. இக்காரணங்களை எல்லாம் ஒருங்குவைத்து நோக்குமிடத்து இந்நூல் திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது முதலிய நூல்களுக்கு முற்பட்டதென்பது போதரும்.

இந்நூலுள் வழங்கிய அரிய இலக்கணக் குறிப்புகளும் சொற்களும்.

"**கா**டுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன" (௪) என்பதில் முதலுஞ்சினையு மொரு முடிபு கொண்டன. இதனை இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் நின்றது என்று கூறுதலமையாதோவெனின் அமையாது; என்னை? காடு என்பது மரங்கள் பலவற்றின் ஈட்டத்தால் உண்டானதொன்றன்றி அவற்றைத் தவிர்த்து நிற்கும் ஒரு பொருளன்று. ஆகவே மரஞ் சினையும் காடு முதலுமாகும். நிலம்பூத்தது, மலை அசைந்தது என்னுமிடத்து நிலத்திலும் மலையிலுமுள்ள செடிகள் பூத்தன, மரங்கள் அசைந்தன என்பது பொருளாதலான் அவை இடத்து நிகழ் பொருளின் தொழிலைக் குறிக்கும். "தீம்பிழி

யெந்திரம் பத்தல் வருந்த" (பதிற்றுப்பத்து. கக) என்பதும் அவ்விலக்கணம்.

"நெடுவிடைச் சென்றுழை" (சு) "நெடுவிடைச் சென்றது" (கக)—நெட்டிடை என்று பிறவிடங்களிற் பயின்று வரவும் ஈண்டு நெடுவிடையென வருதல் 'மருவின் பாத்திய' (தொல்-எழுத்து-சூ-சஅ௨) என்பதனுள் பாத்திய என்ற இலேசாற்கொள்ப.

'நல்விருந் தாக நமக்கு' (கூக) என்னுமிடத்து 'விருந்து' ஆகுபெயராய் விருந்தயருமிடத்தைக் குறித்தது.

'பிடாஅப் பெருந்தகை நற்கு' (கூ௨) என்னுமிடத்துக் 'கண்' என்னும் ஏழாம் உருபு தொக்கு நிற்கின்றது.

'இந்து' (சஶ) என்பது ஈந்து என்பதன் குறுக்கல்விகாரம். 'நற்கு' (௨௨) நன்கு என்பதன் வலித்தல் விகாரம்.

'விலங்கு' (க) என்பது குறுக்கென்னும் பொருட்டாய் வந்துளது. இக்காரணம் பற்றியே, மிருகங்கள் குறுக்காய் வளர்ந்திருப்பதனால் அவற்றிற்கு விலங்கென்றும், மலைகள் குறுக்கிட்டுக் கிடப்பதனால் அவற்றிற்கு 'விலங்கல்' என்றும் பெயர் வந்துள்ளன. 'விலங்ககன்ற வியன்மார்ப்' என்பது புறநானூறு. (௩)

'ஊழ்த்தல்' (அ) என்பது மலர்தலென்னும் பொருளைத் தந்து நிற்கின்றது. அஃது உதிர்தல் என்னும் பொருட்டாயும் பிறவிடங்களில் வரும்.

'இறப்ப' (கூ) என்பது நீங்க என்னும் பொருள் தந்தது. 'வரிவளை முன்கை வரவர விறப்பப் போனநந் தனிநமர்' என்பது கல்லாடம். (கஅ).

'ஏரும்' (க௨) என்பது 'எழாநிற்கும்' என்னும் பொருட்டாயது. ஏர்-எழுச்சி. 'மயங்கி வலனேருங் கார்' ஐந்திணை ஐம்பது (க) 'பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு-கோடு கொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி' முல்லைப்பாட்டு. (ச).

'பழங்கண்' (கரு) என்பது மெலிவு. 'பழங்கண கொண்ட பசலை மேனியள்' அகநானூறு (௨கச).

'இறுவரை' (௪௭) என்பது பிறவிடங்களில் இற்றவரை, பெரியமலை என்று பொருள்படினும் ஈண்டுப் பக்கமலை என்னும் பொருளைத்தந்து நின்றது. "இருடேங் கிறுவரை யூர்பிழி பாடும்" கலித்தொகை. (௪௩).

'சவட்டி' (௪௭) என்பது 'வருத்தி' என்னும் பொருளில் வந்தது. 'மன்பதை சவட்டுங் கூற்றம்' பதிற்றுப்பத்து (௮௪). 'சகரக் கிளவியு மற்றோ ரற்றே அ ஐ ஔ வெனு மூன்றலங் கடையே' (தொல். எழுத்து.சூ.௬௨) என்றமையால் தொல்காப்பியர் காலத்தில் சகரம் மொழிக்கு முதலில் வழங்கப்படவில்லை. பின்னெழுந்த நூல்களில் அத்தகைய மொழிகள் வழங்கப் பட்டன.

'ஈர்ங்கட்டு' (௨௨) குளிர்காலத்திற்கு உடுத்துக் கொள்ளப் படும் அழகிய உடை.

'வளம்' (௨௨) என்பது வருவாய் என்னும் பொருட்டாய் வந்தது. 'வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்' நான்மணிக்கடிகை. (௬௩).

'நலம்' (௨௨) என்பது வடிவம் என்னும் பொருளில் வந்தது. 'இளநலங் காட்டி' என்பது திருமுருகாற்றுப்படை. ௨௯௰.

'உளரும்' (௩௰) என்பது அசையுமென்னும் பொருட்டாய் வந்தது. 'விரைவளர் கூந்தல் வரைவளி யுளர' புறநானூறு. (௧௩௩).

'இடம்' (௩௩) வழி யென்னும் பொருளைத் தந்தது. 'விரும்புநாஞ் சொல்லு மிடம்' திணைமொழி ஐம்பது. (௧௬).

'திரு' என்பது சிதேவி யென்னுந் தலைக்கோலம். இவ்வணிகலன் உத்தி என்றுஞ் சொல்லப்படும். 'உத்தி பொறித்த புனைபூண் பருமத்து' கலித்தொகை. (௬௭).

'தகைதல்' (௧௯,௩௬) மலர்தல் என்னும் பொருட்டாய் வந்தது. அஃது அழகுபெறுதல், தடுத்தல் என்னும் பொருட்டாயும் பிறவிடங்களில் வரும். 'வான்பிசிர் கருவியிற் பிடவு முகை தகைய' ஐங்குறுநூறு. (௪௬௧).

'உயிர்க்கும்' என்பது ஒலிக்கும் என்னும் பொருளைத் தந்தது. 'வள்ளுயிர்த் தண்ணுமைபோல்' நற்றிணை. (௩௧௦).

பிற இலக்கணக் குறிப்புகளையும், சொற்பொருளையும் உரையிற் கண்டு கொள்க.

நூலாசிரியர் வரலாறு.

கார் நாற்பது இயற்றியவர் **மதுரைக் கண்ணங் கூத்தனார்** எனப்படும் நல்லிசைப்புலவர் ஆவர். இவருடைய பெயரைக் கொண்டு இவர் பிறப்பிடம் மதுரையென்று ஊகிக்கப்படுகிறது. கண்ணங்கூத்தனார் என்றமையான் இவருடைய தந்தைபெயர் கண்ணனார் ஆகும். கடைச்சங்க காலத்திருந்த வேம்பற்றூர்க் கண்ணங்கூத்தனார் என்பவரும் இவரேயென்று ஒருவர் கருதுகிறார். மதுரைக் கணித்தாகிய வேம்பற்றூர் என்னுஞ் சிற்றூரிற் புலவர் வதிந்து வந்தமையான் அவர்க்கு இப்பெயரும் வழங்கப்பட்டிருக்குமென்று அவர் கருதுகின்றனர். ஆயினும் அதைப்பற்றி ஒருதலையாகக் கூறுதற்கு ஆதாரம் ஒன்றுமின்று. இந்நூல் கடைச்சங்கநூல்களுள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருத்தலாற் கூத்தனார் கடைசசங்க காலத்துப் புலவர் ஆவர். அஃதாவது இற்றைக்கு கஎ௦௦ ஆண்டுகட்கு முற்பட்டிருந்தவர் ஆவர். இவர் நூலின் நடையைக் கொண்டு இவர் கடைச்சங்க காலத்தின் இடைப்பகுதியிலிருந்திருக்க வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது.

இவர் திருமாலையும், நாஞ்சில் வலவனையும் இந்நூலுள் கூறுவதுடன், 'பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல' 'நலமிகு கார்த்திகை' என்று வேள்வித்தீயையும், கார்த்திகைத் திருவிழாவையும் புகழ்ந்துரைத்தலினல், இந்து சமயத்தவரென்பது கருதப்படுகின்றது. இவருடைய பெயரும் இவர் சமணர் அல்லரென்பதைக் குறிக்கும்.

இந்நூல் அகப்பொருளைக் கூறுவதொன்றாயினும் இதனுள் ஆசிரியர் ஓரிடத்தன்றிப் பிறவிடங்களில் இடக்கர்ச்சொல்லைப் பெய்துவைக்காமையானும், வல்லென்ற வோசையுடைய சொற்கள் பலவற்றை வழங்கலானும், தனிமையையும் வருந்துதலையுமே தம் நூலுக்கு முக்கிய பொருளாய்க் கொண்டமையானும், வேள்வியைப் புகழ்ந்துரைத்தலானும் கூத்தனார் துறந்த உள்

ளமும், மன உறுதியும், உலகப்பொருளிற் பற்றின்மையும், சிறந்த ஒழுக்கமும் உடையவராயிருந்திருத்தல் வேண்டுமென் பது தேற்றம். இவர் காட்டிலுள்ள இயற்கைப் பொருள் களைப் பலதிறப்படக் கூறுதலினால், இவர் காட்டிற் பல நாள் சுற்றித் திரிந்திருத்தல்வேண்டும். இயற்கைப் பொருள் களைக் கண்டவாறே சிறப்பித்துக் கூறுதலிலும், தாம் எடுத்துக் கொண்ட பொருளை இயற்கைக்கு முரணாது அணிவகுத்துச் சொல்லுதலிலும், மனோபாவத்திற்கிசைந்த உவமைகளை ஆளுத லிலும் இவர் மிகவும் வல்லவர். இவர் இந்நூலன்றி வேறு செய் யுள்கள் இயற்றியதாகத் தெரியவில்லை.

சிறப்புப் பாயிரம்.

முல்லைக் கொடிமகிழ மொய்குழலா ருண்மகிழ
மெல்லப் புனல்பொழிய மின்னெழிற்கார்—தொல்லைநூல்
வல்லா ருளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கார் நாற்பது

மூலமும் உரையும்.

நூல்.

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகனது வரவு நீட்டித் தமையாற் பிரிவிடை ஆற்றாது கலங்காநின்ற தலைமகட்குத் தோழி, 'உரைத்த கார்ப்பருவம் வந்ததாகலான் அவர் வருவர்' எனப்பருவங்காட்டி வற்புறுத்தியது.

க. பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெய றாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந் தாலிக்கும் போழ்து.

உரை:—பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்-கரையை மோதுங் கடலினது நிறத்தினையுடையானது அலங்கரித்த மார்பிற் பூமாலைபோல, திருவில் விலங்க ஊன்றி - இந்திர வில்லைக் குறுக்காக நிறுத்தி, தீம் பெயல் தாழ - இனிய மழை பெய்யாநிற்க, வருதும் என மொழிந்தார் - வருவேமென்று சொல்லியவர், வானம் கரு இருந்து ஆலிக்கும் போழ்து வாரார் கொல் - மேகம் சூற்கொண்டிருந்து மழைத்துளிகளைப் பெய்யாநின்ற இக்காலத்து வாராரோ? (வருவர்)—என்றவாறு.

வினைவயிற் பிரிந்த காதலன் தான் வருந்துணையும் ஆற்றியிருவென்று கூறிய சொல்லைப் பிழையாமல் காதலி ஆற்றியிருந்த ஒழுக்கத்தைக் கூறுதலான், இது முல்லைத்திணையா

யிற்று. ஆகவே முல்லைக்குத் தெய்வமாகிய திருமாலையே ஈண்டுக் கூறினார். என்னை, "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகம். சூ. ரு) என்பது சூத்திரமாகலின். திருமால் கடல் வண்ண முடையானென்பது, "இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்" (பெரும்பாண். உக) என்பதனானு மறியப்படும். திருமால் முல்லையின் கருப்பொருள். திருவில் - வானவில். கார்காலத்தில் திருவில் தோன்றுதல் இயல்பு. "தேர்செல வழுங்கத் திருவிற் கோலி யார்கலி யெழிலி கார் தொடங்கின்றே" (ஐங்குறு. உசஅ) என்றார் பிறரும். "விலங் ககன்ற வியன்மார்ப" (புறம். ங) என்புழிப்போல, விலங்கென்பது ஈண்டுக் குறுக்கென்னும் பொருட்டாய் நின்றது. "மலை பரந்து........விலங்கரு வெஞ்சுரம்" (கலி. கௌO) என்றார் பிறரும். நீலநிறமுடைய வானின்கண் பலநிறத்தோடு விளைந்து தோன்றும் திருவிற்கு, நீலநிறமுடைய மாயோன் மார்பின்கண் பலநிறத்தோடு விளைந்து கிடக்குந் தாரினை உவமித்தமையின் உருவுவமத்தோடு மெய்யுவமமும் விரவிற்று. இது "விரவியும் வரூஉ மரபின வென்ப" (தொல். பொருள். சூ. உஎஎ) என்றதானமையும். நீலவானுக்குத் திருமால் மார்பு உவமையாதலைத் "திருமா லகலஞ்செஞ் சாந்தணிந் தன்னசெவ் வான்முகட்டு" (இறை. அகம். மா. கோவை. சுஎ) என்பதனானுமறிக. திருவில் பன்னிற மலர்கள் சேர்ந்து விளைந்து நிற்றலை யொக்குமென்பது "எருவை கோப்ப வெழிலணி திருவில் வானி லணித்த வரியூதும் பன்மலராற் கூனி விளைத்த சுனை" (பரிபாடல். கஅ) என்பதனானு மறியப்படும். கொல் - ஐயக்கிளவி; "கொல்லேயையம்" (தொல். சொல். சூ. உசஅ) என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

தலைவர் வருவரென்று தோழி வற்புறுத்தின்மையின் இருத்தனிமித்தமாகிய உரிப்பொருளும், கார்ப்பருவங் கூறினமையின் முதற்பொருளுங் கூறினாராயிற்று.

ஊன்றித் தாழ வருதுமெனமொழிந்தார் ஆலிக்கும் போழ்து வாரார்கொல் எனக் கூட்டுக. (க)

தலைமகன் வரவு நீடுமென்று ஆற்றாளாய தலைமகட்குத் தோழி பருவங்காட்டி, 'நமர் இன்னே வருவரென்பதை யுரைக்க அவர் தூதாகி வந்ததுகாண் இவ்வெழில் வானம்' என வற்புறுத்தியது.

உ. கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக்—கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென் றெழில்வான
மின்னு மவர்தூ துரைத்து.

உரை :—கொடுங்குழாய் - வளைந்த குழையையுடையாய், கடுங் கதிர் நல்கூர - வெய்ய கிரணங்களையுடைய பகலோன் வறுமையுற, நெடுங்காடு நேர் சினை ஈன - நெடிய காடுகளெல்லாம் தம்மிலொத்த பூங்கொம்புகளைப்பெற, கார் செல்வம் எய்த - கார் காலம் வளப்பத்தையடைய, எழில் வானம்-எழுச்சியையுடைய முகில், நமர் இன்னே வருவர் என்று - நம் தலைவர் இப்பொழுதே வருவாரென்று, அவர் தூது உரைத்து மின்னும்-அவர் வருஞ்செய்தியைத் தூதாக வந்து முன்னருரைத்து மின்னுகின்றது—எ-று.

கடுங்கதிர் அன்மொழித்தொகை. கதிர் நல்கூர்தலென்றது அதன் ஆற்றல் ஒழிந்து சிற்றலென்றவாறு. கார் ஆகு பெயர். சினை அரும்புமாம். "தும்மல் சினைப்பது போன்று கெடும்."(குறள். ௧௨௦௩.) என்புழியும் அப்பொருள். கொடுமை- வளைவு. ஏகாரம் தேற்றம்.

'கொடுங்குழை' என்பதும் பாடம்.

அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றற்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டியுள்ளார் அகப் பொருள் விளக்க உரைகாரர். (நம்பி. அகம். சூ. ௧௭௦).

கூர எய்த ஈன வருவாரென்று வானம் உரைத்து மின்னும் என வினைமுடிவு செய்க. (உ)

தலைமகன் குறித்த பருவம் வந்தும் அவன் வாராமையால் தலைமகள் ஆற்றாது வேறுபட, அதுகண்டு தோழி தனது ஆற்றாமை தோன்றக் கூறியது.

௩. வரிநிறப் பாதிரி வாட வளிபோழ்ந்
தயிர்மணற் றண்புறவி னாலி—புரள
உருமிடி வான மிழிய வெழுமே
நெருந லொருத்தி திறத்து.

உரை :—வரிநிறப் பாதிரி வாட - வரிநிறத்தையுடைய பாதிரிப் பூக்கள் வாட, வளி போழ்ந்து அயிர் மணல் தண் புறவின் ஆலி புரள - காற்றினால் ஊடறுக்கப்பட்டு நுண்மணலையுடைய குளிர்ந்த காட்டின்கண் ஆலங்கட்டிகள் புரள, உரும் இடி வானம் - இடி இடிக்கும் முகில், நெருநல் ஒருத்தி திறத்து இழிய எழுமே - நேற்றுமுதல் தனித்திருக்கும் ஒருத்தியின் பொருட்டு மழைபெய்ய எழாநின்றதே—எ-று.

பாதிரி வேனிற்குரிய பூவாயினமையின் கார்காலத் தொடக்கத்தில் அழிந்தது. அது வேனிற்குரிய தென்பதையும், வரிநிறமுடைத்தாதலையும், "வேனிற் பாதிரிக் கூனி மாமலர்" (அகம். உருசு), "வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன" (குறுந் ககள), "வேனிற் பாதிரி விரிமலர் குவைஇ" (ஐங்குறு. ௩௬௧), "புன்காற் பாதிரி வரிநிறத் திரள்வீ" (அகம். உ௩௬) என்பவற்றானு மறிக. பாலைக்குப் பயின்ற இது முல்லைக்கண் வந்து மயங்கியது, "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்த நிலத்தின் பயத்தவாகும்" (தொல். பொருள். சூ. கசு) என்னும் சூத்திரத்தானமையும். ஏகாரம் தேற்றம். 'நெருநல்' என்றதனை 'ஒருத்தி திறத்து' என்பதுடன் சேர்ப்புழிக், 'குறித்த கார்காலம் நேற்றே வந்தும் தலைமகன் வாராமையான் நேற்றுமுதல் தனித்திருந்து வருந்துவாள்மாட்டு இன்றும் இது வந்தமையான் அவள் இனி உயிர் வாழுமாறு யாங்ஙனம்' என்பாள் 'எழுமே' என்று கூறினளெனப் பொருள்கொள்ளப்படும். 'வானமிழிய வெழும்' என்பதுடன்

அதனைச் சேர்ப்புழித், ' தனித்திருப்பாட்கு இரங்கிக் கலுழ மாறுபோல நேற்றுமுதல் முகில்மழை பெய்யாநின்று மேல் எழாநின்றது ' என்று பொருள் கோடலுமாம்.

' இழிந்தெழுந் தோங்கும் ' என்பதும் பாடம்.

பாதிரி வாடப்போழ்ந்து ஆலிபுரள ஒருத்தி திறத்து வானமிழிய வெழும் என முடிக்க. (ரு)

பிரிவாற்றாமையாற் பசலை படர்ந்த தலைமகட்குக் ' கார் வந்தமையான் அது நீங்கும் ' எனத் தோழி பருவங்காட்டி வற் புறுத்தியது.

ச. ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்
காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன
பாடுவண் டூதும் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து.

உரை :—ஆடு மகளிரின் மஞ்ஞை யணி கொள - கூத் தாடும் மகளிரே போல மயில்கள் அழகுபெற, காடும் கடுக்கை கவின்பெறப் பூத்தன - காடுகளும் கொன்றைகள் அழகுபெற மலர்ந்தன ; பாடு வண்டு ஊதும் - இளி என்னும் பண்ணைப் பாடும் வண்டுகள் அப்பூக்களை ஊதா நிற்கும் ; (ஆதலாற்) பணைத்தோளி - மூங்கில்போன்ற தோளையுடையாய் ! பருவம் வாடும் பசலை மருந்து - இப்பருவம் வாடுதலாலுண்டாகிய நின்பசப்புக்கு மருந்தாயிற்று—எ-று.

ஆடுமகள் வெறியாடுமகள் என்றலுமாம். " மஞ்ஞை யாடுமகள் வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும் " (குறுந். ௩௬௩) என்றார் பிறரும். மஞ்ஞை ஆடுதற்றொழிலினு லும் சாயலினுலும் ஆடுமகளிரை யொக்கும். கார் காலத்தில் களியின் மிகுதியான் மஞ்ஞையாடுத லியல்பு. குறிஞ்சிக்குப் பயின்ற இப்புள் முல்லைக்கண் வந்து மயங்கிற்று. இன் - உவமப் பொருவு. உம்மை எச்சம். கொன்றை கார்காலத்தில் மலர்வதொன்றென்பது, " கார்விரி கொன்றைப் பொன்னேர்

புதுமலர்" (அகம். காப்பு.) "கண்ணிகார்நறுங் கொன்றை" (புறம். க) என்பவையானு மறியப்படும். 'காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன' என்பதில் முதலுஞ்சினையும் ஒரு முடிபு கொண்டன. வண்டு பறக்குங்கால் சிறை புடையினும் தாளினும் உராய்தலினால் இளியென்னும் சுரவோசை தோன்றுதல் பற்றிப் 'பாடுவண்டு' என்றாள். பூக்களை ஊதுதல் தேன்பருக. பசலை பிரிவாற்றாமையானுண்டாகும் நிற வேறுபாடு. "பசப்புநிற னாகும்" (தொல். சொல். சூ. ௩0எ) என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

'கவின்கொள' என்பதும்பாடம்.

அணிகொளக் காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன; வண்டேதும் பருவம் மருந்து என இயையும். (ச)

தலைமகன் வருதல் பொய்யென்று கருதி ஆற்றாது தனது மணிவடம் பரிந்தெறிந்த தலைமகட்குத் தோழி பருவங் காட்டி 'வருதல் பொய்யன்று' என வற்புறுத்தியது.

ரு. இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய் பொய்யன்மை யீண்டைப்
பவழஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு.

உரை:—பகழிபோல் உண் கண்ணாய் - அம்புபோன்ற மையுண்ட கண்களையுடையாய்! ஈண்டைப் பவழஞ் சிதறியவைபோல - இவ்விடத்துப் பவளஞ் சிந்தியவைபோல, புறவு கோபம் தவழும் தகைய - காடுகள் இந்திர கோபங்கள் பரக்குந் தகைமையை யுடையவாயின; (ஆதலான்) இகழுநர் சொல் அஞ்சிச் சென்றார் வருதல் பொய்யன்மை - இகழ்வார் மொழிக்கு அஞ்சிப் பொருட்குப் போயினார் மீளவருதல் பொய்யன்மையாம்—எ - று.

தன்னையடுப்பவர்க்குப் பொருள் கொடாவிடின் இகழ்வாரென்றஞ்சி, வேந்தற்கு வினைசெய்து பொருள்பெறத் தலைமகன் சென்றானென்றறிக. "இல்லென விரந்தோர்க் கொன்றீயாமை யிளிவெனக் கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்"

(கலி - உ) என்றூர் பிறரும். ஆயின் முன்னர்ப் பொருளில னென்பதும் அஃது. அவன் பொருவிறப்புக் கொருகுறைபா டென்பதுமில ; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறம் நடாத்துதல் ஆண்மைத்தன்மை அன் றென்றும், அதனுல் வரும் பயன் தமக்கின்றி அவர்க்காமென் றும், ஆகவே தனதுதாளாற்றலால் படைத்தபொருள்கொண்டே வழங்கி வாழ்தல் நலமென்று மறிந்தமையின், பொருள்தேடச் சென்றூனென்பது. மகளிர் கண் வடிவத்தானும், ஆடவரை வருத்துந் தொழிலானும் அம்பையொத்திருத்தலின் உவமம் மெய்யொடு வினைமேல் வந்தது. தலைமகள் தானணிந்திருந்த பவளவடத்தை வருத்தமிகுதியான் அறுத்தெறிந்தனள் என் பதை 'ஈண்டை' யென்னுஞ்சொல் உணர்த்திற்று. ஈண்டு என்பது தலைவியின் பள்ளியறை. ஐகாரம் சாரியை. கோபம் தம்பலப் பூச்சி. இது கார்காலத்தில் தோன்றுவதொரு செந் நிறம்பொருந்திய எண்கால் பூச்சி. இது செந்நிறமுடைத்தாத லைக் "கோபத்தன்ன தோயாப் பூந்துகில்" (திருமுருகு. கரு) என்பதனுனுமறிக. உவமம் வண்ணத்தோடு வடிவுபற்றிச் சென்றது.

'இகழுநாச்சொல்' 'தவழத்தகைய' என்பனவும் பாடம். (ரு)

தலைமகன் வரவு நீடுமென நினைந்துற்ற துயரினுன் மெலி ந்ததோள் நோக்கி வருந்தும் தலைமகளைத் தோழி, 'இக்கார்ப் பருவம் வந்தமையான் வரவு நீடாது' எனக் கூறி ஆற்றுவித் தது.

சு. தொடியிட வாற்று தொலைந்ததோ ணோக்கி
வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணுய் வருந்தல்
கடிதிடி வான முரறு நெடுவிடைச்
சென்றூரை நீடன்மி னென்று.

உரை :—வடு இடைப் போழ்ந்து அகன்ற கண்ணுய் - மாவடுவின் நடுவே பிளந்தாற்போல அகன்ற கண்களையுடை யாய்! கடிது இடி வானம் - கடுமையாய் இடிக்கும் முகில், நெடு

இடைச் சென்றுரை நீடன்மின் என்று உரறும் - நெடிய வழிச் சென்றுரைக் காலந்தாழாது போவீரென்று சொல்லி முழங்காநின்றது ; (ஆகலான்) தொடி இட ஆற்று தொலைந்த தோள் நோக்கி வருந்தல் - வளையிடுதற்கு ஆற்றுதாய் மிகமெலிந்த தோளைப் பார்த்து வருந்தாதே—எ - று.

துயர்மிகுதியால் தலைமகள் உறுப்பு நலனிழந்தாள். "தொடியொடு தோணெகிழ" (குறள். கஉஙங), "தொடிநிலை கலங்க வாடிய தோளும்" (ஐங்குறு. சஎகு) என்றூர் பிறரும். வடு மாவின் இளம்பிஞ்சு. உவமம் மெய்யின்மேற் சென்றது. "இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினல்" (கலி. கOஅ) என்றூர் பிறரும். 'நெடுவிடை' ஈறுதொக்கு மருவின் பாத்தியவாய் நின்று ஒற்றடுக்காது வகரவுடம்படுமெய் பெற்று இயல்பாய்ப் புணர்ந்தது எதுகைநோக்கியும், தளைநோக்கியும். மூன்றும் அடியில் ஒரூஉ எதுகை பயின்றமையின் நான்காம் அடியில் அடிஎதுகை இன்று. இங்ஙனம் பயிறல் சங்கச்செய்யுள்களினியல்பு. மேல் வருஞ் செய்யுட்களிலும் கண்டுகொள்க.

'அகழ்ந்த' 'நெறியிடை' 'உரற்றும்' 'சென்றோரை' என்பன வேறு பாடம். (ங)

பிரிவு நீட வேறுபட்ட தலைமகட்குத் தோழி, 'நமரை நமக்குத் தருதற்கு வந்ததுகாண் இப்பருவம்' எனக்காட்டி வற்புறுத்தியது.

எ. நச்சியார்க் கீதலு நண்ணூர்த் தெறுதலுந்
தற்செய்வான் சென்றூர்த் தரூஉந் தளரியலாய்
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரு மின்னு மழை.

உரை :—தளரியலாய் - மனந்தளர்ந்த இயல்பினையுடையாய் ! நச்சியார்க்கு ஈதலும் - தம்மை விரும்பி வந்தவர்களுக்கு அளித்தலினுலும், நண்ணூர்த் தெறுதலும் - தம்மையடையாத பகைவரை யழித்தலினுலும், தன் செய்வான் சென்றூர் - தம்மை நிலைபெறுத்திக் கொள்வான் பொருட்குப் போயினுரை,

பொச்சாப்பு இலாத புகழ் வேள்வித் தீப்போல - மறப்பில்லாத புகழையுடைய வேள்வித்தீப்போல, எச்சாரும் மின்னும் மழை தரூஉம் - எம்மருங்கும் மின்னு நிற்கும் வானம் கொண்டு வரும் — எ - று.

வேந்தற்குற்றுழிப் பிரிந்தமையான் நண்ணார்த் தெறுதலும், அவ்வினைசெய்து பொருள்பெறலால் நச்சியார்க் கீதலுமாம். "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும் பெரிதாய பகைவென்று பேணுரைத் தெறுதலும்" (கலி. கக) என்முர் பிறரும். 'தீர்த்தலும்' என்று பாடமோதின், 'தம்மை விரும்பி அடைந்தவருடைய வறுமையை யொழித்தலினாலும்' என்று பொருள் கோடலமையும். இருவழியும் உம்மை எண்ணுக் கண் வந்தது. அளபெடை இசை நிறைக்கண் வந்தது. தலைமகள் மனந்தளர்ந்தது பிரிவாற்றாமையான். "தளரியா ளென்னறிதல் வேண்டின்" (கலி. ககரு) "தணந்த தன்றலையு நீ தளரியலவரொடு" (கலி. சுசு) என்முர் பிறரும். 'தளிரியலாய்' என்று பாடமோதின் 'மாந்தளிரின் இயல்பினை யுடையாய்' என்று கூறுதலமையும். பிரிவின்கண் வருந்தும் தலைவிக்கு நிறம் வேறுபடுதலின் முன்னதே யேற்றமுடைத்து. 'பொச்சாப்பிலாத புகழ்வேள்வி' என்முள், வேள்வி மக்களுக்கு இம்மையில் மழைவளம் சுரத்தல், ஆபயன் பெருக்கல் முதலாய பல நன்மைகளைப் பயத்தற் காரணத்தானும், மறுமையில் வீட்டின்பத்தை யளித்தற் காரணத்தானும், எஞ்ஞான்றும் யாண்டும் புகழப்படுதலின். "பொச்சாப்புக் கொல்லும் புகழை" (குறள். ருநுஉ) என்றமையின் ஈண்டுப் 'பொச்சாப்பிலாத புகழ்' என்முள். ஒளிபற்றி உவமம் பயின்றமையின் இஃது உருவுவமம். உம்மை முற்று. (எ)

பிரிவின்கண் ஆற்முளாய தலைமகட்குத் தோழி, 'அவர் இன்னே வருதலைக் கூறுமிப்புறவு' எனக் காட்டி வற்புறுத்தியது.

அ. மண்ணியன் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்ணிய னல்லாய் பிரிந்தார் வரல்கூறும்

கண்ணிய லஞ்சனந் தோய்ந்தபோற் காயாவும்
நுண்ணாரும் பூழ்த்த புறவு.

உரை :—பெண் இயல் நல்லாய் - பெண்ணியல்பினை யும் நற்குணங்களையு முடையாய்! மண் இயல் ஞாலத்து மன்னும் புகழ் வேண்டி - மண்ணா ணியன்ற உலகத்து நிலை பெற்றிருக்கும் புகழை விரும்பி, பிரிந்தார்வரல் - வினைவயிற் போயினார் வருதலை, கண இயல் அஞ்சனம் தோய்ந்தபோல் காயாவும் நுண் அரும்பு ஊழ்த்த புறவு - கண்ணிற் கியற்றப் படும் மையில் முழுகினவை போலக் காயாஞ் செடிகளும் நுண்ணிய அரும்புகள் மலரப் பெற்ற காடுகள், கூறும் - தெரி வியா நிற்கும்—எ-று.

பகைவரை வெல்லுதலினாலும், இரப்போர்க் கீதலினாலும் மன்னும் புகழ் பெறுதலாம். 'மன்னும் புகழ்' என்றது தாம் மறையினும் உலகம் உளதாங்காறும் தம் புகழ் நிலவுத லென் றவாறு. "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே" (புறம் - கசுரு) என்றார் பிறரும். மகளிர் கண்களுக்கு மை தீட்டுதல் பண்டை நாள் தொட்டு வருமொரு வழக்கம். வண்ணத்திற்குத் தான் பயின்ற அஞ்ச னத்தையே தோழி கூறினது ஈண்டு மிகவும் ஏற்புடைத்து. இஃது உருவுவமம். காயா கரு நிறமுடைத் தாதல் "மணி யெனத் தேம்படு காயா மலர்ந்த" (ஐங்குறு. சஉ0), "குறும் பொறை மருங்கிற் கரிபரந்தன்ன காயாஞ் செம்மலொடு" (அகம். கசுஉ), "மணி புரை யுருவின காயாவும்" (கலி கக0), என்பவையானு மறியப்படும். "அஞ்சனக் காயா மலர" (திணைமொழி. ஐம். உக), "செறியிலைக் காயா வஞ்சன மலர" (முல்லை. கூகூ), என்றார் பிறரும். உம்மை எச்சம். "மாதரார் முறுவல்போன் மணமௌவன் முகையூழ்ப்ப" (கலி. உஎ) என்புழிப்போல ஊழ்த்தல் மலர்தல் என்னும் பொருட்டாயது. 'காயாவும் நுண்ணாரும் பூழ்த்த புறவு.' என்பதில் முதலுஞ் சினையும் ஒரு முடிபு கொண்டன.

'தோய்ந்தனபோல்' என்பதும் பாடம். (அ)

இருவமது.

௬. கருவிளை கண்மலர்போற் பூத்தன கார்க்கேற்
றெரிவனப் புற்றன தோன்றி—வரிவளை
முன்கை யிறப்பத் துறந்தார் வரல்கூறும்
இன்சொற் பலவு முரைத்து.

உரை :—கண்மலர்போற் பூத்தன கருவிளை - கண்மலர் போலப் பூத்தவையான கருவிளம் பூக்களும், கார்க்கு ஏற்று எரி வனப்பு உற்றன தோன்றி - கார்ப்பருவத்திற் கெதிர்ந்து தீயினது அழகை யுற்றவையான தோன்றிப்பூக்களும், வரிவளை முன்கை இறப்ப - வரியையுடைய வளைகள் முன்னங்கையினின்று கழல, இன்சொல் பலவும் உரைத்துச் சென்றார் வரல் கூறும் - இனிய சொற்கள் பலவுமொழிந்து சென்றார் வருதலைக் கூறாநிற்கும்—எ - று.

கருவிளை கருங்காக்கணம்பூ. உவமம் மெய்யொடு தொழில் மேலுஞ் சென்றது. "கண்ணிற் கருவிளை மலர" (அகம். உகூ), "தண்புனக் கருவிளைக் கண்போன் மாமல ராடுமயிற் பீலியின் வாடையொடு துயல்வர" (நற். உ௬உ), "கண்ணெனக் கருவிளை மலர" (ஐங்குறு. சகூச) என்றார் பிறரும். தோன்றி எரிவனப் புடைத்தாதலைச் "சுடர்ப்பூந் தோன்றி" (குறிஞ்சி. ௬௦) என்புழிக் காண்க. இது முல்லையின் கருப்பொருள். இறப்ப என்றது ஈண்டுக்கழல, "முன்கை யிறையிறவா நின்றவளை" (குறள். ககடுஎ) என்புழிப்போல. தலைமகன் பிரிவு உணர்த்தத் தலைமகள் ஆற்றாது மெலிந்தமையின் வளை கையினின்று நீங்கின. "வரிவளை முன்கை வரவு விறப்பப் போனநந்தனிநமர்" (கல். கஅ), "இறையிறந் திலங்கு வளை நெகிழ்ச்சாஅய்ப் புலம்பணிந்து" (குறுந். ௫௦), "இறையிறந்த வங்கோ லணிவளையோ சொல்லாதோ" (முத்தொள். ௬உ) என்றார் பிறரும். காதலர் நலமாய்ப் பிரிந்து போயினாராகலின் 'இன்சொற் பலவு முரைத்து' என்றாள். உம்மை முற்று.

பூத்தன வனப்புற்றன வளையிறப்பச் சொல்லுரைத்துத் துறந்தார் வரல் கூறும் எனக்கூட்டுக. (௯)

பருவங்கண்டு ஆற்றாமையான் மேனிவாடிய கிழத்தியைத் தோழி, 'காதலர் தேர் வாராநிற்கின்றது' எனக்கூறி ஆற்றுவித்தது.

௧௦. வானேறு வானத் துரற வயமுரண்
ஆனேற் றொருத்த லதனோ டெதிர்செறுப்பக்
கான்யாற் றொலியிற் கடுமான்றே ரென்றோழி
மேனி தளிர்ப்ப வரும்.

உரை:—என் தோழி - எனது தோழியே! வானேறு வானத்து உரற - மழையேறு மேகத்தின்கணின்று முழங்க, வயமுரண் ஆன் ஏறு ஒருத்தல் - வலிமையையும் மாறுபாட்டையுமுடைய எருமையினது ஆணாகிய ஒருத்தல், அதனோடு எதிர் செறுப்ப - அவ்விடியுடனே எதிரிட்டுக் கோபிக்க, மேனி தளிர்ப்ப - நினது மேனி தழைக்க, கான்யாறு ஒலியின் கடுமான் தேர்வரும் - காட்டாற்றினது ஓசையைப்போலக் கடுகிய செலவினையுடைய குதிரை பூட்டப்பட்ட நங்காதலர் தேர் வாராநிற்கின்றது—எ - று.

"எருமையும் பசுவும் மரையுமென்ன வருபவை மூன்றும் ஆனெனப்படுமே" (திவா. தொ. ௬), "எருமையும் மரையும் பெற்றமும் அன்ன" (தொல். மரபு. சூ. ௬௧) என்றமையான் ஆன் எருமையையும், ஏறு அதன் ஆண்பாலையு முணர்த்தின. "ஏற்புடைத் தென்ப எருமைக்கண்ணும்" (தொல். மரபு. சூ. ௬௭) என்றமையின் ஈண்டு ஒருத்தல் எருமைக்கண் வந்தது. ஒருத்தல் கடா. "வெண்ணெலரிநர் தண்ணுமை வெரீஇச் செங்கணெருமையினம்பிரி யொருத்தல்" (மலைபடு. ௪௭௧) என்புழியும் அவ்வாறு வந்தது. உறுமேற்றிற்கு ஏறு வெகுளுதலை, "இடிக் குரலானேற்றின மெதிர்செறுப்ப" (கல். ௯௮), "ஏறு முரண் சிறப்ப வேறெதிரிரங்க" (ஐங்குறு. ௪௯௬) என்பவையாலு மறிக. ஒலித்தற் றொழில்பற்றி உவமம் வந்ததாகலான் அது

வினையுவமமாயிற்று. "அருவியி னொலிக்கும் வரிபுனை நெடுந் தேர்" (பதிற்றுப்பத்து), "நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை" (மலைபடு. ௩௨௩), "புள்ளியன் மான்றேர் கடுவிசை துரந்த கான்யாற் றருவியின்" (கல். க௬) என்றார் பிறரும். கான்யாறு முல்லைக் குக் கருப்பொருளாயினமையின் அதனையே ஈண்டுப் பொருந்த உவமித்தாள். இன் - ஐந்தாவது ஒப்புப்பொருளுணர்த்திற்று.

'உரற்ற' 'கானியாற்றொலியிற்' என்பன வேறுபாடம்.(௧௦)

கா தலர்தேர் வருதல் பொய்யென்று ஆற்றாளாய தலை மகட்குத் தோழி காரணங் காட்டி வற்புறுத்தியது.

கக. புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார்
வணரொலி யைம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்கோடல்
பூங்குலை யீன்ற புறவு.

உரை:—வணர் ஒலி ஐம்பாலாய்-கடை குழன்று தழைத்த கூந்தலினையுடையாய், அணர்த்து எழுபாம்பின் தலைபோல் - மேனோக்கி யெழும் பாம்பினது படம்போன்ற, புணர்கோடல் - ஒன்றோடொன்று மருவிய வெண்காந்தள்கள், பூங்குலை ஈன்ற புறவு-பூங்கொத்துக்களை ஈன்ற காடுகள், புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார் - இம்மை இன்பத்தையும் மறுமை யின்பத்தையும பொருந்தச்செய்யும் பொருளைக் கொளவேண்டிப் போயினார், வல் வருதல் கூறும் - விரைந்து வருதலைத் தெரி வியாநின்றன—எ - று.

இருமை இன்பமும் பொருளானே முற்றுப்பெறுமென்றது, இல்லறம் நடாத்தி வழங்கி வாழ்தலானுண்டாம் இம்மை இன்பத்தையும், தேவர் காரியமும் பிதிர்கள் காரியமும் ஆற்றுதலானுண்டாம் மறுமை இன்பத்தையும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளே எய்துவித்தலின். "இல்லா ரிருமையும்

நன்மையெய் தாரென் றிருசிதிக்குக், கல்லார் சுரஞ்செல்வ தேதி னைந் தார்நமர்" (இறை. அகம். மா. கோ. உசுஅ) "இசையு மின்பமு மீதலு மூன்று மசையுட னிருந்தோர்க் கரும்புணர் வின்மென வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை" (நற் - உகச), "ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச் செய்வினை கைம்மிக வெண்ணுதி" (குறுந். சுஙு), "முனிவரும் மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்" (கோவை - ஙஙஉ) என்றார் பிறரும். "பொருளில்லார்க் கிவ்வுலக மில்" (குறள். உ௲எ) என்றார் பொய்யில் புலவரும். அறத்தையு மின்பத்தை யும் பொருந்தச் செய்த லெனினுமமையும். பாக்கு வினை யெச்சவிகுதி. கூந்தல் ஐந்து வகையினை யுடைமையின் ஐம் பாலாயிற்று. அவை குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி என்பன. கோடல் பாம்பின் படம் போன்றிருத்தலின் உவமம் மெய்யின்கண் வந்தது. "உருமுற்ற பூங்கோட லோடி யுருமுற்ற ஐந்தலை நாகம் புரையும்" (திணை மா. நூற். கoஎ) என்றார் பிறரும். தலை ஆகுபெயர்.

'பூங்கொடி' 'ஈந்த' என்பனவும் பாடம். (கக)

தலைமகன் வருதல் உண்மையன்றென்று ஆற்றாளாய தலைமகளைக், 'கொண்மூ வலமேரினது நன்னிமித்த மாயின மையின் அவர்வருதல் திண்ணிது' என்று தோழி கூறி ஆற்று வித்தது.

கஉ. மையெழி லுண்கண் மயிலன்ன சாயலாய்
ஐயந்தீர் காட்சி யவர்வருத றிண்ணிதாம்
நெய்யணி குஞ்சரம் போல விருங்கொண்மூ
வைகலு மேரும் வலம்.

உரை :—மை எழில் உண்கண் - கருமை யுடைத்தாகிய அழகினையுடைய மையுண் கண்ணையும், மயில் அன்ன சாய லாய் - மயில்போன்ற சாயலினையுமுடையாய், நெய் அணி குஞ்சரம் போல - எண்ணெய் பூசப்பட்ட யானைகள் போல,

இருங்கொண்மூ வைகலும் வலம் ஏரும் - கரிய மேகங்கள் நாடோறும் வலமாக எழாநின்றன; (ஆதலான்) ஐயந்தீர்காட்சி அவர் வருதல் திண்ணிது - மயக்கம் நீங்கிய (தெளிந்த) அறிவினையுடைய நம் தலைவர் மீளவருதல் உண்மை — எ-று.

உண்கண்-மையுண்டகண். "சாயன் மென்மை" (தொல். சொல். சூ. 325) என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். "மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு" (முருகு. 205) என்றார் பிறரும். "கற்ற துடைமை காட்சியி னறிப" (மு. மொ. காஞ்சி. 2. 4.) என்றமையின் தலைமகன் கல்விச்சிறப்புத் தோன்ற ஐயந்தீர்காட்சி என்றாள். 'தலைவர் ஐயந்தீர்ந்த அறிவுடையாராயினமையின் பிரிந்தார்க்கு வருத்தஞ் செய்யும் இப்பருவமென்றறிந்து விரைவில் வருவர்' என்னுங் குறிப்புத் தோன்றத் தோழி அங்ஙன முரைத்தாள். உவமம் உருவுவமம். "வேய்பயி லடுக்கத் தியானைச் செல்லினங் கடுப்ப...... புயலே" (அகம். 322) "வானத் தன்ன வளமலி யானை" (மலைபடு. 570) என்றார் பிறரும். ஏர் - எழுச்சி. "வலனேருங் கார்" (ஐந். ஐம். 1), "ஏர்தருசுடரின்" (புறம். 155), "வெள்ளி யேர்தர" (புறம். 384), "கொண்மூ விருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇ" (அகம். 187) என்புழியும் அஃது அப்பொருட்டாயது. பருவ வரவுடன் முகில் வலஞ்செல்லவே அது நன்னிமித்த மாகலானும் தலைவர் வருதல் திண்ணிதென்றாள். உம்மை முற்று.

'ஏகும்' என்பதும் பாடம். (12)

பிரிவிடை ஆற்றாளாய் வேறுபட்ட கிழத்தியைத் தோழி 'உரைத்த பருவம் வந்ததாகலான் அவர் வருவர்' என வற்புறுத்தியது.

கங. ஏந்தெழி லல்குலா யேமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பிற் பெயருமு—வேந்தர்
களிறெறி வாளரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னு மழை.

உரை :—ஏந்து எழில் அல்குலாய் - உயர்ந்த அழகினை யுடைய அல்குலையுடையாய், ஏம் ஆர்ந்த காதலர் கூந்தல் வனப்பின் - தம் தலைவரொடு புணர்ந்து இன்பந் துய்த்த மகளிரின் குழலினது அழகுபோல், பெயல்தாழ - மழை பெய்ய, மழை-வானம், வேந்தர் களிறு எறி* அரவம் வாள்போலக் கண் வெளவி - அரசர் யானைகளை வெட்டி வீழ்த்துங்கால் ஓசை யிடும் வாள்போலக் (காண்பவர்) கண்களைக் கவர்ந்து, ஒளிறுபு மின்னும் - ஒளிவிட்டு மின்னுகின்றது ; (ஆதலான் காதலர் வருவர்)—எ - று.

ஏமம் ஏம் என்றானது கடைக்குறை, 'ஏமாந்த போழ்தின்' (நாலடி. கஎஅ) என்பது போல. உவமம் உருவொடு மெய்மேற் சென்றது, மழைக்கால் நேராக இறங்குந் தோற்றத்திற்கு மகளி ரின் கரிய கூந்தல் நீண்டு தாழ்ந்திருத்தலை உவமித்தமையின் இன் உவமப்பொருவு. கருநிறமுடைய முகிலின்கண் தோன்றும் மின்னல் ஒளிக்கு அந்நிறமுடைய களிற்றின்கண் தோன் றும் வாள் ஒளியை உவமித்தமையின் உருவுவமமும் மெய்யுவம மும் விரவின. "செழியன் பாசறை உறைகழி வாளின் மின்னி யுதுக்கா ணெடும்பெருங் குன்றம் முற்றிக் கடும்பெயல் பொழியும்" (நற். கஅஎ), "வாணிற வுருவி னொளிறுபு மின்னிப் பருவுறைப் பஃறுளி சிதறி வானவின்று" (அகம். உகஎ), "மன்ன ரருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்செய லாடவர் கழித்தெறி வாளி னழிப்பன விளங்கு மின்னுடைக் கருவியை யாகி நாளுங் கொன்னே செய்தியோ அரவம்...மழையே" (அகம். கஎச), "உறைகழிவாண் மின்னிற்றான் மாட மறு கின் மழை" (புறம். வெ. மா. கூசகூ) என்றார் பிறரும். மின் கண்வெளவுதல் என்றது மிக்க ஒளியினாற் கட்பார்வையைக் கெடச்செய்த லென்றவாறு. "கண்கெட. மின்னிப் படுமழை

* "வாளரந்துமித்த" (அகம. உச), "வாளரம பொருத" (நற். எஎ), "உரவுத் திரைபொருத பிணாபடு தடவுமுத லரவு வாள் வாய முளளிலைத தாழை" (நற. உகக) எனறு வருதலினால் ஈண்டு 'வாளரவம' 'அரவு வாளைக்' குறிக்கின்றதோ வென்பது ஐயம்.

பொழிந்த பானாட் கங்குல்" (அகம். கூஉ) என்பதனானு மறிக. 'ஆதலாற் காதலர் வருவர்' என்பது வருவிக்கப்பட்டது.

'ஏமாந்த' 'வவ்வி' என்பனவும் பாடம். (கக)

பொருள் வயிற் பிரிந்த காதலர் காலந் தாழ்த்தே வருவாரென்று நினைத்து வேறு பட்ட தலைவியைத் தோழி காரணங் காட்டி, 'வல்லே வாராநிற்பர்' எனக் கூறி ஆற்றுவித்தது.

கச. செல்வந் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருதற் றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும்.

உரை:—வயங்கு இழாய் - விளங்காநின்ற அணிகளை யுடையாய், முல்லை இலங்கு எயிறு ஈன - முல்லைக் கொடிகள் மகளிரது விளங்கும் பற்களைப் போன்ற அரும்புகளை ஈனும் வகை, நறுந் தண் கார் மெல்ல இனிய நகும் - நல்ல குளிர்ந்த முகில் மெதுவாகவும் இனிமையாகவும் மின்னும்; (ஆதலான்) செல்வந் தரல் வேண்டிச் சென்ற நம் காதலர் - பொருள் தேடிக் கொள்ளும் பொருட்டுப் போயின நம்தலைவர், வல்லே வருதல் தெளிந்தாம் - விரைந்தே வருதலைத் திட்பமாய் அறிந்தாம். எ - று.

இருமை யின்பத்தையும் முடித்துவைப்பது பொருளே யாயினமையின் செல்வந் தரல் வேண்டிச் சென்றாரென்பது. ஏகாரம் தேற்றம். வினைமுற்று உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக்கண் வந்தது. நறு ஈண்டு நல்ல என்னும் பொருட்டாதலைப் "புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்" (புறம். உக) என்புழிக் காண்க. நல்ல என்றது உலகத்திற்கு நன்மை பயத்தலைக்குறித்தது, "திருமழை" (மலைபடு. க) என்பது போல. அழகிய என்று கோடலு மொன்று. முல்லை இத்திணைக்குரிய கருப்பொருள். முல்லை வண்ணத்தானும், வடிவத்தானும் மகளிர் பற்களுக்கு உவமை யாகும். "கார்க்கொடி முல்லை யெயிறீன" (ஐந். எழு. உக),

"கொடிமுல்லை கூரெயி றீன" (கைந்நிலை. முல்லை. க), "முல்லை மென்கொடி யெயிறீன முகைக்கும்" (குறுந்.கஅசு) என்றார் பிறரும். நகுதல் மின்னொளியுடன் முழங்குதல். "வான நகுவதுபோன் மின்னுட" (திணை மா. நூற். கஉஉ) என்றார் பிறரும். கார் என்பதைக் கார்காலமென்று கொண்டால், "பூங்கொடி முல்லைத் தொகுமுகை யிலங்கெயி றாக நகுமே தோழி நறுந்தண் காரே" (குறுந். கஉசு), "முழங்கு கொண்டன் மாரிக்கு முல்லையின்வாய் நகவேநீ வருந்து வதே" (இறை. அகம். மா. கோ. உகூசு) என்புழிப்போல, 'முல்லையாகிய விளங்கும் பற்கள் தோன்றும் வகை நறிய குளிர்ந்த கார்காலம் (நீ வருந்துவதைக் கண்டு) மெல்ல இனிமையாக நகும்' என்று பொருள் கோடலமையும். (கச)

தலைமகன் விட்டு நீங்கினனென்று ஆற்றாளாய தலைமகட்குத் தோழி, 'இவ்வினிய காலத்து நங்காதலர் தீர்குவரல்லர்' எனச் சொல்லி வற்புறுத்தியது.

கரு. திருந்திழாய் காதலர் தீர்குவ ரல்லர்
குருந்தின் குவியிணா ருள்ளுறை யாகத்
திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி
இன்குழ லூதும் பொழுது.

உரை :—திருந்து இழாய் - திருத்தமான அணிகளையுடையாய், குருந்தின் குவி இணர் உள் உறை ஆக - குருந்தினது குவிந்த பூங்கொத்துக்களின் உள்ளிடமே தமக்கு இருப்பிடமாக, திருந்து இன் இளி வண்டு பாட - திருத்தமான இனிய இளியென்னும் பண்ணை வண்டுகள் பாட, இருந் தும்பி இன் குழல் ஊதும் பொழுது - கரிய தும்பிகள் இனிய குழலை ஊதாநிற்கும் இக்காலத்தில், காதலர் தீர்குவர் அல்லர் - நம் தலைவர் நம்மைப் பிரிந்து நீங்கமாட்டார்—எ - று.

இளி - பஞ்சமசுரம். வண்டு பறக்குங்கால் உண்டாகும் ஓசை அது போறலின் இளிவண்டு பாட என்றாள். 'இருந் தும்பி' என்பது 'கரிய தும்பி,' "பூவிருந்துண்ணு மிருந்

தும்பி" (கலி. உக), "சுரும்பார்க்குங் குரலினொடிருந்தும்பி யிமையூத" (கலி. கஉரு) என்புழிப்போல. "கட்டளையன்ன மணிநிறத் தும்பி" (ஐங்குறு. உகரு), "மணிச்சிறைத் தும்பி" (குறுந். ருகஉ) என்றார் பிறரும். 'பெரிய தும்பி' என் றுரைப்பர் பழைய உரைகாரர். குழலூதல் குழலோசைபோ லொலித்தல். வண்டு பாடவும் அதற்கொத்துத் தும்பி குழலூ தவும் அவை நிகழுமிடம் பூக்கள் உள்ளிடமுமாகத் தோழி புனைந்துரைத்தாள். "கானங் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார் - வானம் விளிப்பவண் டியாழாக—வேனல் - வளரா மயிலாட வாட்கண்ணாய் சொல்லா - யுளராகி யுய்யும் வகை." (திணை மா. நூற். ககக) என்றார் பிறரும். (கரு)

பிரிவிடை ஆற்றாமையான் பசப்புற்ற தலைமகட்குக் 'குறித்த கார்ப்பருவம் வந்ததாகலான் காதலர் வருவர்; ஆத லான் நின் பசலைநோய் நீங்கி மேனிதளிர்க்கும்' எனத் தோழி கூறி ஆற்றுவித்தது.

கசு. கருங்குயில் கையற மாமயி லாலப்
பெருங்கலி வான முரறும்—பெருந்தோள்
செயலை யிளந்தளி ரன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள.

உரை:—பெருந் தோள் - பெரிய தோளினையுடையாய், செயலை இளந்தளிர் அன்ன நின்மேனி - அசோகினது இளந் தளிர்போன்ற உன்னுடைய உடலினது, பசலை பழங்கண் கொள - பசப்புநோய் மெலிவுகொள்ள, கருங் குயில் கையற - கரிய குயில்கள் செயலற்றுத் துன்பமுற, மா மயில் ஆல - பெரிய மயில்கள் ஆடும் வகை, பெருங் கலி வானம் உரறும் - பெரிய ஒலியுடைய முகில் முழங்காநிற்கும்; (ஆகலான் வரு வர்) எ - று.

குயில்கள் கையறுதலென்றது கார் காலத்தில் அவை பாடுத லொழிந்து தனித்திருத்த லென்றவாறு. இதனை "மாக் குயில் மாழ்கிக் கூக்குரலடைப்ப.....எழுந்த கார்கண்டை"

(கல். கூஅ) என்பதனுனு மறிக. மிருதுவாகிய தன்மைக்கும் செம்மை நிறத்திற்கும் அசோகின் இளந்தளிர் உவமிக்கப்பட்டமையின் இஃது உருவுவமமாயிற்று. பழங்கண் மெலிவு, "பழங்கணும் புன்கணும் மெலிவின்பால" (திவா.தொகுதி.அ) என்பது சூத்திர மாகலின். "பழங்கண் கொண்ட பசலை மேனியள்" (அகம். உகச) என்முர் பிறரும். பசலை மெலிவு கொள்ளுதலென்றது தலைவர் வருகையினுல் தலைவி உளமகிழ அது நீங்குமென்றவாறு.

'அசோகினிளந்தளிர்' என்பதும் பாடம்.

கையற ஆலப் பழங்கண்கொள வானம் உரறும் என இயையும். (கசு)

பிரிவுநீட ஆற்ருளாய தலைமகட்குத் தோழி, 'குறித்த பருவம் வந்ததாகலான் இனி நின்நுதல் ஒளிபெறும்' எனக் கூறி வற்புறுத்தியது.

கஎ. அறைக்க லிறுவரைமேற் பாம்பு சவட்டிப்
பறைக்குர லேறொடு பௌவம் பருகி
உறைத்திருள் கூர்ந்தன்று வானம் பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல்.

உரை:—பேதை - மடமைக்குணமுடையாய், வானம் பௌவம் பருகி - முகில் கடல்நீரை யுண்டு, பறைக்குரல் ஏறொடு பாம்பு சவட்டி - பறையினது ஓசையைப் போன்ற ஓசையினையுடைய இடியால் பாம்புகளை வருத்தி, அறைக்கல் இறுவரை மேல் உறைத்து இருள் கூர்ந்தன்று - பாறைக் கற்களையுடைய பக்கமலைகளின்மேல் மழைபெய்து இருள் மிக்கது; (ஆதலால்) நுதல் பிறைத் தகை கொண்டன்று - உன்னுடைய நெற்றி பிறைத்திங்களின் அழகைக் கொண்டதே—எ - று.

"வியலறை யூக மிருடேங் கிறுவரை யூர்பிழிபாடும்" (கலி. சரு), "ஓங்க லிறுவரைமேற் காந்தள் கடிகவென" (திணைமொழி. ஐம். ச) என்புழியும் 'இறுவரை' 'பக்கமலை'

என்னும் பொருட்டாயது. "மன்பதை சவட்டுங் கூற்றம்" (பதிற்று. அ௪) என்புழிப் போலச் சவட்டி அப்பொருள் கொண்டது. அஃகிய செவியுடைமையின் பாம்பிற்குப் பேரொலியைத் தாங்கும் ஆற்றலின்று. உருமேற்றிற்குப் பாம்பு நிலையழிந்து வருந்துதலை "வரைமேல் உருமெறியப் பாம்பிற் புரளும்" (களவழி. கடு), "நெடுவரை மருங்கிற் பாம்பு பட விடிக்குங் கடுவிசை யுருமின்" (குறுந். கடுஅ), "பாம் பின் பைபட விடிக்குங் கடுங்குர லேற்றொடு" (அகம். ௩௨௨) என்பவற்றானு மறிக. முகில் கடல்நீரைப் பருகிப் பின்னர் அதை மழையாகப் பெய்கின்றதென்பது முன்னோர் கொள்கை யாதலின், 'பௌவம்பருகி' என்றாள். சூரிய வெப்பத்தால் கடல்நீர் ஆவியாகி முகிலாகின்றதென்பது இன்றுளார் கொள் கை. பறைக்குரலேறு வினையுவமம். 'இருள்கூர்ந்தன்று' 'கொண்டன்று' என்பவை றகரம் ஊர்ந்த குற்றியலுகரவீற்று முற்றுச் சொற்கள், "முளையரண் போல வுடைந்தன்று" (கலி. ௩௨) என்பது போல.

'பவ்வம்' என்பதும் பாடம்.

வானம் பருகி ஏற்றொடுசவட்டி வரைமேலுறைத்துக் கூர்ந் தன்று; நுதல் பிறைத்தகை கொண்டன்று எனக்கூட்டி முடிக்க. (கஎ)

பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி, 'அவர் வரும்வகை குறித்த பருவம் வந்தது காண்' எனக்கூறி ஆற்று வித்தது.

கஅ. கல்பயில் கானங் கடந்தார் வரவாங்கே
நல்லிசை யேற்றொடு வான நடுநிற்பச்
செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு.

உரை:—கல்பயில் கானம் கடந்தார் வர ஆங்கே - மலை நெருங்கிய காட்டைக் கடந்து சென்றார் வரும்வகை அவர் வருங்காலம் வந்தபொழுதே, வானம் நல் இசை ஏற்றொடு நடு

நிற்ப - மேகங்கள் மிக்க ஓசையையுடைய இடியுடனே நடுவு நின்று எங்கும் பெய்தலால், நல்கூர்ந்தார் மேனிபோல் புல் லென்ற காடு - வறுமையுற்ருர் உடல்போலப் பொலிவிழந்த காடுகள், செல்வர் மனம்போல் கவின் ஈன்ற-பொருளுடையார் மனம்போல் அழகைத் தந்தன—எ - று.

ஏகாரம் தேற்றம். "நன்று பெரிதாகும்" (தொல். சொல். சூ. ௬௪௩) என்று ஓதினமையின் ஈண்டு நல் மிக்க என்னும் பொருட்கண் வந்தது. "மடமைகா ணன்னெஞ்சே" (ஐங். ஐம். ௬௬) என்புழியும் நல் அப்பொருள் தந்தது. உவமம் இருவழியும் நிறத்தானன்றிப் பண்பாலொத்தலின் பண் புவமை யாயிற்று. "கூழின் மலிமனம்போன் றிருளா நின்ற கோகிலமே" (கோவை. ௬உஉ) என்பதுமது. 'வானம் நடு நிற்றலால் முன்பு புல்லென்றிருந்த காடுகள் எங்ஙனங் கவி னீன்றனவோ அங்ஙனமே காதலர் வாராநிற்றலால் நினதுபொலி விழந்த மேனி இனித் தழைத்து விளங்கும்' என்னுங் குறிப் புத் தோன்றத் தோழி 'வரவாங்கே' என்று கூறினுள்.

கடந்தார் வர ஆங்கே வானம் நடுநிற்பக் காடு கவினீன்ற என்று வினை முடிவு செய்க. (கஅ)

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுற்றியபின் தான் குறித்த கார்ப்பருவம் வந்ததாகலான் தலைமகள் ஆற்ருள் என்று நினைந்து, 'அவள் தோள்களைச் சேரும் விருப்பம் கொண்டேன்' எனத் தேர்ப்பாகனுக்குச் சொல்லியது.

கக. நாஞ்சில் வலவ னிறம்போலப் பூஞ்சினைச்
செங்கான் மராஅந் தகைந்தன—பைங்கோற்
றொடிபொலி முன்கையா டோடுணையா வேண்டி
நெடுவிடைச் சென்றதென் னெஞ்சு.

உரை :—நாஞ்சில் வலவன் நிறம் போல - கலப்பைப் படை வெற்றியையுடையவன் வெண்மைநிறம் போல, பூஞ் சினைச் செங்கால் மராஅம் தகைந்தன - பூங்கொம்பையும் சிவந்த தாளினையுமுடைய மராமரங்கள் மலர்ந்தன ; (ஆத

லான்) என் நெஞ்சு - என் மனம், பைங்கோல் தொடி பொலி முன் கையாள் தோள் துணையா வேண்டி - பசுமையாகிய திரண்ட வளைகள் விளங்காநிற்கும் முன்னங் கையையுடையாள் தோள்கள் எனக்குத் துணையாகவேண்டி, நெடு இடைச் சென்றது-நெடிய வழியைக் கடந்து சென்றது—எ-று.

நாஞ்சில்வலவன் பலராமன். அவன் வெள்ளியோனென்பதையும், கலப்பை வென்றியுடையானென்பதையும், "ஞால மூன்றடித்தாய முதல்வற்கு முதுமுறைப் பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய" (கலி. க௨௪), "மறமிகு மலியொலி மாறடு தானையாற்றிறனிகந்து வரூஉ மவருயிரகற்று விறன்மிகு வலியொலி பொலிபுகழ் புழுதியி னிறனுழு வளைவாய் நாஞ்சி லோனும்" (பரிபா. க௫) என்பவையானு மறிக. மராம் ஈண்டு வெண்கடம்பு; செங்கடம்பு வேறு. அதன் பூங்கொத்துக்கள் வெண்ணிற மென்பதை, "செங்கான் மராஅத்து வாலிணர்" (முருகு. ௨0௫), "நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற" (ஐங்குறு. ௫அ௫) என்பவையானு மறிக. உவமம் வண்ணத்தின்மேற் சென்றது. "ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்" (கலி. ௨௬), "கொடுமிடனாஞ் சிலான்றூர்போன் மராத்து நெடுமிசைச் சூழுமயி லாலுஞ் சீர" (கலி. ௫௬) என்றார் பிறரும். மராம் செங்காலன்றிக் கருங் காலு முடைத்தாதலைக் "கருங்கான் மராஅத்து" (ஐங்குறு. ௨௫க) "கருங்கான் மராஅ நுணவோ டலர" (திணை மொ. ஐம். க௬) என்பவையானு மறிக. அளபெடை இசைநிறைக் கண் வந்தது. தகைதல் மலர்தற் பொருட்டாதலை "வான் பிசிர் கருவியிற் பிடவுமுகை தகைய" (ஐங்குறு. ௪௬க) என் புழிக் காண்க. நெடுவிடை - நெட்டிடை, நெடுந்தூரம். (கக)

வினைமுற்றிய பின்னர்த் தான் மீளுதற்குரிய பருவம் வந்ததெனத் தேர்ப்பாகன் கேட்பத் தலைமகன் கூறியது.

௨0. வீறுசால் வேந்தன் வினையு முடிந்தன
வாறும் பதமினிய வாயின—வேறோ

டருமணி நாக மனுங்கச் செருமன்னர்
சேனைபோற் செல்லு மழை.

உரை :—வீறு சால் வேந்தன் வினையும் முடிந்தன - சிறப்பு மிகுந்த அரசனுடைய போர்த்தொழில்களும் முற்றுப் பெற்றன, ஆறும் இனிய பதம் ஆயின - வழிகளும் இனிமை யான பக்குவத்தை யடைந்தன ; அருமணி நாகம் அனுங்க - அரிய மாணிக்கத்தையுடைய நாகங்கள் வருந்தும்வகை, மழை - முகில், ஏஎறு - உருமேற்றுடனே, செருமன்னர் சேனைபோல் செல்லும் - போர்புரியும் வேந்தருடைய சேனைபோலச் செல்லாநிற்கும் ; (ஆதலான் செல்வோம்)—எ - று.

"அரவனை மென்ஞேற ளனுங்கத் துறந்து" (இறை. அகம். சூ. கஎ. உரைச் செய்யுள்), "அரிகேசரி தெவ்வனுங்க" (இறை. அகம். மா. கோ. உகச) என்புழிப்போல அனுங்க வருந்த என்னும் பொருட்டாய்நின்றது. "முதிர்மணி நாக மனுங்க முழங்கி" (திணைமொ. ஐம். உஅ) என்ருர் பிறரும். மிக முடுகிய செலவிற்கும், அரவத்திற்கும், முயற்சிக்கும் சேனை முகிலுக்கு உவமிக்கப்பட்டமையின் இது வினையுவம மாயிற்று. "சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத் துனைஇய மாலை துன்னுதல் காணூஉ" (குறிஞ்சி. உஉக) என்பது மது. "வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியாற் செவ் வானஞ் செல்வதுபோற் செல்கின்ருர்" (புறத்திரட்டு. பெரு. பொ. வி) என்ருர் பிறரும். இருவழியும் உம்மை எண். (உO)

வினைமுற்றியபின்னர்த் தலைமகன் புறவின் முல்லை அரும்புகளினது காட்சியால் தலைமகளது நகைமுக நினைந்து, 'இனிக் கடிதுபோதும்' எனத் தேர்ப்பாகனுக்குக் கூறியது.

உக. பொறிமாண் புனைதிண்டேர் போந்த வழியே
சிறுமுல்லைப் போதெல்லாஞ் செவ்வி - நறுநுதற்
செல்வ மழைத்தடங்கட் சின்மொழிப் பேதை
முள்ளெயி றேய்ப்ப வடிந்து. [வாய்

உரை:—பொறிமாண் புனை திண் தேர் போந்த வழியே - எந்திரச் செய்கைகளான் மாட்சிமையுற்று அலங்கரிக்கப்பட்ட வலியதேர் போனவழிகளிலே, சிறு முல்லைப்போது எல்லாம் - சிறிய முல்லையின் அரும்புகளெல்லாம், வடிந்து - கூரிதாகி, செவ்வி நறுநுதல் - செவ்விய அழகிய நுதலையும், செல்வ மழைத் தடங்கண் - வளப்பமான மழைபோல் குளிர்ந்த அகன்ற கண்ணையும், சில் மொழி - சிலவாகிய மொழியினுமுடைய, பேதைவாய் முள் எயிறு ஏய்ப்ப - மடமைக்குணமுடையாள் வாயினது கூரிய பற்களை யொவ்வா நிற்கும்—எ - று.

"நறுந்தண் கார்" (கார். கசு) என் புழிப்போல ஈண்டு நறு அழகென்னும் பொருட்டாய் வந்தது. நறிய எனலுமாம். முல்லை அரும்புகள் வண்ணத்தானும் வடிவத்தானும் மகளிர் எயிற்றை யொக்கும். "காதல ரெயிறேய்க்குந் தண்ணருவி நறுமுல்லை" (கலி. ௩௨) என்றார்பிறரும். 'ஏய்ப்ப வடிந்து' என்பதனை வினையெச்சத் தொடராக்கி, 'ஒக்க வடிவு பட்டு' என்று பொருளுரைத்து, 'நின்றது' என்னும் பயனிலை தொக்கு நின்றது என்றுரைப்பர் பழைய உரைகாரர்.

போதெல்லாம் வடிந்து எயிறேய்ப்ப என வினை முடிவு செய்க. (உக)

வினைமுற்றிய தலைமகன் மீளுதற்குரிய பருவம் வந்ததெனப் பாகற்குச் சொல்லியது.

உஉ. இளையரு மீர்ங்கட் டயர வுளையணிந்து
புல்லுண் கலிமாவும் பூட்டிய—நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போற் பூத்தன காடு.

உரை:—இளையரும் ஈர்ங்கட்டுஅயர - சேவகர்களும் குளிர் காலத்திற்குரிய உடையினை உடுக்க, உளை அணிந்து புல் உண் கலிமாவும் பூட்டிய - தலையாட்டம் அணிந்து புல் லுண்டதனாலாகிய மனச்செருக்கையுடைய குதிரையையும்

தேரோடு பூட்டுதலைச் செய்யும் வகை, காடு - காடுகள், நல்லார் இள நலம் போலக் கவினி - நற்குணமுடைய மகளிர் இளவடிவம்போல அழகுபெற்று, வளம் உடையார் ஆக்கம்போல் பூத்தன - வருவாயினை யுடையார் செல்வம்போலப் பூத்தன— எ - று.

இளையர் ஈண்டு உழைக்குறுந் தொழிற்குரிய சேவகர். உம்மை இருவழியும் எண். உளை - தலையாட்டம்; இது கவரி மான் மயிராற்செய்து குதிரையின் தலையிலணியப்படுவது. "பரியுடை நன்மான் பொங்குளை யன்ன" (ஐங்குறு. கரு), என்றார் பிறரும். 'உளை அணிந்து' என்பதற்கு 'மாவின் உளையை அணிபெறத் திருத்தி' என்றுரைப்பினு மமையும். "இளநலங் காட்டி" (முருகு. உகo) என்புழியும் நலம் வடிவம் என்னும் பொருட்டாத லறிக. "செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார் மேனிபோற் புல்லென்ற காடு" (கார். கஅ) என்புழிப்போல உவமம் பண்பின்மேற் சென்றது. வளம் வருவாயாதலை "வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்" (நான்மணி. கூரு), "வளத்தனைய வாழ்வார் வழக்கு" (நான்மணி. எஉ) என்பவையானுமறிக. (உஉ)

பிரிவின்கண் ஆற்றாளாய தலைமகளைத் தோழி 'குறித்த கார்ப்பருவம் வந்ததாகலான் இனி ஊடுநிலை வேண்டா தொழிக' எனக்கூறி வற்புறுத்தியது.

உ௩. கண்டிரண் முத்தங் கடுப்பப் புறவெல்லாந்
தண்டுளி யாலி புரளப் புயல்கான்று
கொண்டெழில் வானமுங் கொண்டன் றெவன்
ஒண்டொடி யூடு நிலை. [கொலோ

உரை:—ஒள் தொடி - ஒளிபொருந்திய வளைகளை யணிந்தவளே, புறவு எல்லாம் - காடெங்கும், கண்திரள் முத்தம் கடுப்பத் தண் துளி ஆலி புரள - இடத்தே திரண்ட முத்தை யொத்த குளிர்ந்த நீர்த்துளிகளும் ஆலங்கட்டிகளும் புரளும் வகை, புயல் கான்று கொண்டு எழில் வானமும் கொண்டன்று—

மேகம் மழை பொழிந்து கொண்டு அழகையுடைய வானிடத்தையெல்லாம் கொண்டது; (ஆதலான்) ஊடு நிலை எவன் கொல் - பிணங்கு நிலை எதற்கு—எ - று.

இடத்தே 'திரண்ட முத்தம் என்றது மேனி நன்கு திரண்ட முத்தம் என்றவாறு. "விரிதிரைக் கண்டிரண் முத்தங் கொண்டு" (அகம். உஎக), "கண்டிரண் முத்தம் பயக்கும்" (ஐங். எழு. சுக) என்றார் பிறரும். உவமம் வண்ணத்தோடு வடிவத்தின் மேலுஞ் சென்றது. ஆலங்கட்டிகளுக்கு முத்தமே யன்றிச் சிதர்த்த நுங்கின் கண்ணும் உவமையாதலை "மாமழை நீர் செறி நுங்கின்கண சிதர்த்தவைபோற் சூர் பனிப்பன்ன தண் பாலாலி துளிதலைஇ வானவின்று" (அகம். ௩0௩) என்பதனானறிக. உம்மை முற்று. கொல் ஓ அசைநிலை. (உ௩)

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன் தான் குறித்த கார்ப்பருவம் வந்ததாகலான் இனித் தலைமகள் ஆற்றாளென்று நினைந்து நெஞ்சிற்குக் கூறியது.

உச. எல்லா வினையுங் கிடப்ப வெழுநெஞ்சே
கல்லோங்கு கானங் களிற்றின் மதநாறும்
பல்லிருங் கூந்தல் பணிநோனாள் கார்வானம்
மெல்லவுந் தோன்றும் பெயல்.

உரை:—கல் ஓங்கு கானம் களிற்றின் மதம் நாறும் - மலைகள் உயர்ந்து வளர்ந்த காடு யானையினது மதநீரின் மணத்தை வீசாநிற்கும்; கார் வானம் பெயல் மெல்லவும் தோன்றும் - கரிய வானத்தின்கண் மழை மென்மையாகத் தோன்றும்; (ஆதலான்) பல் இருங் கூந்தல் பணி நோனாள் - பலவாகிய கரிய கூந்தலையுடையவள் ஆற்றியிருத்தற்கு யான் கூறிய சொல்லை இனிப் பொறுக்கமாட்டாள்; (ஆதலான்) நெஞ்சே - மனமே, எல்லாவினையுங் கிடப்ப எழு - எல்லாப் போர்த்தொழில்களும் சற்று ஒழிந்திருக்கும் வகை போதற்கு ஒருமைப்படு—எ - று.

உம்மை முற்று. கிடப்ப என்பதனை வியங்கோளாகக் கொள்ளின் 'எல்லாத் தொழில்களும் ஒழிந்து நிற்க' என்று

பொருள் கோடலமையும். மதநாறுதல் வேழம் பிடியோடியைந் தாடுதலான். அதுதான் செய்து வந்த குறியாதலானும், பிரிந் தார்க்கு வருத்தஞ்செய்யு மாதலானும் தலைமகள் ஆற்றாளென்று நினைத்தான். தலைமகன் குறித்த பருவம் வருந்துணையும் தலை மகள் ஆற்றியிருந்து அப்பருவம் வந்தும் அவன் வாராவிடின் அவள் ஆற்றாதிருத்தலும் முல்லைத்திணைக்கு மாறாகாமையின் 'பணிநோனாள்' என்றான். 'எல்லியும்' என்று பாடமோதின், "விரவுமலருதிர வீசி யிரவுப் பெயல் பொழிந்த வுதவியோ யே" (நற். ௩௬௬) என்புழிப்போல 'மழை இரவுப்பொழுதும் தோன்றும்' என்று பொருள்கொள்க. (௨௪)

பருவங்கண்டழிந்த தலைமகளின் பசலைநோய்கண்டு தோழி தனது ஆற்றாமை தோன்றக் கூறியது.

௨௫. கருங்கால் வரகின் பொரிப்போ லரும்பவிழ்ந்
தீர்ந்தண் புறவிற் றெறுழ்வீ மலர்ந்தன
சேர்ந்தன செய்குறி வாரா ரவரென்று
கூர்ந்த பசலை யவட்கு.

உரை :—ஈர்ந்தண் புறவில் - குளிர்ச்சிமிகுந்த காட்டில், கருங்கால் வரகின் பொரிப்போல் அரும்பு அவிழ்ந்து தெறுழ்வீ மலர்ந்தன - கரிய தாளினையுடைய வரகினது பொரியைப் போல அரும்புகள் முறுக்குடைந்து தெறுழினது மலர் விரிந் தன; செய் குறி சேர்ந்தன - (தலைவர்) செய்த குறிகள் வந்து விட்டன; (ஆதலான்) அவர் வாரார் என்று அவட்குப் பசலை கூர்ந்த - தலைவர் வரமாட்டாரென்று நினைக்கவே தலைவிக்குப் பசப்புநோய் மிகுந்தது—எ - று.

வரகு கருங்கால் உடைத்தாதலைக் "கருங்கால் வரகே" (புறம். ௩௩௫) என்பதனானுமறிக. தெறுழ் காட்டகத்ததொரு கொடி. அம்மலரை வரகின் பொரிக்கே யன்றி யானையின் புக ருக்கும் உவமித்திருத்தலைக், "களிற்று முகவரியிற் றெறுழ்வீ பூப்ப" (புறம். ௧௧௯) என்பதனானறிக. உவமம் மெய்யின் மேற்சென்றது.

கிடைத்த பிரதிகளிலெல்லாம் ‘தெறுவீ’ என்றே யிருப்பினும் அத்தகைய சொல் காணாமையின் மேற்கூறிய புறநானூற்றடியுடன் “நரைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ” (நற். கூ0உ) என்னும் நற்றிணை அடியையுங்கொண்டு அது ‘தெறுழ்வீ’ என்று திருத்தப்பட்டது.

‘அவரன்று’ என்பதும் பாடம். (உரு)

பருவ வரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி தலைமகன் விடுத்த தூதுவந்த செய்தியைக் கூறி ஆற்றுவித்தது.

உசா. நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட
தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை.

உரை :—தோன்றி - தோன்றிப்பூக்கள், நலம் மிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கின் தகை உடைய ஆகி - அழகு மிக்க கார்த்திகைத் திருவிழாவில் ஊரினுள்ளார் கொளுத்திவைத்த முதல்நாள் விளக்கைப்போல் அழகுடையனவாகி, புலம் எலாம் பூத்தன - இடமெலாம் மலர்ந்தன; சிலமொழி - சிலவாகிய மொழியினையுடையாய், தூதொடு மழை வந்த - தூதுடனே மழையும் வந்தது—எ-று.

கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் விளக்கேற்றி வைக்குந் திருவிழா பண்டைநாள் தொட்டு வருவதொன்று. “வேலினோக்கிய விளக்குநிலையும்” (தொல். புறம். சூ. கூ0), “வீழ்தரு மொண்குருதி கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்குப் போன்றனவே” (களவழி.கஎ), “வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற், றுளக்கில்கபா லீச்சரத்தான் றொல்கார்த்திகைநாட், டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும், விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.” (தேவாரம். திருஞாந. திருமயிலை ரு) என்றார் பிறரும். அஃது அரியும் அயனும் அடிமுடி தேட நிமிர்ந்த அழலவிர் சோதி அருமறை இறைவன் பொருட்டுக் கொண்டாடப்படும். கழிவிளக்கால் நாடு

பொலிவுற்றுத் தோன்றுதலின் 'நலமிகு கார்த்திகை' என்றும் மூன்றுநாளுள் முதல்நாள் விழாவே சிறப்புடைமையின் 'தலை நாள் விளக்கு' என்றும் கூறினாள். தோன்றி விளக்குப்போல் விளங்குதலைப் "பல்வயிற் றோன்றி தோன்றுபு புதல்விளக் குறூஉ" (நற். ௬௬) என்பதனானு மறிக. உவமம் உருவத்தின் மேற் சென்றது. இன் உவமப்பொருட்கண் வந்தது. (௨௬)

தலைமகன் வரவுநீட்டித்தமையின் ஊடுதலை மேற்கொண்ட தலைமகட்கு, 'அங்ஙனஞ் செய்யின் பசலை மிகும்' எனத் தோழி கூறி வற்புறுத்தியது.

௨௭. முருகியம்போல் வான முழங்கி யிரங்கக்
குருகிலை பூத்தன கானம்—பிரிவெண்ணி
உள்ளா தகன்றாரென் றூடியாம் பாராட்டப்
பள்ளியுட் பாயும் பசப்பு.

உரை:—முருகியம்போல் வானம் முழங்கி இரங்க-குறிஞ்சிப் பறையொலிபோல் மேகம் இடித்து நெகிழ்ந்துருக, கானம் - காட்டின்கண், குருகிலை பூத்தன - முருக்கிலை மலர்ந்தன; பிரிவு எண்ணி உள்ளாது அகன்றார் என்று-நங்காதலர் பொருள் தேடப் பிரிதலை நன்றென்றெண்ணி நமது வருத்தத்தைக் கருதாது சென்றார் என்று நினைத்து, ஊடு யாம் பாராட்ட - பிணக்கத்தை நாம் பாராட்டுவதால், பசப்புப்பள்ளியுள் பாயும் - பசலைநோய் படுக்கை இடத்தில் பரவும்—எ - று.

ஒலித்தற்றொழில்பற்றி உவமம் வினைமேற் சென்றது. "தொண்டக முருகியம் துடியிவை மூன்றும் வென்றிகொள் குறிஞ்சிப் பறையென விளம்புவர்" (திவா. தொகு. ௬) என்றமையின் முருகியம் குறிஞ்சிநிலப்பறை யாதலறிக. குருகிலை முருக்கிலையாதலைக் "குருகிலை மருதம்" (குறிஞ்சி. ௭௩) என்பதனானுமறிக. குருகு குருக்கத்தியுமாம். பசப்புப் பள்ளியுட் பாயுமென்றது, பசலை நோய் மிகுதியால் தலைவி மெலிந்து படுக்கையில் கிடப்பள் என்றவாறு. (௨௭)

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன் மீளுதற்குரிய பருவத்தையுஞ் சுரத்தின் பக்குவத்தையுங் கண்டு தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

உஅ. இமிழிசை வானம் முழங்கக் குமிழின்பூப்
பொன்செய் குழையிற் றுணர்தூங்கத் தண்பதஞ்
செவ்வி யுடைய சுரநெஞ்சே காதலியூர்
கவ்வை யழுங்கச் செலற்கு.

உரை :—இமிழிசை வானம் முழங்க - இயமரத்தின் ஓசையைப்போல மேகம் ஒலிக்க, குமிழின்பூப் பொன்செய் குழையின் துணர் தூங்க - குமிழினது பூக்கள் பொன்னாற் செய்யப்பட்ட குழைபோல் கொத்துக்களாய்த் தொங்க, நெஞ்சே - மனமே, காதலி ஊர் கவ்வை அழுங்கச் செலற்கு - தலைமகளூருக்கு அலர் அழியும்வகை செல்வதற்கு, சுரம் தண்பதம் செவ்வி உடைய - அருநெறிகள் குளிர்ந்த பக்குவத்தையும் செவ்வியினையு மடைந்திருக்கின்றன—எ - று.

இயமரம் ஒருவகைப்பறை. "கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும்" (பதிற்று. ௫௦) என்பதனானு மறிக. 'இமிழிசை வானம்' என்பதற்கு 'ஒலிக்கும் இனிய ஓசையையுடைய முகில்' என்பதும் ஒருபொருள். இன் உவமப்பொருவு. வண்ணத்தானும் வடிவத்தானும் குழை குமிழுக்கு உவமானமாயிற்று. "ஊசலொண்குழை யுடைவியத் தன்ன வத்தக் குமிழி ஞாயித மலரி கல்லெனா வரிக்கும் புல்லென்குன்றம்" (நற். உஅ௬) என்றார் பிறரும். அதன் பழமும் அதற்கொத்திருத்தலை "இழைமகள் பொன்செய் காசி னொண்பழந்தாஅங் குமிழ்தலை மயங்கிய குறும்ப லத்தம்" (நற். உ௭௪) என்பதனானறிக.

'குமிழிணைப்பூ' என்பதும் பாடம்.

முழங்கத் தூங்க அழுங்கச் செலற்குச் சுரம் செவ்வி யுடைய என்று வினைமுடிவு செய்க. (உஅ)

வினைமுற்றிய பின்னர்த் தலைமகன் குறித்த பருவம் வந்ததைக் கண்டு, 'சுரம் செவ்விதாயிருத்தலின் இனி நாம் மீள்வோம்' எனத் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

௨௯. பொங்கரு ஞாங்கர் மலர்ந்தன தங்காத்
தகைவண்டு பாண்முரலுங் கானம்—பகைகொண்
லெவ்வெத் திசைகளும் வந்தன்று சேறுநாஞ் [டல்
செவ்வி யுடைய சுரம்.

உரை:—பொங்கரும் ஞாங்கர் மலர்ந்தன - சோலைகளெல்லாம் பக்கங்களிற் பூத்தன; கானம் - காட்டின் கண்ணே, தங்காத் தகைவண்டு பாண் முரலும் - தங்குதலில்லாத அழகையுடைய வண்டுகள் இசைப்பாட்டை ஒலியாநிற்கின்றன; பகைகொண்டல் எவ்வெத் திசைகளும் வந்தன்று - பகைத்து எழுந்தமேகங்கள் எல்லாத்திசைக்கண்ணும் வாராநின்றன; சுரம் செவ்வி உடைய - அருநெறிகளும் செவ்விய பக்குவத்தையுடையன; (ஆதலான்) நாம் சேறும் - நாம் செல்வோம்—எ-று.

பொங்கர் இலவமரமுமாம். சோம்பரின்றி எங்குந்திரிதலினால் 'தங்கா' என்றான். "தகைவண்டு புதிதுண்ண" (கலி. ௬௭) என்புழிப்போல ஈண்டுத் தகை அழகென்னும் பொருட்டாய் நின்றது. தன்மையையுடைய வண்டு எனினும் ஒக்கும். பகைகொண்டல் வினைத்தொகை. பிரிந்திருக்குந் தன்னையுந்தலைவியையும் வருத்த எழுந்தமையின் 'பகைகொண்டல்' என்றான். உம்மை இருவழியு முற்று. எவ்வெத்திசைகள் எண்டிசைகள்.

கிடைத்த பிரதிகளிலெல்லாம் 'தாங்கா' 'கான்முரலும் கானம்' 'பகைகொண்ட வெவ்வத்திசைகளும்' என்று இருப்பினும் அவைபொருள் பயவாமையான், எதுகை நோக்கியும் பொருள் நோக்கியும் 'தங்கா' வென்றும், கோவை ௩௨௬ செய்யுளைக்கொண்டு 'பகைகொண்ட லெவ்வெத்திசைகளும்' என்றும், 'படாஅமகிழ்வண்டு பாண்முரலுங்கானம்' (கார். ௯௨) என்னும் அடியைக்கொண்டு 'பாண்முரலுங்கானம்' என்றும்

திருத்தப்பட்டன. எட்டில் குறில் நெடிலாயும், நெடில் குறிலாயும், லகரம் வகரமாயும், வகரம் லகரமாயும், ணகரம் னகரமாயும், னகரம் ணகரமாயும் இருத்தல் இயல்பு. (உ௯)

வினைமுற்றி மீளுந் தலைமகன் பருவ வரவினைக்கண்டு தலைமகள் அறியாமையான் ஆற்றாது வருந்துவாளென நினைந்து தேர்ப்பாகற்குச் சொல்லியது.

௩௦. வரைமல்க வானஞ் சிறப்ப வுறைபோழ்ந்
திருநிலந் தீம்பெய றாழ—விரைநாற
வூதை யுளருந் நறுந்தண்கா பேதை
பெருமட நம்மாட் டுரைத்து.

உரை:—வரை மல்க - மலைகள் வளப்பமடைய, வானம் சிறப்ப - வானம் சிறப்படைய, இருநிலம் உறைபோழ்ந்து தீம்பெயல் தாழ - பெரிய பூமியை மழைத்துளிகளால் ஊடறுத்து இனியமழை வீழாநிற்க, விரை நாற - நறுமணம் எங்கும் வீசாநிற்க, ஊதை - காற்று, பேதை பெருமடம் நம்மாட்டு உரைத்து - பேதையாகிய தலைவியினது பெரியமடமைக் குணத்தை நம்மாட்டுத்தெரிவித்து, நறுந் தண் கா உளரும் - நறிய குளிர்ந்த சோலையில் அசையாநிற்கும்; (ஆதலான் நீ விரையத் தேரைச் செலுத்துவாய்)—எ-று.

பல்வளம் பெருக்குதலன்றிப் பிரிந்த காதலரைக் கூட்டுவித்து இன்பந்தருதலானுந் தீம்பெயலென்றான். ஊதை குளிர்காற்று, "கூதிரூதையும் குளிர்பனிக்காற்றே" (திவா. தொகு. க) என்பது சூத்திரமாகலின். "ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய" (குறுந். ௧௬௭) என்றார் பிறரும். "விரை வளர் கூந்தல் வரைவளி யுளர" (புறம். ௧௩௩), "ஈர்ந்தண் வாடை...கொடிச்சி கதுப்புளருங் குன்ற நாடன்" (இறை. அகம். சூ. ௪௦. உரைச செய்யுள்), என்புழிப்போல உளரும் ஈண்டு அசையும் என்னும் பொருளைத் தந்தது. பேதைபெருமடம் என்றது, தலைமகன் குறித்தபருவத்தில் வாராநிற்றலை

அறியாது தலைமகள் வருந்தியிருத்தலை. ஊதை உரைத்து என்றது தற்குறிப்பேற்றம்.

'திரைநாற' என்பதும் பாடம்.

மல்கச் சிறப்பப் போழ்ந்து தாழ நாற ஊதை உரைத்து உளரும் எனக்கூட்டி முடிக்க. (௩௦)

வினைமுற்றி மீளுந் தலைமகன், தலைமகளுக்குத் தான் மீளுங்காலத்தை உணர்த்துவதற்காகச் செய்த குறி வந்ததெனத் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

௩௧. கார்ச்சே ணிகந்த கரைமருங்கி னீர்ச்சேர்ந்
தெருமை யெழிலே றெறிபவர் சூடிச்
செருமிகு மள்ளரிற் செம்மாக்குஞ் செவ்வி
திருநுதற் கியாஞ்செய் குறி.

உரை:—எருமை எழில் ஏறு - எருமையினது அழகிய ஆண்கள், கார்ச்சேண் இகந்த கரை மருங்கின் நீர்ச்சேர்ந்து - மேகந்தங்கிய ஆகாயத்தைக் கடந்த கரையின் பக்கத்திலுள்ள நீரில் வீழ்ந்து, எறி பவர் சூடி - துணித்த கொடிகளைச் சூடிக் கொண்டு, செருமிகு மள்ளரின் செம்மாக்கும் செவ்வி - மறம் மிகுந்த போர்வீரரைப்போல இறுமாந்திருக்குங் காலம், திருநுதற்கு யாம் செய்குறி - அழகிய நுதலையுடையாளுக்கு நாம் மீளுங்காலத்திற்குச் செய்தகுறி; (ஆதலான் நீ விரைந்து தேர் பண்ணுவாய்)—எ-று.

சேண் ஆகாயம் என்பதை, "மால்வரை நிவந்த சேணுயர் வெற்பின்" (முருகு. ௧௨) என்பதனானுமறிக. "கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த புலியஞ் சிதணம்" (குறிஞ்சி. ௪௦), "சேணிடை யோங்கித்தோன்று முயர்வரை வான்றோய் வெற்பன்" (அகம். ௪௨) என்புழியும் சேண் அப்பொருட்டு. 'கார்ச் சேணிகந்த கரைமருங்கினீர்' என்றது மிக உயர்ந்த மலையின் அடியிலுள்ள ஏரி அல்லது பொய்கையைக் குறித்தது. அது மலையையே கரையாக உடையது. மலையின் உச்சியில் கார்

தங்குதலியல்பாயினமையின் ‘ கார்ச்சேணிகந்த கரை ’ என்ருன். “சேண்மழை தவழுஞ் சென்னி - விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே ” (குறுந். ௧௪௪) என்பதனுனுமறிக. “ அரிப்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி ” (குறுந். ௯௧), “ நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து ” (புறம். ௭௬) என்புழிப்போலப் ‘ பவர் ’ கொடி என்னும் பொருட்டாய் வந்தது. இன் உவமப்பொருவு. போர்வீரர் வெட்சி, உழிஞை முதலாய மாலைகளைத் தங்கள் செயலுக்கேற்றவாறு சூடுதல் இயல்பு. ஈண்டு உவமை மெய்யொடு தொழில் மேலுஞ் சென்றது. “ துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை - யரிமல ராம்பன் மேய்ந்த நெறிமருப் - பீர்ந்தணருமைச் சுவல்படு முதுபோத்து......குரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்-போர்ச்செறி மள்ளரிற் புகுதும் ” (அகம். ௯௧௫), “ கழுநீர் மேய்ந்த கருந்தா ளெருமை - பழனத் தாமரைப் பனிமலர் முனைஇத் - தண்டுசேர் மள்ளரி னியலி ” (நற். ௨௬௦), “ மள்ள ரன்ன தடங்கோட் டெருமை - மகளி ரன்ன துணையொடு வதியும்” (ஐங்குறு. ௯௪) என்ருர் பிறரும். நீரில் வீழ்ந்து சேற்றை உழக்குவது எருமைகளினது இயல்பென்பதைப் “ பாசடை மறைத்தெழு முளரியங் கயத்துட் - காரா னினங்கள் சேடெறிந் துழக்கும் ” (கல். ௯௪) என்பதனுனறிக. “ செங்கட் கருங்கோட் டெருமை சிறுகனையா, லங்கட் கழனிப் பழனம்பாய்ந் - தங்கட், குவளையம் பூவொடு செங்கயன்மீன் சூடித், தவளையமேற் கொண்டு வரும்.” (திணை மா. நூற். ௧௪௭) என்ருர் பிறரும். (௯௧)

வினைமுற்றிமீளுந் தலைமகன் கடுகிச் செல்லும் முகிலைக் கண்டு அது தமியாளிடந்து முந்துற்று வருத்து மென்றஞ்சி அதன்முன்னர் விரையத் தேரைக் கடாவுகவென்று பாகற்குச் சொல்லியது.

௯௨. கடாஅவுக பாகதேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற்

படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு.

உரை :—கெடாப்புகழ் வேட்கைச்செல்வர் மனம் போல்—அழிதலில்லாத புகழை விரும்புகின்ற செல்வர் மனம்போல, படா மகிழ்வண்டு - படுதலில்லாத மகிழ்ச்சியையுடைய வண்டு, கானம் - காட்டின்கண், பிடாப் பெருந்தகை - பிடவமாகிய பெருந்தகையாளனிடத்து, நன்கு பாண்முரலும் - நன்றாய் இசைப்பாட்டை ஒலியாநிற்கும் ; பாக - பாகனே, கார் ஓடக் கண்டு - மேகம் ஓடுதலைக்கண்டு, தேர் கடாவுக - தேரை விரையச் செலுத்துவாயாக—எ-று.

கார் கடுகிய செலவினையுடைமையின் 'ஓட' என்முன். "கொடுஞ் செலவெழிலி" (முல்லை. ௫), "நின்னே யுள்ளி வந்தனெ னன்னுத லரிவை காரினும் விரைந்தே" (ஐங்குறு. ௪௬௨) என்றூர் பிறரும். படாமகிழ்ச்சி குறைதலில்லாத மகிழ்ச்சி. புகழ்வேட்கையார் மனம் எஞ்ஞான்றும் நிறைந்த மகிழ்ச்சியுடைமையின் அது படா மகிழ்வண்டுக்கு உவமிக்கப் பட்டது. பிடவம் ஒரு செடி. பெருந்தகையினர் கேட்டுவக்க மக்கள் பாடுதல்போல் தேன்கொளத் திரியும் வண்டுகள் கானத்தின் கண்ணுள்ள மலர்ந்த பிடவமாகிய பெருந்தகையாளனிடத்துப் பாடின என்று புனைந்துரைக்கப்பட்டது. ஏழாமுருபு தொக்கு நின்றது. நன்கு என்றது வலித்தது, "நற்கறிந்தனையாயின்" (அகம். ௨௪௪), "நற்கறிந்தோமாயினும்" (பரிபா. ௪) என்பவைபோல.

வண்டு பெருந்தகை நற்குப் பாண்முரலும்; கார் ஓடக் கண்டே கடாவுக என இயையும்.

கிடைத்த பிரதிகளிலெல்லாம் 'காலோடக் கண்டே' என்றிருப்பினும் அது பொருள் பயவாமையால், திருக்கோவையாரில் 'முகிலொடுகூறல்' என்னுந்துறைக்குக் 'காரோட்டங் கண்ட பாகன் அதனோடு விளையத் தேரோட்டாநிற்பான்' (கோவை. ௩௨௧) என்று பேராசிரியர் கூறிய உரையைக்

கொண்டு, 'காரோடக்கண்டே' என அப்பாடம் திருத்தப் பட்டது. எட்டில் ரகரம் லகரமாய்த் திரிந்திருத்தலியல்பு. (௬௨)

வினைமுற்றி மீளுந் தலைமகன் முன் தலைமகளுக்குத்தான் மீளுங் காலத்தைக் குறிப்பதற்காகச் செய்தகுறி வந்ததெனத் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

௬௩. **கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி**
குடமலை யாகத்துக் கொள்ளப் பிறக்கும்
இடமென வாங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி யெவ்வங் கெட.

உரை :—கடல் நீர் முகந்த கமம் சூல் எழிலி - கடலினது நீரை முகந்ததனாலுண்டாகிய நிறைந்த சூலினையுடைய மேகம், குடமலை ஆகத்துக் கொள்ள - குடகமலையினது நடு இடத்தைக் கவிந்துகொள்ள, இடம் பிறக்கும் என - யாம் மீள வழி உண்டாகுமென, பேதை மடமொழி எவ்வம் கெட - பேதையாகிய மடமொழியினையுடைய எம் தலைவியினது வருத்தம் அழிய, ஆங்கே குறி செய்தேம் - அப்பொழுதே குறிப்பிட்டோம்; (ஆதலால் தேரை விரைந்து கடாவுக) —எ - று

ஈண்டுச் சூல் என்றது நீரை. சூல் போறலின் சூலெனப் பட்டது. "கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை" (முருகு. ௭) என்புழியும் அது. குடமலை தலைமகன் நாட்டிற்கு மேற்கே யுள்ள மலையெனினுமமையும். இடம் என்றது ஈண்டு வழி, "விரும்புநாஞ் செல்லு மிடம்" (திணை மொ. ஐம். ௧௬) என்புழிப்போல. மடமொழி அன்மொழித்தொகை.

எழிலிகொள்ள இடம் பிறக்குமென எவ்வங்கெடக் குறி செய்தேம் எனக்கூட்டி முடிக்க. (௬௩)

குறித்த பருவம் வந்தும் தலைமகன் வாராமையால் தோழி தனது ஆற்றுமை தோன்றக் கூறியது.

௬௪. **விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்**
பெருவிறல் வானம் பெருவரை சேரும்

கருவணி காலங் குறித்தார் திருவணிந்த
ஒண்ணுதல் மாதர் திறத்து.

உரை :—பெருவிறல் வானம் விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகி-மிக்க பெருமையையுடைய மேகம் விரியும் அலையையுடைய கடல்நீரை வெறுக்கும் வண்ணம் நிறைய உண்டு, பெருவரை சேரும் கரு அணி காலம்-பெரிய மலையை அடையாநின்ற கருக்கொள்ளுங் காலத்தை, திரு அணிந்த ஒள்நுதல் மாதர் திறத்துக் குறித்தார் - சீதேவி என்னுந் தலைக்கோலத்தையணிந்த ஒளி பொருந்திய நுதலையுடைய காதலியின் பொருட்டுத் தலைவர் தாம் மீளுங் காலமாகக் குறிப்பிட்டார்—எ-று.

கண்ணோட்டமின்றி உலகத்தார்க்கு நடுநின்று பொழிந்து கைம்மாறு கருதாது நன்மையைச் செய்தலால் 'பெருவிறல் வானம்' என்றும், கமஞ்சூல் மாமழை தோன்றுவது கார்காலமாயினமையின் 'கருவணிகாலம்' என்றுங் கூறினாள். திரு - தெய்வவுத்தியென்னும் ஓர் அணிகலன். "திருத்தெய்வவுத்தி" (திவா. தொ. எ) என்றார் திவாகரர். "உத்திபொறித்த புனைபூண் பருமத்து" (கலி. கூஎ), "தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்து" (முருகு. உங) என்புழியும் அது. (௩௪)

பருவங் கண்டழிந்த தலைமகளது துன்பத்தைக் கண்ட தோழி தனது ஆற்றாமையை வானின்மேல் வைத்துக் கூறியது.

௩௫. சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோ டிடும்பை பலகூர
வென்றி முரசி னிரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு.

உரை :—சென்ற நம் காதலர் சேண் இகந்தார் என்று எண்ணி - வினைவயிற் பிரிந்த நம் தலைவர் சேய் நிலத்தைக் கடந்து சென்றாரென்று நினைத்து, ஒன்றிய நோயோடு .

பொருந்திய பசப்புநோயுடனே, இடும்பை பல கூர - துன்பங்கள்பலவற்றால் மிக வருந்தவே, இவட்கு - இவள் பொருட்டு, எழில் வானம் - எழுச்சியையுடைய முகில், வென்றி முரசின் இரங்கி - வெற்றியையறிவிக்கும் முரசினது ஒலியைப்போல இடித்து, நின்றும் இரங்கும் - சலியாது நெகிழ்ந்துருகாநிற்கும் —எ-று.

இன் உவமப்பொருவு. உவமம் தொழில்பற்றி வந்தது, "இன்னிசை முரசினிரங்கிப் போயின்றான் மழையே" (அகம். ௯௧௧) என்பதுபோல. எழிலென்றது மேகத்தினெழுக்கத்தை. நின்றிரங்கல் சலியாது பெய்தல். 'நின்றும்' என்பதற்கு 'ஆகாயத்தினிடத்திருந்தும்' என்று உரைப்பினுமமையும்.

'சென்று' என்பதும் பாடம். (௯௫)

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுற்றி மீளும் வழியில் தன்காதலியுடன் தான் அயரவிருக்கும் விருந்தினை நினைந்து பாகற்குச் சொல்லியது.

௯௬. சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன—சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு.

உரை :—ஈர்ந்தண் தளவம் - குளிர்ச்சி மிக்க செம்முல்லைப் பூக்களெல்லாம், சிரல்வாய் வனப்பின ஆகி - சிச்சிலிக் குருவியின் வாயினது அழகினையுடையவாகி, நிரல் ஒப்பத் தகைந்தன - வரிசையாயிருக்க மலர்ந்தன ; (ஆதலால் இப்பொழுது) -சீர்த்தக்க - சிறந்த, செல்வமழை மதர்க்கண் சில்மொழிப் பேதை ஊர் - வளப்பமான மழைபோலக் குளிர்ந்த மதர்த்த கண்களையும் சிலவாகிய மொழியினையுமுடைய பேதையாகிய காதலியூர், நமக்கு நல்விருந்து ஆக - நமக்கு நல்ல விருந்தயரும் இடமாகக்கடவது—எ-று.

சிரல் மீன்குத்திக்குருவி. செம்மைநிறம்பற்றி உவமஞ் செல்லவே இஃது உருவுமமாயிற்று. "படுமழை பொழிந்த பாறை மருங்கிற் சிரல்வா யுள்ள தளவின்" (நற். ௬௧), "பனி வளர்தளவின் சிரல்வாய்ச் செம்முகை" (ஐங்குறு. ௪௪௭) என்றார் பிறரும். விருந்து - ஆகுபெயர். வேந்தனருந்தொழில் முற்றிய பின்னர்த் தலைமகன் மீண்டுவந்து விருந்தயரும் வழக்கத்தைப், "பெருஞ்சின வேந்த னருந்தொழி றணியின் விருந்துநனி பெறுதலு முரியண் மாதோ" (ஐங்குறு. ௪௪௨), "மாலை நனிவிருந் தயர்மார் தேர்வரு மென்னும்" (குறுந். ௧௫௫) என்று பிறர் கூறியவாற்றானு மறிக. "வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து - மாலை யயர்கம் விருந்து." (குறள். ௧௨௬௮) என்றார் தெய்வப்புலவரும்.

'மதக்கட் சின்மொழி' என்பதும் பாடம். (௬௬)

பருவம் வந்தது கண்டும் தாம் வருதலைத் தவிர்ந்தார் என்று வேறுபட்ட தலைமகளைத் தோழி 'அருந்தொழில்வாய்த்தவர் சிறந்த தலைவர் ஆயினமையின் அவர் இவ்வினியகாலத்தும் வாராதிருப்பரோ' எனக்கூறி ஆற்றுவித்தது.

௬௭. கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்
பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்
அருந்தொழில் வாய்த்த நமர்.

உரை :—கருங்கடல் மேய்ந்த கமஞ்சூல் எழிலி - கரிய கடலின் நீரையுண்டதனாலாகிய நிறைந்த சூலினையுடைய முகில், இருங்கல் இறுவரை ஏறி உயிர்க்கும் பெரும்பதக் காலையும் - பெரிய பாறைக் கற்களையுடைய பக்கமலையின்மேற் சென்று ஒலிக்கும் மிகச்செவ்விய காலத்தும், வேந்தன் அருந்தொழில் வாய்த்த நமர் - அரசனது அருமையாகிய போர்த்தொழில் வாய்க்கப்பெற்ற நம்தலைவர், வாரார்கொல் - வாராமலிருப்பரோ—எ-று.

கடற்கரையினின்று நேர்முகமாக ஆகாயத்தை நோக்குங்கால் அங்குள்ள முகில் கடல்மேற் படிந்திருப்பதுபோற் காண்கின்றமையின், அஃது அங்ஙனமிருத்தல் அந்நீரைப்பருகவென்று முன்னோர் கருதினாராதலால், 'கருங்கடல்மேய்ந்த' என்றாள். "வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்ற" (குறிஞ்சி. ௧00), "வள்ளுயிர்த் தண்ணுமைபோல" (நற். ௲௧0), "வள்ளுயிர்ப் பேரியாழ்" (மலைபடு. ௲எ) என்புழிப் போல ஈண்டு 'உயிர்க்கும்' என்பது ஒலிக்கும் என்னும் பொருளைத்தந்தது. உம்மை சிறப்பு. கொல் - ஐயம். வீரன் தன்னுயிர் போக்கி மன்னுயிர் காக்கும் பெருமைத்தாயினமையின் போரை 'அருந்தொழில்' என்றாள். (௲எ)

குறித்த பருவத்தே தலைமகன் வாராமையான் நிலையழிந்த கிழத்தியைத் தோழி 'இவ்வினிய பருவத்தும் அவர் வாராமையாற் பொய்த்தனர்; ஆதலான் அவருக்காக நீ வருந்துவதெவன்' எனக்கூறி ஆற்றுவித்தது.

௲அ. புகர்முகம் பூழிப் புரள வுயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ டியைந்தாடுந்
தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை.

உரை:—உயர் நிலைய வெம் சினம் வேழம் - உயர்ந்த நிலையினையுடையனவாகிய கொடிய கோபத்தையுடைய ஆண் யானைகள், புகர்முகம் பூழிப் புரள - புள்ளியினையுடைய முகம் புழுதியிற் புரளும்வகை, பிடியோடு இயைந்து ஆடும் தண்பதக் காலையும்* வாரார் - பெண்யானைகளுடன்கூடி விளையாடும் குளிர்ந்த செவ்வியகாலத்தும் நம்தலைவர் வரவில்லை; (ஆதலான்) ஒள்தொடி - ஒளிபொருந்திய வளையணிந்தவளே, ஊடு நிலை எவன் கொல் - அவருக்காக நீ பிணங்கும் நிலை எதற்கு—எ-று.

வேழம் மிக்க வலியையும் கூரிய அறிவையும் உயர்ந்த தோற்றத்தையும் உடைமையின் உயர்நிலையவென்றும், தீங்கு செய்தார்க்கும் மதவெறி யுற்ற காலத்து எல்லார்க்கும் கொடிய தீங்கிழைக்குந் தன்மையை யுடைமையின் வெஞ்சினமென்றுங் கூறினாள். "உயர் நிலைமாக்கற் புகர்முக புதைய‌த்......தாரோடு பொலிந்த வினை நவில் யானை" (மலைபடு. உஉரு), "உயர்ந்த யானை எருத்தம் ஏறிய" (முரு. கரு௮), "மைந்துமலி சினத்த களிறு" (மலைபடு. உசுO) என்றார் பிறரும். கார்காலத்தில் யானை பிடியோடியைந்தாடுதல் இயல்பென்பதைக் "கையுடைநன்மாப் பிடியொடு பொருந்தி, யமையணி மருங்கின் மலையகஞ்சேரவு, மாலை வந்தன்று மாரி மாமழை" (குறுந். ருகக) என்று பிறர் கூறிய வாற்றானுமறிக. உம்மை சிறப்பு. கொல் ஓ அசைநிலை.

'பூழி புரள' 'உயர்நிலை' 'பிடியோடிணை தாழத்' என்பன வேறுபாடம். (ரு௮)

'குறித்த பருவம் வந்தும் தலைமகன் வாராமையாற் பொய்த்தானென்று நம்மூர்க்கண் அலர் பெருகிற்று; ஆதலான் இனி அவரை நீ மறந்து ஆற்றவேண்டும்' என்று தோழி தலைமகட்குக் கூறி ஆற்றுவித்தது.

ருக. அலவன்க ணேய்ப்ப வரும்பீன் றவிழ்ந்த
கருங்குர னொச்சிப் பசுந்தழை சூடி
இரும்புன மேர்க்கடி கொண்டார் பெருங்கெளவை
ஆகின்றா நம்மூ ரவர்க்கு.

உரை :—அலவன் கண் எய்ப்ப அரும்பு ஈன்று அவிழ்ந்த- ஞெண்டினது கண்ணினை யொப்ப அரும்பினையீன்று பின் மலர்ந்த, கருங்குரல் நொச்சிப் பசுந்தழை சூடி - கரிய கொத்தினையுடைய நொச்சியினது பசுமையாகிய தழையைச் சூடி, இரும் புனம் ஏர்க் கடி கொண்டார் - பெரிய புனங்களை உழவர் புதிதாக ஏருழவிக்கத் தொடங்கினார்கள் ; (ஆதலான்) நம் ஊர்

அவர்க்குப் பெருங்கௌவை ஆகின்று - நம் ஊரின்கண் நம் தலைவர்க்குப் பெரிய அலராயிற்று—எ-று.

வண்ணத்தானும் வடிவத்தானும் நொச்சியின் அரும்பு அலவன் கண்ணை ஒத்திருத்தலான் உருவுவமும் மெய்யுவமும் வீரவிவந்தன. "நொச்சி மாவரும் பன்ன கண்ண வெக்கர் ஞெண்டி னிருங்கிளை த தொழுதி" (நற். உகுஎ) என்றார் பிறரும். குரல் ஈண்டுக்கொத்தாதலைக் "குரனொச்சிப் பாடோர்க் குஞ் செவியோடு" (கலி. சகூ), "மணிக்குரனொச்சித் தெரியல் சூடி" (நற். உகூரு) என்பவையானு மறிக. உழவர் கார்காலத் தில் நொச்சித் தழையைச் சூடி ஏருழுவது பண்டை நாளி லிருந்தொரு வழக்கம். கார்காலமாயினமையின் வெப்பம் பெற அதனைச் சூடியிருப்பர் போலும். மழைபெய்த பின்னர் நாள் பார்த்துப் புதிதாய் ஏருழத்தொடங்கினமையின் 'ஏர்க்கடி கொண்டார்' என்றாள். "வெண்கார் பெய்யு நாள்குறித் துழு நரும்" (கல். சக) என்றார் பிறரும். எழாமுருபு தொக்கு நின்றது.

'கருங்கதிர் நொச்சி' 'கவ்வை' என்பன வேறு பாடம். (கூகூ)

'தலைமகன் செய்த குறிகளெல்லாம் வந்தும் அவன் வர வில்லை யென்று நிலையழிந்த தலைவியின் நோயைத் தீர்க்க வானம் கருநிறத்தைக் கொண்டது; (தலைவரும் முகிலொடு வந்தனர்); ஆகலான் அவள் நுதல் இனி ஒளி பெற்று விளங் கும்' என்று தோழி மகிழ்ந்து தனது நெஞ்சிற்குக் கூறியது.

சO. வந்தன செய்குறி வாரா ரவரென்று
நொந்த வொருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன் றெழில்வானம்
நந்துமென் பேதை நுதல்.

உரை —செய்குறி வந்தன - தலைவர் செய்த குறிகள் வந்துவிட்டன, அவர் வாரார் என்று நொந்த ஒருத்திக்கு - அவர்

வருகிலரென்றறிந்து வருந்திய ஒருத்தியாகிய தலைவிக்கு, எழில்வானம் - எழுச்சியையுடைய முகில், நோய் தீர் மருந்தாகி - நோய் தீர்க்கும் மருந்தாகி, இந்தின் கருவண்ணம் கொண்டன்று - ஈந்தின் பழ நிறத்தைப் போல் கருநிறத்தைக் கொண்டது ; (ஆதலான்) என் பேதை நுதல் - பேதைக் குண முடைய என் தலைவியின் நுதல், நந்தும் - இனி அழகு பெற்று விளங்கும்—எ - று.

பழைய உரைகாரர் இச்செய்யுளைத் தோழி தலைவிக்குப் பருவங்காட்டி வற்புறுத்தியதாகக் கொண்டு, மென் பேதை என்பதை விளியாக வைத்து முன்னிலையாகப் பொருளுரைத்துச் செல்கின்றார்.

'நந்துமென் பேதை நுதல்' என்றமையால் தலைமகன் தலைமகளை எய்தினனென்பது குறிப்பாகப் பெறப்படும். இந்து ஈந்தென்பதன் குறுக்கல் விகாரம், "முந்நீரை யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ" (திணை மா. நூற். கoச) என் புழிப்போல. ஈந்து ஈச்சமரம். இன் உவமப்பொருவு. "நந்து மிவ ளாய்நுதற் கவினே" (கலி. ௬௧) என்புழிப்போல 'நந்தும்' அப்பொருட்டாயது.

'கனிவண்ணங்' 'கொண்டதெழில்வானம்' என்பன வேறு பாடம்.

செய்குறி வந்தன; வாராரவரென்று நொந்த ஒருத்திக்கு வானம் மருந்தாகி வண்ணங் கொண்டன்று ; நுதல் நந்தும் என வினைமுடிவு செய்க. (சo)

கார்நாற்பது முற்றிற்று.

செய்யுண் முதற்குறிப்பகராதி.

எண்.	பாட்டு.	பக்கம்.	எண.	பாட்டு.	பக்கம்.
௩௯	அலவன்	... ௪௨	௩௫	சென்றநங்	... ௩௮
௧௭	அறைறக்கலிறு	... ௨0	௧௫	திருந்திழாய்	... ௧௮
௪	ஆடுமகளிரின்	... ௫	௬	தொடியிட	... ௭
௫	இகழுநர்	... ௬	௭	நசசியார்க்	... ௮
௨௮	இமிழிசை	... ௩௧	௨௬	நலமிகு	... ௨௯
௨௨	இளையரு	... ௨௫	௧௯	நாஞ்சில்	... ௨௨
௨௪	எல்லாவினை	... ௨௭	௩௮	புகர்முகம்	... ௪௧
௧௩	எந்தெழி	... ௧௫	௧௧	புணர்தரு	... ௧௩
௩௩	கடனீர்	.. ௩௭	௨௯	பொங்கரு	... ௩௨
௩௨	கடாஅவுக	... ௩௨	௧	பொருகடல்	... ௧
௨	கடுங்கதிர்	... ௩	௨௧	பொறிமாண்	... ௨௪
௨௩	கண்டிரண்	.... ௨௬	௮	மண்ணியன்	... ௯
௩௭	கருங்கடன்	... ௪0	௨௭	முருகியம்	... ௩0
௨௫	கருங்கால்	... ௨௮	௧௨	மையெழி	... ௧௪
௧௬	கருஙகுயில்	... ௧௯	௪0	வந்தனை	... ௪௩
௯	கருவினை	... ௧௧	௩	வரிநிறப்	... ௪
௧௮	கல்பயில்	... ௨௧	௩0	வரைமலக	... ௩௩
௩௧	கார்சசே	... ௩௪	௧0	வானேறு	... ௧௨
௩௬	சிரல்வாய்	... ௩௯	௩௪	விரிதிரை	... ௩௭
௧௪	செல்வந்	... ௧௭	௨0	வீறுசால்	... ௨௩

சிறப்புப் பெயரகராதி.

இதுவரையில் வெளிவராத ஒரு சிறந்த பெரிய சரித்திர அகராதி.

இந்நூல் தேவர் முனிவர், அசுரர், இராக்கதர், சக்ரவர்த்திகள், மன்னர்கள், பிரபுக்கள், புலவர்கள் முதலினோர் சரித்திரங்களையும், வேதம் ஆகமம் ஸ்மிருதி புராணம் இதிகாசம் இலக்கிய இலக்கணங்கள், பூகோள சோதிட வைத்திய நூல்கள் ஆகியவற்றின் சம்பந்தமான விஷயங்களையும், சைவ வைஷ்ணவ ஸ்மார்த்த ஜைன பௌத்த நாஸ்திக முதலிய மதங்களின் சொரூபங்கள் கர்த்தர்கள் அவர்கள் சம்பந்தமான விஷயங்களையும், ஸ்தல தீர்த்த மூர்த்தி விருக்ஷங்கள் பர்வதங்கள் நதிகளின் சிறப்புக்களையும் பலர்க்கும் விளங்குமாறு தேன் போலினிக்கும் இனிய செந்தமிழ் நடையில் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் - ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்களெழுதிச் சுலபமாக எடுக்கும்படி அகராதி வரிசை செய்து அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலை மதித்து அநேக பிரபல பி. ஏ., எம். ஏ., பட்டதாரிகளும் தமிழ் வித்துவ சிரோன்மணிகளும் அநேக தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளும் நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வொரு நூலே பலநூல்களைப் படித்ததின் பலனை யளிக்கும்.

இது லோகோபகாரமான பொது நூலாகலின் ஒவ்வொரு புத்தகசாலையிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வித்தியார்த்தியின் வசத்திலும் ஒவ்வொரு பிரசங்கியார் கரத்திலும், உபதேசிப் பாதிரியார்களிடத்திலும் இருக்கவேண்டிய இன்றியமையாத நூல்களிலும் இன்றியமையாததொரு நூலாம். எவ்வகைச் சரித்திரத்தையும் சுலபமாகத் தெரிவிக்கவல்ல விஷயக்கடலாயுள்ளது.

உயர்ந்த கிளேஸ் காலிகோ கட்டடம், டெம்மி 740 பக்கங்கள்கொண்ட பெரிய புத்தகம் விலை ரூபா 3, தபால் சார்ஜ் வேறு.

எமது விலாசம் :—எஸ். துரைசாமி முதலியார்,

19, ஆலந்தூர் சுப்பிரமண்ணியன் தெரு,

சூளை போஸ்ட், மதராஸ்.

ஸங்கீத புத்தகங்கள்.

ஸங்கீத ரத்னாவளி:—400 பக்கங்கள். ஹார்மோனியம், பிடீல், வீணை முதலிய வாத்தியங்களில் கீர்த்தனங்களை வாசிக்கும்படி ஸ்வரப்படுத்தி இருக்கின்றன.—இதில் ஸ்ராவளி, அலங்காரங்கள், கீதங்கள், ஸ்வர ஜதிகள், வர்ணங்கள், சிட்டைதாளங்கள் முதலியவைகளும், தியாகராஜ கீர்த்தனைகள், பட்டணம் சுப்ரமண்ய அய்யர் கீர்த்தனைகள சேர்ந்து அனேக கீர்த்தனைகள் இருக்கின்றன.

விலை ரூ. 3 0 0

ஸங்கீத சித்ராம்பரி:—இதில் ஹிந்துஸ்தானி, பார்ஸி பாட்டுகள், இங்கிலீஷ் நோட்டுகள், தேவாரம் முதலிய சுமார் 100 உருபடிகள் ஸ்வர தாள ஸாஹித்யத்துடன் இருக்கின்றன.

விலை ரூ. 1 0 0

தியாகராஜ கீர்த்தனைகள் ,, ரூ. 1 4 0

தமிழ்:—பக்த விஜயம் அநேக பக்தர்கள் சரித்திரம் அடங்கியது.

விலை ரூ. 3 0 0

எம். ஆதி அண்டு கம்பேனி,
39, சின்னத்தம்பி தெரு, மதராஸ்.

கார் நாற்பது.

இந்நூல் கடைச்சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது மூலம், பதவுரை, விருத்தியுரை, ஆராய்ச்சி முகவுரை முதலியவைகளுடன் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

நூல் கிடைக்கக்கூடிய இடம்:—

ரோமர் டான் அண்டு கம்பேனி,
பாடர்ஸ்ரோட், மவுண்ட்ரோட் போஸ்ட்,
மதராஸ்.